ஆன்மிகம்

பலன்

ஏப்ரல் 16-30,2020

ரூ. 20 (தமிழ்நாடு, புதுச்சேரி)
ரூ. 25 (மற்ற மாநிலங்களில்)

நோய் தீர்க்கும் மந்திரங்கள்

பக்தி ஸ்பெஷல்

தீராத நோய் தீர்க்கும் ஸ்ரீ வைத்யநாதாஷ்டகம்

இந்த துதியை பாராயணம் செய்தால் தீராத நோயெல்லாம் வைத்தீஸ்வரன் திருவருளால் தீரும். ஒவ்வொரு ஸ்லோகத்தையும் பாராயணம் செய்தவுடன் வைத்தீஸ்வரனை நினைத்து ஒரு நமஸ்காரம் செய்தால் அதிக பலன் கிடைக்கும் என்பது சான்றோர்கள் கருத்து.

பரணிகுமார்

ஸ்ரீராமஸௌமித்ரி ஜடாயுவேத
ஷடானனாதித்ய குஜார்ச்சிதாய
ஸ்ரீநீலகண்டாய தயாமயாய
ஸ்ரீவைத்யநாதாய நம: ஸிவாய

ஸ்ரீராமன், லட்சுமணன், ஜடாயு, நான்கு வேதங்கள், ஆறுமுகன், சூரியன் மற்றும் தனது ரோகத்தைப் போக்கிக்கொள்ள விரும்பிய அங்காரகன் போன்றவர்களால் பூஜிக்கப்பட்டவரும், விஷத்தைக் கண்டத்தில் தரித்தவரும், கருணையே வடிவானவருமான ஸ்ரீ வைத்யநாதன் எனும் பரமசிவனை நமஸ்கரிக்கிறேன்.

கங்காப்ரவாஹேந்து ஜடாதராய
த்ரிலோசனாய ஸ்மரகாலஹந்த்ரே
ஸமஸ்த தேவைரபி பூஜிதாய
ஸ்ரீவைத்யநாதாய நம: ஸிவாய

கங்கையின் பிரவாகத்தை சிரசில் தாங்கியவரும், சந்திர மண்டலத்தையும் சிரசில் தரித்தவரும், மூன்று கண்களை உடையவரும், மன்மதனையும் காலனையும் வதம் செய்தவரும், எல்லா தேவர்களாலும் பூஜிக்கப்பட்டவருமான ஸ்ரீ வைத்யநாதன் என்ற பரமசிவனை நமஸ்கரிக்கிறேன்.

பக்தப்ரியாய த்ரிபுராந்தகாய
பினாகினே துஷ்டஹராய நித்யம்
ப்ரத்யக்ஷலீலாய மனுஷ்யலோகே
ஸ்ரீவைத்யநாதாய நம: ஸிவாய

பக்தர்களிடத்தில் அன்பு கொண்டவரும், திரிபுர ஸம்ஹாரம் செய்தவரும், பினாகம் என்ற வில்லை தரித்தவரும், தினமும் துஷ்டர்களை ஸம்ஹாரம் செய்கிறவரும், மனிதர் வாழும் உலகத்தில் எல்லோருக்கும் புலப்படும்படியாகப் பலவித லீலைகளைச் செய்தவருமான ஸ்ரீ வைத்யநாதன் என்ற பரமசிவனை நமஸ்கரிக்கிறேன்.

ப்ரபூதவாதாதி ஸமஸ்தரோக
ப்ரணாஸகர்த்ரே முனிவந்திதாய
ப்ரபாகரேந்த்வக்நிவிலோசனாய
ஸ்ரீவைத்யநாதாய நம: ஸிவாய

பாதம் முதல் தலை வரையிலும் ஏற்படக்கூடிய எந்த ஒரு நோயையும் நாசமாக்குகிறவரும், மகரிஷிகளால் ஆராதிக்கப்பட்டவரும், சூரியன், சந்திரன், அக்னி ஆகிய மூவரையும் முக்கண்களாகக் கொண்டவருமான ஸ்ரீ வைத்யநாதன் எனும் பரமசிவனை நமஸ்கரிக்கிறேன்.

வாக்ஸ்ரோத்ர நேத்ராங்க்ரி விஹீனஜந்தோ:
வாக்ஸ்ரோத்ர நேத்ராங்க்ரி முகப்ரதாய
குஷ்டாதி ஸர்வோன்னதரோ கஹந்த்ரே
ஸ்ரீவைத்யநாதாய நம: ஸிவாய

பேச்சுப் புலன், காது, கண், கால் முதலிய அங்கங்களை இழந்தவருக்கு அவற்றை மீண்டும் கொடுத்து சுகத்தை அளிப்பவரும், குஷ்டம் முதலிய மிகப் பெரியதான ரோகங்களைப் போக்குகின்றவருமான ஸ்ரீவைத்யநாதன் என்ற பரமசிவனை நமஸ்கரிக்கின்றேன்.

வேதாந்த வேத்யாய ஜகன்மயாய
யோகீஸ்வரத்யேய பதாம்புஜாய
த்ரிமூர்த்திரூபாய ஸஹஸ்ரநாம்னே
ஸ்ரீவைத்யநாதாய நம: ஸிவாய

வேதாந்தங்களால் அறியத் தகுந்தவரும், உலகில் உள்ள எல்லா பொருட்களுமாக இருப்பவரும், யோகீஸ்வரர்களால் தியானம் செய்யத்தக்க சரணங்களை உடையவரும், பிரம்ம-விஷ்ணு வடிவாய் விளங்குபவரும், ஆயிரம் நாமங்களை உடையவருமான ஸ்ரீ வைத்யநாதன் எனும் பரமசிவனை நமஸ்கரிக்கின்றேன்.

ஸ்வதீர்த்தம்ருத் பஸ்மப்ருதங்கபாஜாம்
பிஸாசது:க்கார்த்திபயாபஹாய
ஆத்மஸ்வரூபாய ஸ்ரீரபாஜாம்
ஸ்ரீவைத்யநாதாய நம: ஸிவாய

தனது தீர்த்தமாகிய சித்தாம்ருத தீர்த்தத்தில் நீராடுவதாலும், தனது வைத்தீஸ்வரன் கோயிலில் கொடுக்கப்படும் மருந்து உருண்டைகளாலும், தனது விபூதியினாலும், தன் கோயிலில் உள்ள வேப்பமரத்தின் அடியிலுள்ள மண்ணினாலும், தனது குளத்து மண்ணினாலும், பிசாசு, ரோகம் போன்ற துக்கங்களையும் மனக் கவலையையும், பயத்தையும் போக்குகின்றவரும் சரீரத்தை அடைந்தவர்களுக்கு அந்தராத்மாவாய் இருப்பவருமான ஸ்ரீ வைத்யநாதன் என்ற பரமசிவனை நமஸ்கரிக்கின்றேன்.

ஸ்ரீநீலகண்டாய வ்ருஷத்வஜாய
ஸ்ரக்கந்த பஸ்மாத்யபிஸோபிதாய
ஸுபுத்ரதாராதி ஸுபாக்யதாய
ஸ்ரீவைத்யநாதாய நம: ஸிவாய

விஷம் அருந்தியதால் நீலமான கண்டத்தை உடையவரும், ரிஷபத்தை வாகனமாகக் கொண்டவரும், மாலை, சந்தனம், விபூதி ஆகியவற்றால் பிரகாசிக்கின்றவரும், நல்ல மனைவி, நல்ல குழந்தைகள் என்ற நல்ல பாக்கியங்களைக் கொடுக்கின்றவருமான ஸ்ரீவைத்யநாதன் என்ற பரமசிவனை நமஸ்கரிக்கின்றேன்.

வாலாம்பிகேச வைத்யேச
பவரோக ஹரேதிச
ஜபேந் நாமத்ரயந் நித்யம்
மஹாரோக நிவாரணம்

(மேலே சொல்லப்பட்ட எட்டு ஸ்லோகங்களை உளமாறச் சொல்வோருக்கு) வாலாம்பிகைக்கு நாதனானவரும், வைத்தியர்களிலேயே மிகவும் சிறந்தவரும், ஜனன, மரணமென்ற ரோகத்தைப் போக்குகின்றவரும் ஆகிய வைத்யநாதரின் மூன்று நாமாக்களையும் (வாலாம்பிகேச, வைத்யேச, பவரோக ஹரேதிச) தினமும் ஜபிப்பவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கொடிய நோய்கள் விலகும். இந்த அஷ்ட ஸ்லோகம் மகான்களால் தொன்று தொட்டு ஜபிக்கப்பட்டு வருகிறது என்பதே இதன் சிறப்பை விளக்கவல்லது.

ஆன்மிகம் பலன்

தினகரன் குழுமத்திலிருந்து மாதம் இருமுறை வெளியாகும் தெய்வீக இதழ்

மலர் - 9 இதழ் - 7

கல் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட்டிற்காக சென்னை-600 096, பெருங்குடி, நேரு நகர், முதல் பிரதான சாலை, பிளாட் எண்.170, எண்.10, தினகரன் அச்சகத்தில் அச்சிட்டு 229, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை-600 004. என்ற முகவரியிலிருந்து வெளியிடுபவர் மற்றும்

ஆசிரியர்

ஆர்.எம்.ஆர்.ரமேஷ்

பொறுப்பாசிரியர்

கிருஷ்ணா

ஆசிரியர் குழு

ந.பரணிகுமார்

சு.இசக்கிமுத்து

சீஃப் டிசைனர்

பிவி

Printed and published by R.M.R.Ramesh, on behalf of Kal Publications Pvt. Ltd. and printed at Dinakaran Press, Plot No.170, No.10, First Main Road, Nehru Nagar, Perungudi, Chennai-600 096 and published at 229, Kutchery Road, Mylapore, Chennai-600 004.

Editor: R.M.R.Ramesh

RNI Regn. No. TNTAM/2012/53345

வாசகர்கள் தங்கள் ஆலோசனைகள், விமர்சனங்கள், படைப்புகள், புகைப்படங்கள், ஓவியங்கள் அனைத்தையும் அனுப்ப வேண்டிய ஆசிரியர் பிரிவு முகவரி:

ஆன்மிகம் பலன்

229, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி: 044-4220 9191

மின்னஞ்சல்: palanmagazine@gmail.com

விளம்பரங்களுக்கு:

மு.நடேசன்

பொது மேலாளர் (விளம்பரம்)

தொலைபேசி: 4467 6767 Extn 13234.

மின்னஞ்சல்: advts@kungumam.co.in

வணக்கம் நலந்தானே!

பிரார்த்தனையோடு கூடிய தனிமை

நம் வாழ்க்கையில் பல விஷயங்கள் நம்மை மீறி நடந்து கொண்டிருக்கும். ஆசைப்பட்டது கிடைக்காது, எது வேண்டாததோ அது தேடி வரும். சிலசமயம் நம்மை அது பக்குவப்படுத்துவதற்காக கூட இருக்கும். பல விஷயங்கள் நடந்து முடிந்த பிறகுதான் நமக்கு ஏன் இது ஏற்பட்டது என்றே தெரியவரும். அதுபோலத்தான் இப்போது உலகம் இந்த கொரோனா எனும் நோய்த்தொற்றில் சிக்கித் தவிக்கின்றது. இது தரும் பாடம் என்னவென்பதை நாம் காலம் கழித்துத்தான் அறிந்து கொள்ள முடியும். இவையெல்லாம் ஒருபுறம் இருக்க நோய் வந்தவர், வராதவர் என்று இது தரும் உடல், மன அவஸ்தைகளிலிருந்தும் நாம் வெளியேற அல்லது இவையெல்லாம் ஒரு முடிவுக்கு வர நாம் பிரார்த்தனை எனும் மருந்தை வழிபாடு எனும் கிரியையோடு சேர்த்துச் செய்ய வேண்டும். லோகா சமஸ்தா சுகினோ பவந்து என்பார்கள். சகல ஜனங்களும் ஆயுள் ஆரோக்கியத்தோடு வாழ வேண்டும் என்று பிரார்த்தனை மட்டுமே இப்போது நமக்கு வேண்டும். நம் முன்னோர்கள் தன்னலத்தோடு சேர்ந்த பொதுநலத்தையும் வைத்தார்கள். நலம் என்பது தன்னிலிருந்து தொடங்கி சமூகம் முழுமைக்கும் பரவ வேண்டுமென எண்ணினார்கள். அதனால் நம்மால் செய்யத்தக்கது ஆழ்ந்த மனஒருமையோடு செய்யப்படும் பிரார்த்தனை மட்டுமே ஆகும்.

நம் புத்திக்கு அப்பாற்பட்ட செயல்கள் உலகளவில் நிகழும்போது தனி மனித எத்தனங்கள் அனைத்தும் கேள்விக்குறியாகி ஸ்தம்பித்து விடுகின்றன. நான் யார் தெரியுமா? என்று ஆடிய ஆட்டங்கள் அனைத்தும் பயத்தில் உறைந்து கிடப்பதை பார்க்கின்றோம். உலகமே தனிமையில் இருங்கள் என்கிறது. இதை நாம் தனிமை தவமாக மாற்றிக்கொண்டு அமைதியாக இருக்க முயற்சிக்க வேண்டும். நீங்கள் எத்தனை முறை விதம்விதமாக யோசித்தாலும் சில சமயம் இது போன்ற பேரழிவை ஏற்படுத்தும் விஷயங்கள் நிகழும்போது சட்டென்று விடை கிடைக்கப் போவதில்லை. நம்மால் ஆவது ஒன்றுமில்லை என்று நாம் தெளிவாக இருப்பின் அமைதியாக உட்கார்ந்து பிரார்த்திப்போம். நம்மால் இயன்ற ஏதேனும் சமூக சேவைகளை ஜாக்கிரதையாக செய்வோம்.

கிருஷ்ணா
(பொறுப்பாசிரியர்)

காசி என்றாலே நமக்கு விஸ்வநாதரும், அன்ன பூரணியும்தான் முதலில் நினைவுக்கு வருவார்கள். ஆதிசங்கரர் அன்னபூரணியை துதித்து அன்னபூர்ணா அஷ்டகம் என்று அருளினார். இதை பாராயணம் செய்தால் நாட்டில் எப்போதும் பஞ்சம் பட்டினி போன்றவை வராது. இந்தச் சமயத்தில் பாராயணம் செய்து பேரருள் பெறுவோம்.

பரணிகுமார்

பஞ்சம், பட்டினி போக்கும்
அன்னபூர்ணாஷ்டகம்

நித்யானந்தகரி வராபயகரி சௌந்தர்ய ரத்னாகரி
நிர்தூதாகில கோரபாவனகரி ப்ரத்யக்ஷ மாஹேஸ்வரி
ப்ராலேயாசல வம்சபாவனகரிகாசீபுரா தீச்வரி
பிக்ஷாந்தேஹி க்ருபாவலம்பனகரி
மாதான்ன பூர்ணேஸ்வரி

பேரின்பமளிப்பவளே! அஞ்சேலென்றருள்பவளே! பேரெழில் பொங்குங் கடலே! தீவினைகள் யாவையும் போக்கியருள் பொழிந்திடும் கண்கண்ட தெய்வத்தாயே! பனிமலையோன் குலந்தனை புனிதமாக்கியவளே! காசிநகர் மேவுந்தாயே!

பிச்சையளித்தெனக்கு நீ பேரருள் புரிவாயே! அன்னபூரணி அன்னையே!

நானாரத்ன விசித்திர பூஷணகரி ஹேமாம்பராடம்பரி
முக்தாஹார விலம்பமான விலசத் வக்ஷோஜ கும்பாந்தரி
காஷ்மீராகருவாசிதாங்கருசிகரி காசீபுரா தீச்வரி
பிக்ஷாந்தேஹி க்ருபாவலம்பனகரி மாதான்னபூர்ணேஸ்வரி

பலவகை அணிகலன்கள் பூண்ட கரத்தாளே! பொன்னாடை தரித்த தாயே! தாய்மை பொங்கும் மார்பில் முத்து மாலை அழகாய் நெளிந்திட மிளிரும் தூயவளே! காஷ்மீர தூப மணம் கமழ்ந்திடத் திகழ்பவளே! காசிநகர் மேவுந்தாயே!

பிச்சையளித்தெனக்கு நீ பேரருள் புரிவாயே! அன்னபூரணி அன்னையே!

யோகானந்தகரி ரிபுக்ஷயகரி தர்மேக நிஷ்டாகரி
சந்த்ரார்காநலபாசமானலஹரி த்ரைலோக்யரக்ஷாகரி
சர்வைஸ்வர்யகரி தபஹ்பலஹரி காசீபுராதீச்வரி
பிக்ஷாந்தேஹி க்ருபாவலம்பனகரி மாதான்னபூர்ணேஸ்வரி

யோக சுகந்தருபவளே! பகைவரைப் பொடிப்பவளே! நன்னெறியில் நிறுத்துந் தாயே! மதி, பரிதி, தீயொளிக்கு ஒப்பாய் ஒளிர்பவளே! மூவுலகும் காக்குந்தேவி! பொருள்வளம் அருள்பவளே! தவப் பயனைத் தருபவளே! காசி நகர் மேவுந்தாயே!

பிச்சையளித்தெனக்கு நீ பேரருள் புரிவாயே !அன்னபூரணி அன்னையே!

கைலாசாச்சல கந்தராலயகரி கௌரி உமா சங்கரி
கௌமாரி நிகமார்த்த கோசரகரி ஓங்கார பீஜாக்ஷரி
மோக்ஷத்வாரகவாடபாடநகரி காசீபுரா தீச்வரி
பிக்ஷாந்தேஹி க்ருபாவலம்பனகரி மாதான்னபூர்ணேஸ்வரி

கயிலாய மலைக்குகையில் அமர்ந்தருள் பொழிந்திடும் கௌரி, உமா, சங்கரி! என்றென்றும் குமரியே!

மறைபொருளுரைப்பவளே! பிரணவத்தின் உண்மையுருவே! மோக்ஷத்து வாயிலை திறக்கும் தயாபரி! காசிநகர் மேவுந்தாயே!

பிச்சையளித்தெனக்கு நீ பேரருள் புரிவாயே !அன்னபூரணி அன்னையே!

த்ருஸ்நாத் த்ருஸ்ய விபூதிவாஹநகரி பிரம்மாண்டபாண்டோதரி
லீலாநாடகசூத்ரகேலநகரி விஞ்ஞானதீபாங்குரி
ஸ்ரீவிச்வேசமன: பிரசாதநகரி காசீபுராதீச்வரி
பிக்ஷாந்தேஹி க்ருபாவலம்னநகரி மாதான்ன பூர்ணேஸ்வரி

மண்ணுலகசுகம் யாவும் மகிழ்ந்தருளும் அன்னையே! பிரமாண்டம் தாங்குந்தாயே! விளையாட்டாய் உலகையே இயக்கிடும் ஈஸ்வரியே !விஞ்ஞான தீபச்சுடரே! மகேசன் மனத்தினை மகிழ்விக்கும் மங்கையே !காசிநகர் மேவுந்தாயே! பிச்சையளித்தெனக்கு நீ பேரருள் புரிவாயே!அன்னபூரணி அன்னையே!

ஆதிக்ஷாந்தசமஸ்த வர்ணநகரி சம் போஸ்த்ரிபாவாகரி
காஷ்மீரா த்ருபுரேச்வரி த்ரினயநீ விஷ் வேச்வரீ சர்வரி
ஸ்வர்கத்வாரக வாடபாடநகரி காசீபுரா தீச்வரி
பிக்ஷாந்தேஹி க்ருபாவலம்பனகரி மாதான்ன பூர்ணேஸ்வரி
அனைத்தெழுத்தும் அருளிய அன்னையே!அரனின் முத்தொழிலுக்கு ஆதாரமே! குங்கும நெற்றியளே! மூவுலக நாயகியே! எங்கும் நிறை முக்கண்ணியே! சுவர்க்கத்தின் வாயிலை திறக்குந் தயாபரியே!காசிநகர் மேவுந்தாயே! பிச்சையளித்தெனக்கு நீ பேரருள் புரிவாயே!அன்னபூரணி அன்னையே!

உர்வீசர்வஜநேச்வரி ஜயகரி மாதா க்ருபாசாகரி
வேணிநீலசமானகுந்தலதரி நித்யான்ன தானேச்வரி
சாக்ஷான்மோக்ஷகரி சதா சுபகரி காசீபுராதீச்வரி
பிக்ஷாந்தேஹி க்ருபாவலம்பனகரி மாதான்னபூர்ணேஸ்வரி

உலகாளும் உத்தமியே! வெற்றிதரும் உமையாளே! தாயன்பு தளும்புங்கடலே! பின்னிய கார்குழலாளே! எந்நேரமும் உணவு அளித்துயிர் காக்குந்தாயே! முக்தியளிப்பவளே! நலந்தரும் நாயகியே! காசிநகர் மேவுந்தாயே! பிச்சையளித்தெனக்கு நீ பேரருள் புரிவாயே! அன்னபூரணி அன்னையே!

தேவி சர்வவிசித்ர ரத்னரசிதா தாக்ஷாயணீ சுந்தரி
வாமாச்வாதுபயோதரா ப்ரியகரி சௌபாக்ய மாஹேச்வரி
பக்தாபீஷ்டகரி சதாசுபகரி காசீபுராதீச்வரி
பிக்ஷாந்தேஹி க்ருபாவலம்பனகரி மாதான்ன பூர்ணேஸ்வரி
அரிய ஆபரணங்கள் அணிந்த என் அன்னையே! தக்ஷன் பெற்ற பேரழகியே! பரமனில் பாதியே! பேரெழில் ஜோதியே! குணக்குன்றே! குலவிளக்கே! அடியார்க்கருள்பவளே! நலந்தரும் நாயகியே! காசிநகர் மேவுந்தாயே! பிச்சையளித்தெனக்கு நீ பேரருள் புரிவாயே! அன்னபூரணி அன்னையே!

சந்த்ரார்காநல கோடிகோடிசத்ருஸீ சந்த்ரான்ஷுபிம்பாதரி
சந்த்ரார்காக்னிசமான குண்டலதரி சந்த்ரார்கவர்ணேஸ்வரி
மாலாபுஸ்தக பாசாங்குசதரி காசீபுராதீச்வரி
பிக்ஷாந்தேஹி க்ருபாவலம்பபனகரி மாதான்னபூர்ணேஸ்வரி
பலகோடி பரிதி, மதி, தீபோல ஒளிர்பவளே! கொவ்வையோ உன்னிதழ்களே? பானுமதி போல மின்னும் குண்டலச் செவியாளே! ஈடிணையற்ற எழிலே! மாலையுடன் புத்தகம், பாசாங்குசமேந்தி காசிநகர் மேவுந்தாயே! பிச்சையளித்தெனக்கு நீ பேரருள்புரிவாயே! அன்னபூரணி அன்னையே!

க்ஷத்ரத்ராணகரி மகாபயகரி மாதா க்ருபாசாகரி
சர்வானந்தகரி சதா சிவகரி விச்வேச்வரி ஸ்ரீதரி
தக்ஷாக்ரந்தகரி நிராமயகரி காசீபுராதீச்வரி
பிக்ஷாந்தேஹி க்ருபாவலம்பனகரி மாதான்ன பூர்ணேஸ்வரி
ஆதரவு அற்றோர்க்கு அடைக்கலம் அளித்திடும் அன்னையே! அன்புக்கடலே!

யாவர்க்குமின்பமீந்து நலங்காக்கும் நாயகியே! வளவாழ்வு அருளுந்தாயே!

தக்ஷன்திமிர் தணித்தவளே! துயர் தீர்க்கும் அருமருந்தே! காசிநகர் மேவுந் தாயே!

பிச்சையளித்தெனக்கு நீ பேரருள் புரிவாயே! அன்னபூரணி அன்னையே!
அன்னபூர்ணே சதாபூர்ணே சங்கரப் பிராணவல்லபே
ஞான வைராக்ய சித்யர்த்தம் பிக்ஷாந்தேஹிச பார்வதி
உணவூட்டும் அன்னையே! உமையே! பேருண்மையே! நஞ்சுண்டான் உள்ளத்துயிரே! பிச்சையாய் ஞானமும், பற்றற்ற மனமும் தா! இமவானின் இனிய மகளே!

மாத சபார்வதிதேவி பிதா தேவோ மகேஸ்வரஹ
பாந்தவா:ஷிவபக்தாஸ்ச ஸ்வதேஷோ புவனத்ரயம்
மலைமகளே எந்தன் அன்னை மகேசனே எந்தன் தந்தை; அரனடியாரே எனக்குற்றார்; மூவுலகும் என் தாய்நாடு.

ராமரும் சாஸ்தாவும் ஒருவரே!

ராமவதாரமும், சாஸ்தா அவதாரமும் ஒன்றே என்பர். இதை "ஹரிஹர சமஷ்டி அம்சம்" என்பர். ராமனும் சாஸ்தாவும் வில்லேந்திப் போரிட்டவர்கள். ராமர் முறித்த சிவதனுசில் சாஸ்தாவின் ஆக்ரோஷ சக்தி ஆவாஹனம் செய்யப்பட்டிருந்தது. அதனால்தான் அதை சாதாரணமானவர்களால் முறிக்க முடியவில்லை. ஏன், அசைக்கக்கூட முடியவில்லை.

ராமர், சாஸ்தா அவதாரங்கள் இரண்டும் ஒன்றே என்பதால் ராமன் அதை லாவகமாக எடுத்தார். வில்லில் இருந்த சக்தியை தனக்குள் ஆகர்ஷணம் செய்து கொண்டார். இதனால் மாபெரும் வீரன் ராவணனைக் கொல்லும் சக்தியை அவர் ஆரம்பத்திலேயே பெற்றுக் கொண்டார். அதனால்தான், சக்தியை இழந்த வில், ராமன் கை பட்டவுடன் தானாகவே ஒடிந்துவிழுந்தது.

மீசையுடன் ராமர்!

மும்பை நகரிலிருந்து சுமார் 150 கி.மீ. தொலைவில் உள்ளது நாசிக். இங்குதான் ராமாயணத் தொடர்புடைய 'பஞ்சவடி' உள்ளது. இங்குள்ள மிகப் பெரிய கோயிலான 'காலாராம் மந்திர்' எனும் 'ராம்ஜி' ஆலயம் உள்ளது. இக்கோயில் மிகப் பழமையானதும், சிறப்பானதும், பிரசித்தி பெற்றதும் ஆகும்.

இவ்வாலயக் கருவறையில் ஒரு கருங்கல் மேடை மீது ராமர், லட்சுமணர், சீதை, அனுமன் ஆகியோரின் சிலைகள் கண்ணாடி போன்ற கருங்கல்லால் உருவாக்கப்பட்டுள்ளன. ராமர் மட்டும் பொன் வண்ணத்தால் ஆன மீசையையும் அதே நிறத்தில் கையுறைகளும் கொண்டு திகழ்கிறார். இரண்டு அடி உயரமே உள்ள இச்சிலைகள் எல்லாம் கருநீல சலவைக் கல்லாலான திருமேனிகள். முகப்பொலிவு, வடிவழகு, நேர்த்தியான அமைப்பு என்று உயிரோட்டம் மிக்கதாகக் காட்சி தருகின்றன. ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கு பெறும் 'ராம நவமி' உற்சவம், இங்கே 13 நாட்கள் விமரிசையாக நடைபெறுகிறது.

சதுர்புஜ ராமர்

திருக்கழுக்குன்றத்திலிருந்து 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது 'பொன்பதர் கூடம்' என்ற அழகிய சிற்றூர். ராமபிரானின் அருள் சுரக்கும் திருத்தலம். கருவறையில் மூலவர் ராமபிரான் பட்டாபிஷேகக் கோலத்தோடு திருக்கரங்கள் நான்கில், மேலிரு கரங்களில் சக்கரமும் சங்கும் ஏந்தி, கீழிரு கரங்களில் அபய வரத முத்திரை காட்டி வீற்றிருக்கிறார். உற்சவர் ராமன், சதுர் புஜங்கொண்டு மேலிரு திருக்கரங்களில் சக்கரம், சங்கு; கீழிரு கரங்களில் அம்பும் வில்லும் ஏந்தி சௌந்தர்ய வதனத்தோடு காட்சி தருகிறார். இப்படி மூலவரும் உற்சவருமான ராமபிரான் சதுர்புஜம் கொண்டு அருளாட்சி புரிவதால், இந்த கிராமத்திற்கே 'சதுர்புஜ ராமம்' என்றும் ஒரு பெயர் உண்டு.

கோள்களினால் ஏற்படும் தீமையை தகர்க்கும்

கோளறு பதிகம்

திருஞானசம்பந்தர் எல்லா காலங்களிலும் கோள்களினால் ஏற்படும் தீமைகளை அகற்றவும் இந்த பதிகத்தை அருளினார். பொதுவாகவே கிரகச் சேர்க்கை சரியில்லாத காலகட்டங்களில் தனிமனிதர்களுக்கு ஏற்படும் பிரச்னைகளை தாண்டி ஒட்டுமொத்த சமூகமே கோள்களின் சேர்க்கையினால் பெருந்துன்பங்களை அனுபவிக்க நேரிடுகின்றது. அப்போதெல்லாம் அனைவரும் கீழேயுள்ள பதிகத்தை பக்தியோடு சொல்லிவர இறையருளால் துன்பங்கள் அகலுகின்றன.

வேயுறு தோளி பங்கன்விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை இவைமார்பிலங்க எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்து என் உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொ டுஆறும் உடனாய நாள்கள்
அவைதாம் அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து உமையோடும் வெள்ளைவிடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்து என் உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி திசை தெய்வமான பலவும்
அறநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து மறைஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்துஎன் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனொடு தூதர் கொடு நோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும் விடை ஏறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்துஎன் உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும் மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

வாள்வரி அதள தாடை வரிகோவணத்தர் மடவாள் தனோடும்உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென் உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானைகேழல் கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை ஒரு பாகமாக விடையேறு செல்வன் அடைவான்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும் வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து மடவாள் தனோடும் உடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர் சூடி வந்தென் உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன் தன்னோடும் இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

பல பல வேடமாகும் பரன் நாரி பாகன் பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர் வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு குணமாய் வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என் உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

தேனமர் பொழில் கொள் ஆலை விளை செந்நெல் துன்னி வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து மறைஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்



முதலை வாயினின்று மீண்ட மதலை

பிழைப்பித்தே கூற்றான் முதலை வாய்ப்பிள்ளை யழைப்பித்தார் பாதம் நினைப்பாம் – ஆறுமுக நாவலர் கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே

- திருப்புக்கொளியூர் அவினாசி பாடல்

காலனையும், முதலையையும் பிள்ளைதரச் சொல் என்று இறைவனிடம் யார் வேண்டுகிறார்? என்ன நிகழ்ந்தது?

திருப்புக்கொளியூர் என்று முற்காலத்தில் போற்றப்பட்ட 'அவிநாசி' என்னும் தலத்தில் கங்காதரன் எனும் பக்தர் வசித்து வந்தார். வெகுநாட்களாகப் பிள்ளையில்லாது வருந்திய கங்காதரனும் அவர் மனைவியும் அத்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் அவினாசிலிங்கேசுவரர், கருணாம்பிகையைத் துதித்து குழந்தைப்பேறு வேண்டி நின்றனர். இறைவன், இறைவி கருணையால்

அவர்கள் வேண்டுதலுக்குப் பலன் கிடைத்தது. அவர்களுக்கு விரைவிலேயே ஒரு அழகான பிள்ளை பிறந்தது. மகிழ்ச்சியுற்ற இருவரும் அவனுக்கு இறைவன் நினைவாக 'அவிநாசிலிங்கம்' என்று பெயரிட்டனர். அவிநாசிலிங்கம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து ஐந்து வயதை எட்டிமனான்.

அவன் வயதை ஒத்த எதிர் வீட்டுச் சிறுவன் ஒரு நாள் அவிநாசிலிங்கத்தை விளையாட அழைக்க இருவரும் ஆவலுடன் வெளியே சென்றனர். விளையாடிக்கொண்டே, எங்கே போகிறோம் என்று அறியாமல் இருவரும் கோயிலுக்கு அருகிலிருந்த பெரிய தாமரைக் குளத்தை அடைந்தனர்.

நீரைக் கண்டால் சிறுவர்கள் சும்மா இருப்பார்களா? இருவரும் குளத்தில் இறங்கி ஒருவர் மேல் ஒருவர் தண்ணீரை வாரி இறைத்து ஆனந்தமாக விளையாடினர். அத்தருணத்தில், அந்தக் குளத்தில் வசித்து வந்த ஒரு பெரிய முதலை அவிநாசிலிங்கத்தின் காலை இறுகப் பற்றிக்கொண்டது. காலை ஏதோ கவ்வுவது போல் உணர்ந்த அவிநாசிலிங்கம் பயந்துவிட்டான். பிறகு அது முதலை என்று அறிந்து, திகைத்து அழுதான்.

உமா பாலசுப்பிரமணியன்

இறைவன் இப்பொழுது இப்படிப்பட்ட நிகழ்வு நேரும்படி ஏன் செய்தான்? இச்சம்பவம் சுந்தரருடைய தமிழ்ப் புலமையையும் அவர் சிவபெருமானிடம் கொண்ட தீராத பக்தியையும், நம்பிக்கையையும், உலகத்திற்கு எடுத்துரைக்கவே நிகழ்ந்ததாகும்.

அவிநாசிலிங்கத்தை முதலை கவ்வியதைக் கண்டு அருகில் விளையாடிக்கொண்டிருந்த நண்பன் அஞ்சி மிரண்டு விட்டான். அவனும் சிறுவன்தானே! என்ன செய்வது என்று புரியாமல் அழுதான். பிற்பாடு சமாளித்துக் கொண்டு தன் நண்பனைக் காப்பாற்ற வேண்டும் என்ற உந்துதலால் ஊருக்குள் சென்று அவிநாசிலிங்கத்தின் பெற்றோரிடம் அழுகையினூடே நடந்த நிகழ்ச்சியைத் தெரிவித்தான். இதைக் கேள்வியுற்ற பெற்றோர், அருகிலிருந்த மற்ற பெரியவர்களையும் அழைத்துக் கொண்டு, பதறித் துடித்தபடி தாமரைக் குளம் வந்தடைந்தனர்.

ஆனால் நீருக்கு வெளியே, சிறுவன் கூறியபடி முதலையும், பையனும் இருந்ததற்கான எந்தச் சுவடும் தெரியவில்லை. எக்கோணத்தில் தேடியும் முதலையையும், பிள்ளையையும் காணவில்லை. அதேசமயம் குளத்தில் இறங்கிப் பார்க்கும் தைரியமும் ஒருவருக்கும் இல்லை. யாவரும் செய்வதறியாது பதைபதைத்து நின்றனர். அவினாசிலிங்கத்தின் பெற்றோர் தம் பிள்ளையை நினைத்து அழுது புலம்பினர்.

"முதலைதான் விழுங்கி இருக்கவேண்டும்! அந்த வேலை முடிந்ததும் அது தன் வழி சென்று விட்டது!"

"பாவம் பெற்றோர்! என்ன பாவம் செய்தார்களோ! கறிவேப்பிலை போன்று இருந்த ஒரே பிள்ளையை முதலை வாய்க்குப் பறிகொடுத்து நிற்கிறார்களே!"

-இதுபோன்று இன்னும் பல விமரிசனங்களைக் காது கொடுத்துக் கேட்க முடியாது மிகவும் வருந்தினர் பெற்றோர். கூடவே அவர்கள் கூறுவதிலும் உண்மை இருக்குமோ என்றும் அஞ்சினர். தாம் இறைவனிடம் இறைஞ்சிப் பெற்ற பிள்ளையை அருமையாக வளர்த்து அநியாயமாக முதலை வாய்க்குக் கொடுத்து விட்டோமே என்று சொல்லிச் சொல்லிப் புலம்பினர்.

ஒருவாறாக கூட வந்த நண்பர்களும் உறவினர்களும் அவர்களைத் தேற்றி வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். காலம் உருண்டோடியது. ஆனால், கவலை மட்டும் விலகவில்லை.

அவிநாசிலிங்கத்தோடு விளையாடிய சிறுவனுக்கு அவனது பெற்றோர் உபநயனம் (பூணூல்) நடத்த வரும்பி, நல்லநாள் குறித்தனர். அந்த முகூர்த்த நாளில், ஒரே தெருவில் ஒரு வீட்டில் உபநயனம், மேள தாளம், மகிழ்ச்சி, ஆரவாரம்!

ஆனால் எதிரே கங்காதரன் வீட்டில் சோகம், அழுகை! தன் மகன் இந்நேரம் இருந்திருந்தால் இந்த வயதில் அவனுக்கும் உபநயனம் நடந்திருக்குமே என்று எண்ணி எண்ணிப் பெற்றோர் புலம்பும் ஓலம்! ஒரே சமயத்தில் ஒரு வீட்டில் மங்கல ஓசை, எதிர் வீட்டில் அமங்கல ஓசை, ஈசன் செயல்தான் என்னே!

சுந்தர மூர்த்தி நாயனார் தலம் தலமாக இறைவனை தரிசித்து, பதிகங்கள் பாடி வந்தபொழுது, திருப்புக்கொளியூருக்கும் விஜயம் செய்தார். அங்குள்ள கோயிலில் குடி கொண்டிருக்கும் இறைவனை தரிசிப்பதற்காக கங்காதரன் வீடிருந்த தெருவழியே அவர் செல்ல நேர்ந்தது. அங்கே அழுகுரலும், ஆனந்தக் குரலும் ஒருசேர ஒலித்தது கேட்டு, ஒரே தெருவில் இரண்டு எதிர் மறையான நிகழ்ச்சிகள் உள்ளனவே! என்னே இறைவன் சித்தம்! இதை விசாரித்து அறிய வேண்டும் என்று எண்ணி அருகிலிருந்தோரை விசாரித்தார் .

ஊராரும், இரண்டு வருடங்களுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சியைத் தெரிவித்தனர்.

உடனே சுந்தரர், "சம்பவம் நிகழ்ந்த தாமரைக் குளம் எங்கே? அவ்விடத்திற்கு என்னை அழைத்துச் செல்லுங்கள்!" என்று கூற, அவிநாசிலிங்கத்தின் பெற்றோர் மற்றும் ஊர் மக்கள் ஒன்று திரண்டு தாமரைக் குளத்திற்குச் சென்றனர்.

குளத்தருகே சுந்தர மூர்த்தி நாயனார் கண்களை மூடிக்கொண்டு, கைகளைக் கூப்பி, சிவபிரானை தியானித்தார். பிறகு, "அவிநாசி அப்பனே! நீ எமனிடம், இக் குளத்தினுள் ஆழ்ந்துவிட்ட குழந்தையைத் தரச் சொல்!" என்ற பொருள்படப் பதிகம் பாட, எங்கோ பதுங்கியிருந்த முதலை தலையைத் தூக்கி எட்டிப் பார்த்தது!

எற்றான் மறக்கேன் எழுமைக்கும்
எம்பெரு மானையே
உற்றாய்என் றுன்னையே உள்குகின்றேன்
உணர்ந் துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி
யூர்அவி னாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதி
யேபர மேட்டியே

- புற்றின்கண் வாழ்கின்றதும், படமெடுத்து ஆடுகின்றதுமான பாம்பை அணிந்தவனே, உயிர்களுக்கெல்லாம் தலைவனே, மேலான இடத்தில் உள்ளவனே, திருப்புக்கொளியூரில் உள்ள அவினாசி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, ஏழு பிறப்பிலும் எமக்குத் தலைவனாய் உள்ள உன்னையே எனக்கு உறவினன் என்று உணர்ந்து, மனத்தால் நினைக்கின்றேன். உன்னையே எனக்குப் பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்வேன். உன்னை எக்காரணத்தால் நான் மறப்பேன்!

இந்த முதல் பாடல் தொடங்கி பத்து பாடல்கள் பாடினார்.

வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய
மாணிநீ ஒழிவ தழகோசொல் லாய்அரு
ளோங்கு சடையானே பொழிலா ருஞ்சோலைப்
புக்கொளி யூரிற் குளத்திடை இழியாக் குளித்த
மாணிஎன் னைக்கிறி செய்ததே

- இது இரண்டாவது பாடல்.

அருள்மிக்க தவக்கோலத்தையுடையவனே, பெருமரப் பொழில்களையும், நிறைந்த இளமரக் காடுகளையும் உடைய திருப்புக்கொளியூரில் உள்ள குளத்தின்கண் இறங்கிக் குளித்த அந்த ணச் சிறுவன் செய்த குற்றம்தான் யாது? உன்னை வணங்கச் செல்பவர்களுடன் வந்து உடன் சேர்ந்த அச்சிறுவன், உன் திருமுன்னே இறந்து போவது உனக்குப் பொருந்துவதோ? நீ சொல்லாய்.

உரைப்பார் உரைஉகந் துள்கவல் லார்தங்கள் உச்சியாய்

அரைக்கா டரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூர்
அவினாசியே கரைக்கால் முதலையைப்
பிள்ளை தரச்சொல்லு காலனையே

- இது நான்காவது பாடல்.

உன்னைப் புகழ்கின்றவர்களது சொல்லை விரும்புபவனே, உன்னை எஞ்ஞான்றும் மறவாது நினைக்க வல்லவர்களுடைய தலைமேல் இருப்பவனே, அரையின்கண் ஆடுகின்ற பாம்பைக் கட்டியுள்ளவனே, எல்லாப் பொருட்கட்கும் முதலும் முடிவுமானவனே, சிறந்த முல்லை நிலத்தையும், சோலைகளையும் உடைய திருப்புக்கொளியூரில் உள்ள அவினாசி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, கூற்றுவனையும் முதலையையும், இக்குளக் கரைக்கண் பிள்ளையைக் கொணர்ந்து தருமாறு ஆணையிட்டருள்!

இவ்வாறு பாடியவுடன் அடியவரின் பாடலுக்கு ஏற்ற வகையில் முதலையும் இரண்டு வருடங்களுக்கு முன் தான் விழுங்கித் தன் வயிற்றில் வைத்திருந்த பிள்ளையை கரைக்கு வந்து உமிழ்ந்தது. என்னே ஆச்சரியம்! அவிநாசிலிங்கம் வெளியுலகத்தில் இருந்தால் இந்த இரண்டு வருடங்களில் எவ்வளவு வளர்ச்சி கண்டிருப்பானோ, அதே வடிவில் வெளிவந்தான்!

இறைவன் மேல் எவ்வளவு நம்பிக்கை பூண்டிருந்தால், இறைவனிடம் ஆணைபோல் கூறியிருப்பார் சுந்தரர்! இறைவனும் அதற்கு செவி சாய்த்திருக்கிறானே! ஒரே பாடலிலேயே இறைவன், குழந்தையைத் திருப்பிக் கொடுத்திருப்பார். ஆனால் இறைவன் அடியவரின் பாடலைக் கேட்பதற்கு இச்சை கொள்பவரல்லவா!

அருணகிரிநாதர் 'ஐங்கரனை' என்று தொடங்கும் திருப்புகழ் பாடலில், "கொங்கில் உயர் பெற்று வளர் தென் கரையில் அப்பர் அருள் கொண்டு உடலுற்ற பொருள் அருள்வாயே!" என்று வேண்டுகிறார் (அப்பர்-இறைவன்).

'சிவபெருமானின் அருள் கொண்டு, குழந்தையை முதலையின் வாயினின்றும் மீட்டுத் தந்ததின் ரகசியப் பொருளை, முருகா, எனக்கு நீ அருள வேண்டும்!' என்கிறார்.

இங்ஙனம் சுந்தர மூர்த்தி நாயனார் பதிகம் பாடி, இரண்டு வருடங்களுக்கு முன் முதலை விழுங்கிய குழந்தையை திரும்பப் பெற்றார் என்றால் அரன் அடியாரின் திறனைப் புகழுவதா, அன்றி தம் அடியார்களின் வேண்டுதலுக்கு மனமிரங்கி உடனே செவி சாய்க்கும் தலைவனாகிய சிவபெருமானின் அருள் தன்மையைப் போற்றுவதா!

இயற்கையைக் காப்போம்... இனிதே வாழ்வோம்!

இயற்கை சக்தி எழிலோவிய
கண்கள் திறந்து மலர்கள் மலர்ந்தது!
மங்கை நேர்மறை எண்ணங்கள் விரிந்து
பசுமை பூமியில் படர்ந்தது!
கொங்கை குன்றாகி நிலக்குழந்தைக்கு
பாலூட்டி நின்று தவம் செய்தது!
செவ்விதழ் தீண்டி செங்கதிர் தோன்றி
உயிர்கள் மண்ணில் உருவானது!

இருள்முடி மேகமாகி இன்முகம் நிலவாகி
மாயகம்பள வானமதில் உறவாடுது!
அருட்புன்னகை முத்து உதிர்ந்து உடைந்து
புள்ளி கோலமாய் ஒளிர்கிறது!
ஆசைதுறந்து உயர்ந்த மலைதேடி அழகு
பொற்பாதம் பட்டு மூலிகை உயிரானது!
இசையூற்று, நடையாறு, நல்மணச் சுனைகள்
அனைத்தும் தோன்றி வரமானது!

உள்ளொளி அருளாகி உயிரினம் பலவாகி
தெய்வமொழி பேசி கலந்து வாழும்!
உணவுக்கு சிறகடிக்கும் பறவைக்கு குரலாகும்
காற்றில் கலந்திடும் கீதம்!
மனிதனுக்கு தோழியாகி, செடியாகி, மரமாகி
பசும்சோலை தாலாட்டும் தென்றல்!
மலைமுகடு காற்றாகி உடல்கூட்டில் மூச்சாகி
வாசியோக பயிற்சியால் வசமாகும் பெண்ணே!

எழில் மலரில் மணமாய் நின்றாடும்
சுவைகனியை வென்றாடும் பனி நிலவில்
கயல் விழிகள் சுழன்றாடி
காலங்கள் பல கடந்தாடும்!
கோலமகள் இயற்கை வடிவானாள்
கோடை, குளிர், பனி பருவமானாள்!
கொள்ளை இன்பமதை
கொண்டாடுவோம்
கொள்ளையர் கைபடாமல் காப்போம்!

இயற்கைக்கு மறுபெயர் அமைதியானது!
இனிமையாய் சுற்றி உலாவுதல்
சுற்றுலாவானது!
இயற்கையை பற்றி ஒழுகுதல்
மனிதரின் கடமை!
இயற்கைக்கு முரணான வாழ்வு
நிரந்தரமல்ல!
இயற்கையை இயற்கை அழிக்கும்,
படைக்கும், உயிர்க்கும்
இறை தத்துவமும் சரியே!
இயற்கையும் சரியே!
நிலமெனும் பெரிய புதையல் பெட்டியில்
வற்றாத கனிமவளம் பெற்று வாழ்வோம்!

– விஷ்ணுதாசன்

துதிப்போம் முருகனை

(அருணகிரிநாதர் அருளியவை)

திருவண்ணாமலை திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே.

பொருள்: வெண்முத்தை நிகர்த்த அழகான பல்வ ரிசையும், இளநகையும் பூண்ட தேவயானை தேவியின் தலைவனே, சக்திவேல் ஆயுதத்தை ஏந்தும் சரவணபவக் கடவுளே!

‘மோக்ஷ வீட்டுக்கு ஒப்பற்ற ஒரு விதையாக விளங்கும் ஞான குருவே’ என்று துதிக்கும் முக்கண்ணர் பரமசிவனார்க்கு வேதங்களுக்கு முதன்மையான ஓம் என்னும் மந்திரத்தை உபதேசித்து, பிரம்மா, திருமால் ஆகிய இருவரும், முப்பத்து முக்கோடி தேவர்களும் அடிபணிய நின்றவனே, ராவணனுடைய பத்துத் தலைகளும் சிதறி விழுமாறு அம்பை விடுத்த, ஒப்பற்ற மந்தர மலையான மத்தைக்கொண்டு பாற்கடலைக் கடைந்து, ஒரு பகற் பொழுதை வட்டமான சக்ராயுதத்தால் இரவு ஆக்கி, நண்பனாகிய அர்ச்சுனனுக்கு தேர்ப்பாகனாக வந்து தேரினைச் செலுத்திய பசுமையான நீலமேகவண்ணன் திருமால் பாராட்டும் பரம் பொருளே!

பரிவோடு என்னைக் காத்தருளும் நாள் ஒன்றும் உண்டோ? தித்தித்தெய என்ற தாளத்துக்கு ஒத்து, சிலம்புகள் அணிந்த நாட்டியப் பாதங்களை வைத்து காளிதேவி திசைகளில் எல்லாம் சுழன்று தாண்டவம் செய்யவும், கழுகுகளோடு பேய்கள் சேர்ந்து ஆடவும், எட்டுத் திக்குகளிலும் உலகங்களைத் தாங்குகின்ற அஷ்ட பைரவர்கள் இந்த அழகிய கூத்துக்கு ஏற்ப ‘தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு த்ரிகடக’என்ற தாள ஓசையைக் கூறவும், கூட்டமாகப் பற்பல பறை வாத்தியங்களை அதே தாளத்தில் முழக்கவும், போர்க்களத்தில் கிழக் கோட்டான்கள் ‘குக்குக் குகு குக்குக் குகுகுகு’ என்ற ஓசையோடு ‘குத்திப் புதை, புகுந்து பிடி’ என்றெல்லாம் குழறி வட்டமாகச் சுழன்று மேலே எழவும், சினேக எண்ணம் தவிர்த்து விரோத மனப்பான்மையே கொண்ட அசுரர்களை கொன்று பலி கொடுத்து, அசுரர் குல மலை கிரௌஞ்சகிரி தூளாக, தர்ம மார்க்கத்துக்குப் பொருந்த, போர் செய்யவல்ல பெருமாளே!

திருப்பரங்குன்றம் திருப்புகழ்

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப்ப யின்று
கடையில்வந்து தித்துக்கு ழந்தை வடிவாகிக்
கழுவியங்கெ டுத்துச்சு ரந்த
முலையருந்து விக்கக்கி டந்து
கதறியங்கை கொட்டித்த வழ்ந்து நடமாடி
அரைவடங்கள் கட்டிச்ச தங்கை
இடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
அவையணிந்து முற்றிக்கி ளர்ந்து வயதேறி
அரியபெண்கள் நட்பைப்பு ணர்ந்து
பிணியுழன்று சுற்றித்தி ரிந்த
தமையுமுன்க்ரு பைச்சித்தம் என்று பெறுவேனோ
இரவிஇந்த்ரன் வெற்றிக்கு ரங்கி
னரசரென்றும் ஒப்பற்ற உந்தி
யிறைவன்எண்கி னக்கர்த்த னென்றும் நெடு
நீலன்
எரியதென்றும் ருத்ரற்சி றந்த
அநுமனென்றும் ஒப்பற்ற அண்டர்
எவரும்இந்த வர்க்கத்தில் வந்து புனமேவ
அரியதன்ப டைக்கர்த்த ரென்று
அசுரர்தங்கி ளைக்கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே
அயனையும்பு டைத்துச்சி னந்து
உலகமும்ப டைத்துப்ப ரிந்து
அருள்பரங்கி ரிக்குட்சி றந்த பெருமாளே.

பொருள்: கருவிலே சேர்ந்து பத்து மாதங்கள் தாயின் வயிற்றில் இருந்து கரு முற்றிப் பக்குவம் அடைந்து கடைசியில் பூமியில் வந்து பிறந்து குழந்தையின் வடிவத்தில் தோன்றி குழந்தையை அங்கு கழுவியெடுத்து சுரக்கும் முலைப்பாலை ஊட்டுவிக்க தரையிலே கிடந்தும், அழுதும், உள்ளங்கையைக் கொட்டியும், தவழ்ந்தும், நடை பழகியும், அரைஞாண் கட்டியும், காலில் சதங்கையும், காதில் இட்ட அணியும், பொன் கொலுசு, தண்டை ஆகியன அணிந்தும், முதிர்ந்து வளர்ந்து வயது ஏறி அருமையான பெண்களின் நட்பைப் பூண்டு, நோய்வாய்ப்பட்டு அலைந்து திரிந்தது போதும். (இனிமேல்) உனது அருள் கடாட்சத்தை எப்போது பெறுவேனோ? சூரியன் (அவன் அம்சமாக சுக்ரிவன்), இந்திரன் (அவன் அம்சமாக வாலி) வெற்றி வானர அரசர்களாகவும், ஒப்பில்லா திருமால் வயிற்றிலே பிறந்த பிரமன கரடி இனத் தலைவன் (ஜாம்பவான்) ஆகவும், நெடிய நீலன் அக்கினியின் கூறாகவும், ருத்திர

அம்சம் அநுமன் என்றும், ஒப்பில்லாத தேவர்கள் யாவரும் இன்னின்ன வகைக ளிலே வந்து இப் பூமியில் சேர்ந்திட, (இவர் களே) தன் அரிய படைக்குத் தலைவர் எனத் தேர்ந்து, அசுரர்களின் சுற்றமென்னும் கூட்டத்தை வெற்றி கொண்ட ஹரிமுகுந்த னாம் ஸ்ரீராமனின் புகழும் குணம் வாய்ந்த மருமகனே, பிரம்மாவையும் தண்டித்து, கோபித்து, (பிரம்மனைச் சிறையிட்ட பின்) உலகத்தையும் படைத்து, அன்புடன் அருள் பாலிக்கும் திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக் கும் பெருமாளே!

திருவாவினன்குடி திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் ...... பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

பொருள்: பிறர்க்குச் செய்த தீமைகளினால் நிந்தனைக்கு ஆளாகி அலையாமலும் நன்னெறியை அறியாத வஞ்சகர்களிடம் சேராமலும், நீ எனக்கருளிய உபதேச மந்தி ரத்தின் பொருளையே துணையாகக் கொண்டு உன்னையே நான் நினைந்து உன் திருவருளைப் பெற மாட்டேனோ? யானையின் சிறந்த முகத்தை உடைய வினாயகன் தனக்குத் தம்பியானவனே இமயராஜன் மகளாம் (பார்வதி என்னும்) உத்த மியின் பிள்ளையே ஜெபம் செய்யக்கூடிய மாலையை எனக்களித்த நல்ல குருநாதனே. திருவாவினன்குடி என்னும் பதிக்குப் பெருமாளே!

சுவாமிமலை திருப்புகழ்

சேலுமயி லுந்த ரித்த வாளையட ருங்க டைக் கண்
மாதரைவ சம்ப டைத்த வசமாகிச்
சீலமறை யும்ப ணத்தி லாசையிலை யென்ற வத்தை
காலமுமு டன்கி டக்கு மவர்போலே
காலுமயி ரும்பி டித்து மேவுசிலு கும்பி ணக்கு
நாளுமிக நின்ற லைத்த விதமாய
காமகல கம்பி ணித்த தோதகமெ னுந்து வக்கி
லேயடிமை யுங்க லக்க முறலாமோ
ஏலமில வங்க வர்க்க நாகம்வகு ளம்ப டப்பை
பூகமரு தந்த ழைத்த கரவீரம்
யாவுமலை கொண்டு கைத்த காவிரிபு றம்பு சுற்றும்
ஏரகம மர்ந்த பச்சை ...... மயில்வீரா
சோலைமடல் கொண்டு சக்ர மால்வரைய ரிந்த வஜ்ர
பாணியர்தொ ழுந்தி ருக்கை வடிவேலா
சூர்முதிர்க்ர வுஞ்ச வெற்பும் வேலைநில மும்ப கைத்த
சூரனுட லுந்து ணித்த பெருமாளே.

பொருள்: சேல் மீன், வேல் இவை போன்றதும், வாளாயுதத்தைப்போல் தாக்கி வருத்த வல்லது மான கடைக்கண்களை உடைய விலைமாதர்களு டைய வசத்தில்பட்ட ஆளாகி, நல்ல ஒழுக்கத்தை மறைக்கும் பொருளின்மேல் ஆசை இல்லை என்று சொல்லி, நித்திரை செய்யும்போதும் கூடப் படுத்துக் கிடக்கும் அன்புடையவர்போல் நடித்து, கால்களையும் (பின்னர்) மயிரையும் பிடித்து, சண்டையும் ஊடலும் நாளுக்கு நாள் அதிகமாக அலைப்பிக்கின்ற வகைக்குச் செய்கின்ற மாதர்க ளின் காமக் கலகத்தில் சிக்குதலால் ஏற்படும் வருத்தமாகிய தொடர்பில் அடிமையாகிய நானும் கலக்கம் அடையலாமோ? ஏலம், கிராம்பு வகை, சுரபுன்னை, மகிழ மரத் தோட்டங்கள், கமுகு, மருத மரம், செழிப்புள்ள தாமரை யாவையும் தனது அலையில் அடித்துத் தள்ளி வருகின்ற காவிரி ஆறு வெளிப் புறத்தில் சூழ்ந்து செல்லும் திருவேரகம் என்ற சுவாமிமலையில் வீற்றிருக்கும் பச்சை மயில் வீரனே, கற்பகச் சோலையில் உள்ள பூ இதழால் சக்ரவாள கிரி ஆகிய பெரிய மலைகளின் (சிறகுகளை) வெட்டித்தள்ளிய வஜ் ராயுதம் கொண்ட கைகளை உடைய இந்திரன் வணங்கும் திருக்கை வடிவேலனே, அச்சத்தை நிரம்பத் தரும் கிரௌஞ்ச மலையையும், கடலிடத் தையும், பகைத்து வந்த சூரனுடைய உடலையும் அழித்த பெருமாளே!

கடன் தொல்லையைத்

தீர்ப்பது எப்படி?

அதிக கடன் தொல்லையால் அவதிப்படுபவர்கள் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றினால் படிப்படியாக கடன் தொல்லையில் இருந்து விடுபடலாம்:

- அஸ்வினி, அல்லது அனுஷம் நட்சத்திர நாளில் அசல் தொகையில் ஒரு பகுதியை கொடுத்தால் கடன் சுமை படிப்படியாக குறையும்.
- செவ்வாய்க்கிழமையன்று, செவ்வாய் ஓரையில் கடனை திருப்பித் தருவதால் கடன் பிரச்னை நீங்கும்.
- ஞாயிற்றுக்கிழமையில் வரும் சதுர்த்தி திதியன்றும் சனிக்கிழமையில் வரும் சதுர்த்தி திதியிலும் குளிகன் நேரத்தில் அசல் தொகையில் ஒரு பகுதியை கொடுத்தால் கடன் சீக்கிரம் அடைபடும்.
- அஸ்வினி நட்சத்திர நாளில் மேஷ லக்னம் நடைபெறும்போதும், அனுஷ நட்சத்திர நாளில் விருச்சிக லக்னம் நடைபெறும்போதும் யாரிடம் அதிக கடன்பட்டிருக்கிறோமோ அவரிடம் அசலில் ஒருசிறிய பகுதியை கொடுத்தால் அந்த முகூர்த்த விசேஷம் காரணமாக, உங்கள் கடன் விரைவாக குறையும்.
- குளிகை காலத்திலும் கடனை அடைக்கலாம்.
- 'கரிநாள்' என்று சொல்லப்படும் நாட்களிலும் கடன் அடைக்கலாம்.
- மரணயோகம் உள்ள நாட்களில் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கலாம். இதனால் யாரிடம் கடன் வாங்கினோமோ அந்த நபரிடமோ, அல்லது அந்த வங்கியிலோ மீண்டும் கடன் வாங்கவேண்டி வராது.
- தினசரி பக்தியுடனும் நம்பிக்கையுடனும் கந்த சஷ்டி கவசம் படித்துவர ருண, ரோக, சத்ரு தொல்லை நீங்கும். சஷ்டி திதியன்று முருகன் கோயில்களில் சஷ்டி கவசம் படிக்க, கடன் நிவாரணம் ஏற்படும்.

பிரம்ம காயத்ரி

மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மா, படைப்புக் கடவுளாக போற்றப்படுகிறார். நான்முகன், அயன், கஞ்சன், விரிஞ்சி உள்ளிட்ட பல்வேறு பெயர்கள் இவருக்கு உண்டு. விஷ்ணுவின் நாபிக் கமலத்திலிருந்து தோன்றியவர் பிரம்மன். இவரது மனைவி கல்விக் கடவுளான சரஸ்வதி. பிரம்மனின் சகோதரியாக மகாலட்சுமியைச் சொல்வார்கள். பிரம்மதேவருக்கு சனகர், சனத்குமாரர், சனத்சுஜாதர், சனந்தனர், வசிஷ்டர், புலகர், புலஸ்தியர், பிருகு, தட்சிப்பிரஜாபதி, ஆங்கிரஸ், மரீசி, அத்ரி, நாரதர் ஆகிய மகன்கள் இருப்பதாக புராணங்கள் குறிப்பிடுகின்றன.

பிரம்மதேவனை வழிபடும்போது, அவருக்குரிய காயத்ரி மந்திரத்தை சொல்வது நன்மைகளைத் தரும் -

**'ஓம் வேதாத்மகாய வித்மஹே
ஹிரண்ய கர்ப்பாய தீமஹி
தன்னோ பிரஹ்மஹ்
ப்ரசோதயாத்'**

"வேதங்களை உருவாக்கியவரை நாம் அறிந்து கொள்வோம். ஹிரண்யன் என்னும் பெயர் பெற்ற அந்தப் பரம்பொருளை தியானம் செய்வோம். பிரம்மதேவனாகிய அவர், நமக்கு நன்மை அளித்து, காத்து அருள்வார்," என்பது இதன் பொருள்.

இந்த காயத்ரி மந்திரத்தை, தினமும் 108 முறை உச்சரித்து வந்தால் கேட்ட வரம் கிடைக்கும். வேதங்களில் சிறந்து விளங்கலாம். ஆயுள், ஆரோக்கியம் சிறப்பாக அமையும்.

– குருப்ரியா

பாசுர மாலைகளால் பக்தி பரப்பிய சில பெரியோர்கள்

இன்தமிழாலும், ஈடற்ற பக்தியாலும் பரந்தாமனைப் போற்றியவர்கள் வைணவப் பெரியோர்கள். இயற்ற மிழ்ப் பாசுரங்களை மாலையாக அணிவித்து இன்புற்றுப் பேரன்பர்கள் அவர்கள். கவின்மிகு சொல்லாய், பாடலாய், இசையாய் பரம்பொருளின் பேருண்மைகளை உலகோருக்கு அறிவித்துப் பெருந்தகையாளர்கள். தங்களது உணர்வுபூர்வமான பக்தியை தம் பாசுரங்கள் மூலமாக அனைத்து இறையடியவர்களுக்கும் ஊட்டியவர்கள். அவர்களில் சிலரை இங்கே தரிசித்து அவர்களது பாதார விந்தங்களைப் பணிந்து தொழுவோம்.

பொய்கையாழ்வார்

பொய்கையாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றி பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் முதலாழ்வார் ஆவார். ஐப்பசி மாதம் திருவோணம் நட்சத்திரத்தில் காஞ்சிபுரத்தில் உள்ள திருவெஃகா எனும் 108 திருப்பதிகளுள் ஒன்றான சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயிலிலுள்ள பொய்கையில் பிறந்தவர். பொற்றாமரைப் பொய்கையில் தோன்றியதால் பொய்கை யாழ்வார் எனப் பெயர் பெற்றார். இவரால் அந்தாதியாகப் பாடப்பட்ட நூறு பாடல்களும் முதல் திருவந்தாதி எனப்படுகின்றது. முதன்முதலில் திருமாலின் பத்து அவதாரங்களையும் பாடியவர் இவரே.

பொய்கையாழ்வார் பாஞ்சஜன்யம் எனப்படும் பெருமாளின் சங்கின் அம்சமாகப் பிறந்தவர் என்பார்கள். இவர் பேயாழ்வார், பூதத்தாழ்வார் ஆகியோருடன் ஒரே காலத்தில் வாழ்ந்தவர். இவர்கள் மூவரும் ஞான, பக்தி, வைராக்கியங்கள் மிக்கத் துறவறம் பூண்டு, ஆண்டவனின் நினைவிலேயே உருகி உள்ளம் கனியப் பாடியவர்கள். உணவு, உடை என தினந்தேடும் மக்களோடு கலக்காமல் ஒருநாள் தங்கிய இடத்தில் மறுநாள் இராமல் ஒருவரை ஒருவர் அறியாமல் தனித்தனியே வலம்வந்து கொண்டிருந்தவர்கள்.

திருமாலாகிய இறைவன், இவர்களால் உலகை உய்விக்க கருதி, திருக்கோவலூரில், ஒரு வீட்டின் இடைகழியில் மழை பெய்யும் ஒரு இரவில் ஒருங்கிணைத்தான். தனித்தனியாக தலயாத்திரை மேற்கொண்ட மூன்று ஆழ்வார்களும் திருக்கோவலூரில் ஒரே

பரணிகுமார்



சமயத்தில் நுழைய, பெருமழை உண்டானது. மழைக்கு ஒதுங்கும் பொருட்டு ஒரு குடிசையை நெருங்க அவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் அமரலாம், மூவர் நிற்கலாம் எனும் அளவில் சிறு இடமாக இருந்தது. இந்த நெருக்கடியில் மூவரும் அங்கு நின்று கொண்டிருக்க, நான்காமவராக இருந்து இருளில் மேலும் இட நெருக்கத்தை உண்டுபண்ணினான் இறைவன்.

நெருக்கத்தின் காரணத்தை அறிய வேறு விளக்கின்மையால், பொய்கையார் பூமியாகிற தகழியில்(அகல்) கடல்நீரை நெய்யாகக் கொண்டு சூரியனை விளக்காக ஏற்றினார். பூதத்தார் அன்பாகிய தகழியில் (அகல்) ஆர்வத்தை நெய்யாகக் கொண்டு சிந்தையாகிய திரியில் ஞானவிளக்கை ஏற்றினார். இவ்விரண்டின் ஒளியால் இருள் அகல, நெருக்கத்திற்குக் காரணமான இறைப் பொருளைக் கண்டார் பேயாழ்வார். பின் மூவரும் அப்பொருளின் சொரூபத்தை அறிந்து அனுபவித்து ஆனந்தம் எய்தினர். இச்சம்பவத்தின் உட்பொருள், பொய்கையாரின் செயல் புற இருளை நீக்கியது; பூதத்தாரின் செயல் அக இருளை நீக்கியது; அக இருள், புற இருள் இவ்விரண்டும் நீங்கினால் பரமனைக் காணலாம் என்பதற்கொப்ப, அக, புற இருள் நீங்கிட, பேயாழ்வார் இறைவனின் வடிவழகை அன்பெனும் வெளிச்சத்தில் கண்டார் என்பதாம்.

பூதத்தாழ்வார்

மாமல்லபுரத்தில் அவதரித்த இவர் வைணவ நூல்களின் தொகுப்பான நாலாயிர திவ்யப் பிரபந்தங்களில் உள்ள இரண்டாம் திருவந்தாதியைப் (நூறு பாசுரங்கள்) பாடியுள்ளார்.

மாமல்லபுரத்திலுள்ள தலசயனப் பெருமாள் கோயிலை அண்டிய பகுதியிலேயே இவர் பிறந்ததாகக் கருதப்படுகிறது. இக்கோயிலின் முன்பு இதைக் குறித்த மண்டபம் ஒன்றும் இருந்ததாகத் தெரிகிறது. இக்கோயிலின் வெளிச் சுவரில், பூதத்தாழ்வாரின் அவதாரத்தலம் எனக் குறிப்பிடும் அறிவிப்புப் பலகை ஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது.

திருமாலின் கையில் உள்ள ஐந்து ஆயுதங்களில் ஒன்றான கௌமோதகி என்னும் கதாயுதத்தின் அம்சமாக இவர் பிறந்தார் எனப்படுகிறது.

இவர் பொய்கையாழ்வார், பேயாழ்வார் இருவருடனும் ஒரே காலத்தில் வாழ்ந்தவராவார். இவர்கள் மூவரும் ஞான, பக்தி, வைராக்கியம் மிக்கத் துறவறம் பூண்டு, ஆண்டவனின் நினைவிலேயே உருகி உள்ளம் கனியப் பாடியவர்கள்.

பேயாழ்வார்

திருமயிலைஎன வழங்கிய, சென்னையைச் சார்ந்த மயிலாப்பூரைச் சேர்ந்தவர். நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்கள் தொகுப்பில் உள்ள மூன்றாம் திருவந்தாதியைப் பாடியவர். இது நூறு வெண்பாக்களைக் கொண்டது.

திருமாலின் கையில் உள்ள ஆயுதங்களில் ஒன்றான நந்தகம் எனப்படும் வாளின் அம்சம் கொண்டவர் பேயாழ்வார்.

சைவம்-வைணவம் போட்டி நிலவிய காலகட்டத்தில், இவற்றுக்கிடையே இவர் ஒற்றுமை காண விழைந்தவர். இவர் பாடிய பாசுரங்களிலே இதற்குச் சான்றுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக -

தாழ் சடையும் நீள் முடியும் ஒண் மழுவும் சக்கரமும்,
சூழ் அரவும் பொன் நாணும்தோன்றுமால்சூழும்



திரண்டு அருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு,
இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து.

திருமழிசையாழ்வார்

தை மாதம் மக நட்சத்திரத்தில் திருமாலின் ஆயுதங்களுள் ஒன்றான சக்கரத்தின் அம்சமாக திருமழிசை என்னும் ஊரில் பிறந்தவர். ‘பக்திசாரர்’, குடமூக்கிற் பகவர், திருமழிசையார், திருமழிசைபிரான் என இவருக்கு பல்வேறு திருநாமங்கள் உண்டு.

நான்முகன் திருவந்தாதி என்னும் நூறு வெண்பாக்கள் கொண்ட நூலையும் திருச்சந்த விருத்தம் என்னும் 120 விருத்தங்களைக் கொண்ட நூலையும் இயற்றியுள்ளார். இவை நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் முதலாயிரத்திலும், மூன்றாவதாயிரத்திலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இளமையிலேயே பரஞான முதிர்ச்சி பெற்றுப் பரமயோகியாக விளங்கியவர். உண்மைத் தத்துவத்தை அறிய முயன்று சாக்கியம், சமணம், சைவம், நாத்திகம் (வேத மறுப்பு) உட்பட ஒவ்வொரு சமயமாகப் புகுந்து ஆராய்ந்தார். சைவசமயத்தைச் சார்ந்திருக்கும்போதுதான் திருமயிலையில் பேயாழ்வாரை ஆசிரியராகப் பெற்றார். முக்கண்ணனான சிவபெருமான் இவரை சோதித்து இவருடைய பக்தியை மெச்சி இவருக்கு ‘பக்திசாரர்’ என்ற சிறப்புப்பெயரை அருளிச் செய்தார். சைவசமய சிவவாக்கியார்தான் பின்னாளில் திருமழிசையாழ்வார் என அழைக்கப்பட்டார் எனும் கருத்தும் நிலவுகிறது. அதற்கு சான்றாக இவருடைய பாடல்கள் மட்டும் திவ்விய பிரபந்தத்தில் மற்றைய ஆழ்வார்களின் பாடல்களிலிருந்து வேறுபடும் வகையில் சித்தர்வகை பாடல்களாய் பரிபாஷை எனப்படும் மறைப்பொருள் நிறைந்தனவாக விளங்குகிறது.

நம்மாழ்வார்

நம்மாழ்வார் தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர். நான்கு வேதங்களையே தீந்தமிழில் பாடியதால் "வேதம் தமிழ் செய்த மாறன்" என்றே புகழப்படுகிறார். கம்பர் இயற்றிய "சடகோபர் அந்தாதி" எனும் நூலின் தலைவனும் இச்சடகோபனே ஆவார்.

தாமிரபரணி நதிக்கரையிலுள்ள திருக்குருகூர் என்னும் ஊரில் வசித்த காரியார் மற்றும் உடைய நங்கைக்குத் திருமகனாராக நம்மாழ்வார் கலிபிறந்த 43 ஆவது நாளில் சூத்திர குலத்தில் அவதரித்தார். இவர் பிறந்த உடன் அழுதல், பால் உண்ணுதல் முதலியனவற்றைச் செய்யாமல் உலக இயற்கைக்கு மாறாக இருந்ததால் அவரை "மாறன்" என்றே அழைத்தனர். மாயையை உருவாக்கும் "சட" எனும் நாடியினாலே குழந்தைகள் பிறந்தவுடன் அழுகின்றன. ஆனால், விஷ்வக்சேனரின் அம்சமாகப் பிறந்த இவர் சட நாடியை வென்றதால் "சடகோபன்" என்றும் அழைக்கப்பட்டார். யானையை அடக்கும் அங்குசம் போல, பரன் ஆகிய திருமாலை தன் அன்பினால் கட்டியமையால் "பராங்குசன்" என்றும், தலைவியாக தன்னை வரித்துக் கொண்டு பாடும்போது "பராங்குசநாயகி" என்றும் அழைக்கப்படுகிறார்.

பதினாறு ஆண்டுகள் திருக்குருகூர் நம்பி கோயிலின் புளிய மரத்தின் அடியில் எவ்வித சலனமும் இல்லாமல் தவம் செய்து வந்தார். வடதிசை யாத்திரை மேற்கொண்டிருந்த மதுரகவி என்பவர் அயோத்தியில் இருந்த போது தெற்குத் திசையில் ஒரு ஒளி தெரிவதைக் கண்டு அதனை அடைய தென்திசை நோக்கிப் பயணித்தார். மாறனிடமிருந்தே அவ்வொளி வருவதை அறிந்து அவரை சிறு கல் கொண்டு எறிந்து விழிக்க வைத்தார். சடகோபனின் ஞானத்தாலும், பக்தியாலும் கவரப்பெற்று அவருக்கே அடிமை செய்தார் என்பது வரலாறு.

நம்மாழ்வார் இயற்றிய பாசுர நூல்கள் நான்கு: திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி திருவாய்மொழி இவை ரிக், யஜுர், அதர்வண மற்றும் சாம வேதத்தின் சாரமாக அமைந்திருப்பதாக சொல்வார்கள். இந்த திருவாய்மொழியில் 1102 பாசுரங்களும், திருவிருத்தம் நூலில் 100 பாசுரங்களும், திருவாசிரியம் நூலில் 7 பாசுரங்களும் பெரிய திருவந்தாதி நூலில் 87 பாசுரங்களும் என நான்கு பிரபந்தங்களில் ஆயிரத்து இரு நூற்றுத் தொண்ணூற்றாறு பாசுரங்களை இயற்றியுள்ளார்.

சடகோபன், மாறன், காரிமாறன், பராங்குசன், வகுளாபரணன், குருகைப் பிரான், குருகூர் நம்பி, திருவாய்மொழி பெருமாள், பெருநல்துறைவன், குமரி துறைவன், பவரோக பண்டிதன், முனி வேந்து, பரப்ரம்ம யோகி, நாவலன் பெருமாள், ஞான தேசிகன், ஞான பிரான், தொண்டர் பிரான், நாவீரர், திருநாவீறு உடையபிரான், உதய பாஸ்கரர், வகுள பூஷண பாஸ்கரர், ஞானத் தமிழுக்கு அரசு, ஞானத் தமிழ் கடல், மெய் ஞானக் கவி, தெய்வ ஞானக் கவி, தெய்வ ஞான செம்மல், நாவலர் பெருமாள், பாவலர் தம்பிரான், வினவாது உணர்ந்த விரகர், குழந்தை முனி, ஸ்ரீவைணவக் குலபதி, பிரபன்ன ஜன கூடஸ்தர், மணிவல்லி, பெரியன் - இவையெல்லாம் நம்மாழ்வாரின் திருநாமங்களாக போற்றப்படுகிறது.

மதுரகவி ஆழ்வார்

பாண்டிய நாட்டில் திருக்குருகூர் என்னும் ஆழ்வார்திருநகரிக்கருகிலுள்ள திருக்கோளூரில் ஈச்வர வருஷம் சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தார். நம்மாழ்வாருக்கு முன் பிறந்து, அவருக்குப் பிறகும் வாழ்ந்தவர். இவர் பெருமானைத் தன் பாசுரங்களால் பாடாமல் தன் ஆசாரியனான நம்மாழ்வாரையே சிறந்த தெய்வமாக எண்ணி அவரைப் போற்றியே பதினோரு பாசுரங்களைப் பாடியுள்ளார். சிறுவயதிலிருந்தே செவிக்கினிய செந்தமிழில் நற்கவிதைகளைப் பாடிய காரணத்தினால் இவர் மதுரகவியாழ்வார் எனப்பட்டார்.



ஒரு காலகட்டத்தில் உலக விஷயங்களில் பற்று நீங்கி வடநாட்டு திவ்ய தேசங்களை தரிசிக்கச் சென்றார். அயோத்தியில் தங்கியிருந்தபோது ஒரு நாளிரவில் தெற்கே ஒரு பேரொளியைக் கண்டு வியப்படைந்தார். மறுநாளிரவிலும் அதே ஒளி அவ்வாறே தோன்றிற்று. அது சங்கேதமாக எதையோ உணர்த்தவே, தெற்கு நோக்கிப் புறப்பட்டார். அவ்வொளி தோன்றி திருக்குருகூரை அடைந்தார். புளியமரத்தின் கீழ் எழுந்தருளியிருந்த அவ்வொளியாகிய நம்மாழ்வார் சமாதியிலிருக்கக் கண்டார். முதலில் ஒரு பெரிய கல்லை கீழே போட்டு அந்த சத்தத்தினால் அவர் சமாதியைக் கலைத்தார். மேலும் அவர் நிலையை அறிய விரும்பி "செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்?" என்று வினவினார்.

"அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று விடை வந்தது. இந்த வினா, விடை இரண்டிலும் தத்துவம் புதைந்துள்ளது. 'சூட்சுமமாயிருக்கும் ஜீவன் பிறப்பெடுத்தால் அதன் வாழ்வு எப்படி இருக்கும்?' என்பது கேள்வி. 'தன் புண்ணியபாவங்களின் பயன்களை நுகர்வதே அதன் வாழ்க்கையாக இருக்கும்' என்பதே விடை.

மதுரகவிகள் அக்கணமே அவரை தன் ஆசாரியராக வரித்தார். நம்மாழ்வாரும் இவரை அடிமை கொண்டு, மூவகைத் தத்துவங்களின் இயல்பையும், யோக ரகசிய உண்மைகளையும் உபதேசித்தார்.

நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தினுள் மதுர கவி ஆழ்வார் அருளிச்செய்தது 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்ற ஒரே ஒரு பிரபந்தம் தான். அதிலுள்ள பதினொரு பாடல்களும் திருக்குருகூர் நம்பி நம்மாழ்வாரை ஏத்திப் பாடுவதே.

குலசேகர ஆழ்வார்

இவர் பிறந்த ஊர் கொல்லிநகரான கருவூர் திருவஞ்சிக்களம். ஸ்ரீராமபக்தர். பாரம்பரியமிக்க வைஷ்ணவ குலத்தில் அவதரித்தவர். இவர் திருமாலின் மார்பில்இருக்கும் மணி (கௌஸ்துப) அம்சம் பொருந்தியவர். இவரும், மகளான சேரகுலவல்லித் தாயாரும் அரங்கனையும், ராமனையுமே அடிபணிந்து வந்தனர்.

கொங்கர் கோமான் குலசேகரன் என்ற அடியின்மூலம், இவர் சங்க காலச் சேரர்கள் (கரூர்) மரபினர் என்று தெரிகிறது. இவரது தந்தையார் சந்திர குலத்து அரசரான திடவிரதர் என்பவராவார். குலசேகர ஆழ்வார் நால்வகைப் படை கொண்டு பகைவர்களை வென்று நீதிநெறி பிறழாமல் செங்கோல் செலுத்திக் கொல்லி நகரை அரசாண்டு வந்தார். இவருக்கு இறைவன் காட்சி தந்தமையால் இன்பமும், செல்வமும், அரசாட்சியும் வேண்டாமென்று துறவினை மேற்கொண்டார். இவர் பெரிய பெருமாளாகிய ராமபிரானிடத்தில் அன்பு பூண்டவரானதால் இவருக்கு 'குலசேகரப் பெருமாள்' என்றே பெயர் வழங்கலாயிற்று.

திருவரங்கம் சென்று திருவரங்கப் பெருமானை வாயார வாழ்த்தினார். பெருமாள் திருமொழி என்றழைக்கப்படும் இவருடைய பாடல்களில் 31 பாசுரங்கள் திருவரங்கப் பெருமானைப் பற்றியது.

பெருமாள் திருமொழியில் பத்து பாசுரங்கள் ராமபிரானுக்கான தாலாட்டுப் பாடல்களாக அமைந்துள்ளன.

திருமலை ஆண்டவன் சந்நதியில் ஆண்டவனின் பவளவாயை எக்காலும் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டுமென்றும், அதற்காக தன்னை அவர் கோயில் வாசற்படியாகவே வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் குலசேகரர் மனமுருக வேண்டி பாசுரம் இயற்றினார்.

இதனால் இன்றும் வெங்கடேசப் பெருமாளின் வாசற்படிக்கு குலசேகரப்படி என்ற பெயர் வழங்குகிறது. ஸ்ரீரங்கநாதன் கோயில் கர்ப்பகிருகம் முன்னிருக்கும் படியும் குலசேகரன் படி என்று அழைக்கப்படுகிறது.

திருவரங்கம் பெரிய கோயிலில் மூன்றாவது திருச்சுற்றில் சேனைவென்றான் திருமண்டபம் கட்டினார்; இத்திருச்சுற்றையும்



திருப்பணி செய்தார். இதனாலேயே இச்சுற்றுக்கு இவரது பெயர் இன்றும் வழங்குகிறது. குலசேகராழ்வாரால்தான் "பவித்ரோற்சவ மண்டபம்" கட்டப்பட்டது. இந்த மண்டபப் பிராகாரத்தை திருப்பணி செய்தவரும் இவரே!.

பெரியாழ்வார்

திருவில்லிபுத்தூரில் கருடனின் அம்சமாக ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்தவர். 'விஷ்ணு சித்தர்' என்பது இயற்பெயர். திருவில்லிபுத்தூரில் கோயில்கொண்டுள்ள வடபத்திரசாயி பெருமாளுக்கு அன்றலர்ந்த மலர்களை பறித்து பூமாலையாக சாத்தும் கைங்கர்யம் செய்து கொண்டிருந்தார். ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வாரான ஆண்டாளின் வளர்ப்பு தந்தை. ஆண்டாளை திருவரங்கம் உறையும் அரங்கனுக்கு மணமுடித்துக் கொடுத்து அரங்கனுக்கே மாமனார் ஆனார்.

இவர் வல்லபதேவ பாண்டியனுக்கு எழுந்த ஐயம் தீர்க்கும் பொருட்டு மதுரையில் நடைபெற்ற சமயவாதத்தில் வென்று, அரசனால் அளிக்கப்பட்ட பட்டத்து யானை மீது வரும்பொழுது திருமால் திருமகளோடு வானத்தில் கருடவாகனத்தில் எழுந்தருளியிருக்கக் கண்டு இறைவனின் வடிவழகில் மயங்கி எங்கே இறைவனுக்கு கண்ணேறு (கண்திருஷ்டி) விழுந்துவிடுமோ என்றஞ்சி பாடப்பட்டதே திருப்பல்லாண்டு. இறைவனுக்கே கண்ணேறு கழிக்க முயன்றதால் இவரை ஆழ்வார்களில் பெரியவர் எனும் பொருள்பட "பெரியாழ்வார்" என அரங்கன் அழைக்க, பின்னர் இதுவே இவர் பெயராகிப்போனது.

இறைவனுக்கே கண்ணேறு கழிக்க முயன்ற, இவரது பக்தி மேன்மையைக் கண்ட, பின் வந்த வைணவப் பெரியோர்கள், ஆழ்வார்கள் வரிசைக்கிரமத்தில் ஏழாமவராக வரும் பெரியாழ்வாரின் பாடல்களை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் முதற்பாடல்களாகத் தொகுத்தனர்.

மேலும் சாற்றுமறை எனும் வைணவ தினசரி வழிப்பாட்டின் தொடக்கம் மற்றும் முடிவின்போதும், வைணவ கோயில்களின் திருவிழாக்களில் சுவாமி புறப்பாடு மற்றும் புறப்பாடு முடிந்து திருக்கோயில் திரும்பும்போதும் இன்றளவும் பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு பாடப்பட்ட பின்னரே சுவாமியை திருக்கோயிலுக்குள் எழுந்தருளச் செய்கின்றனர். இவ்வழக்கம் தமிழ்நாட்டில் மட்டும் அல்லாது ராமானுஜர் கொள்கைகளை பின்பற்றும் பிறபகுதி வைணவக் கோயில்களிலும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

கண்ணனைப் பிள்ளையாகப் பாவித்து இவர் பாடிய பாடல்கள் பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கியம் தோன்ற முன்னோடியாக அமைந்தன.



கல்வெட்டில் கணபதி

தமிழ்நாட்டிலுள்ள பல கல்வெட்டுகள் ‘கணபதி வழிபாடு’ தமிழ்நாட்டில் வளர்ந்து வந்துள்ள விதத்தை விவரிக்கின்றன.

கி.பி. 5ம் நூற்றாண்டிலேயே கணபதி வழிபாடு தமிழ்நாட்டில் பரவத் தொடங்கி விட்டது. பிள்ளையார்ப்பட்டிப் பிள்ளையாரே தமிழ்நாட்டின் மூத்த பிள்ளையாராக இருத்தல் வேண்டும் என்று வரலாற்று ஆய்வு அறிஞர்கள் கருதுகின்றனர். அங்கு பிராமி எழுத்தில் காணப்படும் கல்வெட்டே அதற்குச் சான்றாக அமைந்துள்

ளது. பிள்ளையார் வணக்கம் தமிழ்நாட்டில் தோன்றிய ஆதிநாளிலேயே விநாயகர் உருவம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்ற உண்மையை உணரலாம்.

அப்பருடைய தேவாரத்தில்தான் கணபதி பற்றிய முதற்குறிப்பு காணப்படுகிறது. மகேந்திரவர்மனின் (கி.பி. 600-630) மகனான நரசிம்மபல்லவனின் வாதாபிப் படையெடுப்பிற்கு முன்னமேயே அப்பர் கணபதியைக் குறித்துள்ளமையை நோக்கக் கணபதி வழிபாடு இங்கு தோன்றியதாக வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன.

வல்லம் என்னுமிடத்தில் துவாரபாலகர், சிவன் ஆகியோர் உருவச்சிலைகளுடன் விநாயகர் உருவமும் காணப்படுகிறது. அதன் கீழ் உள்ள கல்வெட்டு மகேந்திரவர்மன் காலத்தது என்பதால் நரசிம்மவர்ம பல்லவன் காலத்திற்கு முன்னமே இங்கு விநாயகர் வழிபாடு இருந்தது என்பதை இதுவும் வலியுறுத்துகிறது.

பிள்ளையார்ப்பட்டிக் குடைவரை கோயிலிலுள்ள கணபதி சிற்பம் மற்றும் வேலஞ்சேரி, உத்திரமேரூர் ஆகிய இடங்களிலுள்ள புடைப்புச் சிற்பங்களிலிருந்து கணபதி வழிபாடு கி.பி. 5 அல்லது 6ம் நூற்றாண்டிலேயே தொடங்கி விட்டதை அறியலாம். செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பரமேசுவர மங்கலம் கைலாசநாதர் கோயிலுக்கு வெளியேயுள்ள கல்லில் தமிழில் காணப்படும் கல்வெட்டு பல்லவ மன்னன் நிருபதுங்க வர்மனின் (கி.பி. 884) காலத்தில் வெட்டப்பட்டது. இதில் தண்டியன் கிழார் பாண்டி கிராம வீட்டார் மனைவி தேவச்சானி எனும் பார்ப்பனி சைலேசுரத்தில் ‘கணபதி பட்டாரர்’ கோயிலை நிறுவி அக்கோயில் வழிபாட்டிற்கு நெல் நன்கொடை கொடுத்த விவரம் செதுக்கப்பட்டுள்ளது.

திருக்கோயிலூர் சிவன் கோயில் கல்வெட்டு முதலாம் ராஜராஜன் காலத்தது. (காலம் கி.பி. 991) இக்கல்வெட்டில் ‘கணபதி நம்பி ஆரூரன்’ என்ற பெயர் காணப்படுகிறது. மக்களுக்குக் கணபதியின் பெயர் வைக்கும் வழக்கம் இருந்தது என்பதை இதன் மூலம் அறியலாம்.

தஞ்சைப் பெரிய கோயில் மேலைத் திருச்சுற்றில் முதல் கோட்டத்திலுள்ள தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு ராஜராஜன் கணபதியாருக்கு வாழைப்பழம் அமுது செய்தருளக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. பெரிய கோயில் திருச்சுற்றிலுள்ள பிள்ளையாருக்கு நாள்தோறும் 150 வாழைப்பழங்கள் படைக்க ஏற்பாடு செய்தான் என்ற விவரம் உள்ளது.

➲ கி.பி. 1009ல் முதலாம் ராஜராஜன் காலத்தில் திருவண்ணாமலை அருகில் உள்ள ஆவூர் திருத்தலத்தில் கணபதிக்கு கோயில் இருந்த விவரத்தை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

➲ கி.பி. 1012ல் சிதம்பரம் வட்டத்தில் உள்ள

ஆதிவராக நத்தம் என்னுமிடத்தில் உள்ள கல்வெட்டில் பிள்ளையாருக்குக் காணிக்கை அளித்த விவரம் உள்ளது. செய்யாற்றில் உள்ள ஒரு கல்வெட்டில் 'பரிவார தேவதை கணபதி' என்ற விபரம் உள்ளது.

➲ கி.பி. 1028ல் முதலாம் ராஜேந்திர சோழன் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் கல்வெட்டில் 'கணக்கெழுதிய கணபதி சிலை' பற்றிய விவரம் உள்ளது.

➲ கி.பி. 1051ல் முதலாம் ராஜாதிராஜன் காலத்தில் செய்யாற்றுக்கு அருகில் உள்ள கனாம் பந்தல் சிவன் கோயில் தெற்கு சுவரில் கௌசிகன் என்பவன் கணபதி கல்வெட்டு வெட்டினான் என்று கூறுகிறது.

➲ கி.பி. 1098ல் முதலாம் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டில், கடலூருக்கு அருகில் உள்ள எய்தமூர் எனும் இடத்தில் உள்ள கணபதி கோயிலுக்கு விளக்கெரிக்க காணிக்கை கொடுத்த விவரம் உள்ளது.

➲ கி.பி. 1139ல் சடாஸ்ரீ வல்லப பாண்டியன் காலத்தில், திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள சிவபுரி சுயம் பிரகாசேஸ்வரர் ஆலயத்தில், அருவியூர் தேசிராயகப் பிள்ளையாருக்கு நிலம் வாங்கிய விவரம் கல்வெட்டில் பதியப்பட்டுள்ளது.

➲ கி.பி. 1144ல் குலசேகரசோழன் காலத்தில் திண்டிவனத்துக்கு அருகில் உள்ள மரக்காணம் ஆடவல்லீசுவரர் ஆலயத்தில் உள்ள உதயபிள்ளையாருக்கு நிலக்கொடையளித்த விவரம் கல்வெட்டில் உள்ளது.

➲ கி.பி. 1151ல் இரண்டாம் ராஜராஜன் காலத்தில், செங்கல்பட்டுக்கு அருகில் உள்ள செய்யூர் வன்மீக நாதர் கோயில் மண்டபத்தில் உள்ள, புற்றிடம் கொண்ட மகாதேவர் கோயிலில் உள்ள திருமாளிகைப் பிள்ளையாருக்கு ஆண்டில் குறிப்பிட்ட 32 நாட்களில் பூசை செய்யத் தங்கம் கொடுத்தவன் திறை தேவர்கந்தன் தங்குவான் உத்தம சோழவளவதரையன் என்றும் 32 நாட்களாவன அமாவாசை, பௌர்ணமி, உத்திராயணம், தட்சிணாயினம், கிரகண நாட்கள் மற்றும் கொடையளித்தவரின் தாயார் பிறந்த நாள் - பற்றிய விவரங்கள் கொண்ட கல்வெட்டு உள்ளது.

➲ கி.பி. 1156ல் குலோத்துங்க சோழ மன்னன் காலத்தில், பழனிக்கு அருகில் உள்ள கீரனூர் வாகீஸ்வரர் கோயில் கல்வெட்டில் திருமாளிகைப் பிள்ளையாருக்கு நைவேத்தியம் படைக்க திரு வெண்காட்டு நங்கை என்ற பெண் நிலக்கொடை கொடுத்த விவரம் பொறிக்கப்பட்டுள்ளது.

➲ கி.பி. 1156ல் வீரபாண்டியன் தமது 9ம் ஆட்சியாண்டில் பழனிக்கு அருகில் உள்ள பொருளூர் பெருமாள் கோயிலில் கணபதி சிலை பிரதிஷ்டை செய்யவும், தினமும் விளக்கேற்றவும் பணம் தந்தமை குறித்த கல்வெட்டு உள்ளது.

➲ கி.பி. 1185ல் கொங்கு வீர சோழ தேவர் காலத்தில், தாராபுரத்துக்கு அருகில் உள்ள அலங்கியம் கலியுக கண்ணீசுவரர் கோயிலில் உள்ள வடுகப் பிள்ளையாருக்கு விசு, அயன, சங்கராந்தி நாட்களில் வழிபட நிலக்கொடை அளித்த விவரம் ஒரு கல்வெட்டில் வடிக்கப்பட்டுள்ளது.

➲ கி.பி. 1190ல் சிவகங்கை மாவட்டம் திருமலை மலைக் கொழுந்தீசர் ஆலயத்தில் உள்ள குலசேகர பாண்டியன் திருமாளிகைப் பிள்ளையாருக்கு நிலம் நன்கொடை கொடுத்த விவரம் ஒரு கல்வெட்டில் பதியப்பட்டுள்ளது.

➲ கி.பி. 12ம் நூற்றாண்டில் செங்கல்பட்டுக்கு அருகில் உள்ள திருக்கழுக்குன்றம் பக்தவத்சலேஸ்வரர் ஆலயத்துக்கு, பூவனூர் சூரியதேவன் என்பவன் விநாயகப் பிள்ளையார் சிலை நிறுவியதும், குன்றேறப் படிகளும் கட்டினான் என்ற விவரம் கல்வெட்டில் உள்ளது.

➲ கி.பி. 12ம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த சோழ மன்னன் இரண்டாம் ராஜாதிராஜன். திருக்கோவிலூர் அருகில் உள்ள கீழூர் வீரட்டானேஸ்வரர் ஆலயத்திற்கு பெரியானைப் பிள்ளையார் மற்றும் அழகிய பிள்ளையாருக்கு நன்கொடையளித்த விவரம் ஒரு கல்வெட்டில் உள்ளது.

➲ கி.பி. 1200ல் மூன்றாம் குலோத்துங்க சோழர் தேவர் காலத்தில் குளத்தூருக்கு அருகில் உள்ள நீர்ப்பழனி வளர்மதீஸ்வரர் கோயிலுள்ள க்ஷேத்திரப் பிள்ளையாருக்கு குடமுழுக்கு செய்த விவரம் ஒரு கல்வெட்டில் உள்ளது.

➲ கி.பி. 1216ல் திண்டிவனத்துக்கு அருகில் உள்ள மரக்காணம் ஆடவல்லீஸ்வரர் கோயிலில் பெரிய விநாயகப் பிள்ளையாரை நிறுவி நிலக்கொடையளித்து விளக்கெரிப்பதற்கும் பெரியராச்சியார் என்ற பெண்மணி தானம் அளித்த விவரம் ஒரு கல்வெட்டில் உள்ளது.

➲ கி.பி. 1220ல் வீர ராஜேந்திர தேவன் காலத்தில் திருவலஞ்சுழி க்ஷேத்திரப் பிள்ளையாருக்கு வாணிகன் ஒருவன் அச்சுப் பொன் அளித்த கல்வெட்டு காணப்படுகிறது.

➲ கி.பி. 1250ல் இரண்டாம் சுந்தரபாண்டியன் காலத்தில் ஒரு கல்வெட்டு உள்ளது. அதில் முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ள திருமாலுகந்தான் கோட்டை கருணா கடாட்சி அம்மன் கோயிலில் உள்ள இருகை மதவாரணப் பிள்ளையாருக்கு தானமாக அளிக்கப்பட்ட ஊருக்கு மன்னன் வரியை நீக்கினான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

➲ கி.பி. 1261ல் முதலாம் சடாவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் புதுக்கோட்டை கீரமங்கலம் பிரதட்சேகரர் கோயிலில் உள்ள 'பிழை பொறுத்த பிள்ளையாரின்' மகிமையைப் பொதுமக்கள் தீர்மானித்த விவரம் ஒரு கல்வெட்டில் உள்ளது.

➲ கி.பி. 1281ல் கொங்கு வீர பாண்டிய தேவர் ஆட்சிக் காலத்தில் கோயில் பாளையத்தில் உள்ள காலகாலீஸ்வரர் கோயிலில் தரவல்ல பிள்ளையாருக்கு அந்தி விளக்கேற்ற இரு சிவபிராமணர்கள் ஒப்புக் கொண்ட விபரம் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

➲ கி.பி. 13ம் நூற்றாண்டில், குலோத்துங்க சோழ தேவர் ஆட்சிக்காலத்தில் திருமயம் காரையூர் திருமஞ்சனேஸ்வரர் ஆலயத்தில் உள்ள கயிலை செல்லப் பிள்ளையாருக்கு நைவேத்தியமாக திருப்பண்ணியாரம் செய்ய கேரளன் மங்களாதேவன் கொடை கொடுத்த விபரம் ஒரு கல்வெட்டில் உள்ளது. இப்படியாக கி.பி. 5ம் நூற்றாண்டு முதற்கொண்டு பிள்ளையார் வழிபாடு பற்றிய விவரங்கள் கல்வெட்டு களில் காணப்படுகின்றன. மேலும் விநாயகப் பெருமானுக்கு காணிக்கை, சிலை பிரதிஷ்டை, நிலக்கொடை, வரி நீக்கம், மண்டபம் அமைத்தல், விழா கொண்டாட, விளக்கெரிக்க, சோறு சமைக்க என்று பலவித மான கொடைகள் 13ம் நூற்றாண்டுவரை பொது மக்களும், மன்னர்களும் வழங்கிய செய்திகள் எண்ணற்ற கல்வெட்டுகளில் காணக் கிடக்கின்றன. முழு முதற் கடவுளை அவரே ஏராளமான கல்வெட்டுகளில் 'நாயகனாகச்' சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறார்.

➲ கி.பி. 18ம் நூற்றாண்டிற்குப் பின் மராட்டியர் வருகையால் சதுர்த்தி விரதம் சிறப்பிடம் பெற்றது.

- டி.எம். ரத்தினவேல்

திருமணம் நடக்க குருபலம் அவசியமா?

– ராதாகிருஷ்ணன், காஞ்சிபுரம்.

தெளிவு பெறு ஓம்

குருபகவான்

அவசியமில்லை. முதலில் குருபலம் என்பது வேறு, கல்யாண யோகம் என்பது வேறு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். தனது பிள்ளைக்கு திருமண யோகம் வந்துவிட்டதா என்பதை அறிய வட தமிழகத்தில் குருபலம் இருக்கிறதா என்றும், தமிழகத்தின் தென் பகுதியில் வியாழநோக்கம் வந்துவிட்டதா என்றும் ஜோதிடரிடம் கேட்பது வழக்கம். ஜென்ம ராசிக்கோ அல்லது ஜென்ம லக்னத் திற்கோ குரு பகவான் 1, 4, 5, 7, 9, 10 ஆகிய கேந்திர, திரிகோண ஸ்தானங்களில் அமர்வதை குரு பலம் என்று அழைக்கிறார்கள். 5, 7, 9 ஆகிய இடங்களில் அமரும்போது குருபகவானின் பார்வை பலம் அந்த ராசிக்கோ அல்லது லக்னத்திற்கோ கிடைக்கிறது. இந்த குருபலம் அல்லது வியாழ நோக்கம் என்பது சிறுபிள்ளை முதல் முதியவர்வரை எல்லோருக்கும் வரும். அதற்காக இவர்கள் எல்லோ ருக்கும் திருமணம் நடந்துவிடும் என்று பொருள் கொள்ள முடியுமா?

குருபலம் இருப்பவர்கள் தாங்கள் கையில் எடுக்கும் செயலை விரைந்து செய்ய இயலும். அந்தந்த வயதிற்கு ஏற்றபடி, அவரவருடைய விருப்பங்கள் நிறைவேற குருபலம் துணை நிற்கிறது. அதேநேரத்தில் கல்யாண யோகம் என்பது வேறு என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அவரவர் ஜாதகத்தின்படி ஜென்ம லக்னத்திற்கு ஏழாம் பாவகத்தில் அமர்ந்துள்ள கிரஹம் அல்லது ஏழாம் பாவகத்திற்கு அதிபதி கிரஹம் அல்லது ஏழாம் பாவகத்தோடு தொடர்பு உடைய கிரஹங்களின் தசாபுக்தி காலங்களில், கல்யாண யோகம் வரும். இந்த கல்யாணயோகம் எப்பொழுது வருகிறது என்பதை உங்கள் குடும்ப ஜோதிடரிடம் காட்டித் தெரிந்துகொள்ளுங்கள். குருபலம் இல்லாத காலத்திலும்கூட, ஜாதக ரீதியாக கல்யாணயோகம் வந்துவிட்டால் திருமணம் நடந்துவிடும். அதே நேரத்தில் கல்யாண யோகமும் இருந்து, குருபலமும் இணையும்போது, அந்த ஜாதகருக்கு வரன் தானாகத் தேடி வருகிறது, எதிர்பாராத விதமாக உடனடியாக திருமணமும் நடந்துவிடுகிறது. திருமண யோகத்திற்கு உரிய தசாபுக்தி நடந்தாலும் திருமணத்தடை உண்டாகிறது என்றால் அந்த ஜாதகருக்கு களத்திர தோஷம் இருக்கலாம். அவ்வாறு களத்திர தோஷம் உள்ளவர்களுக்கு திருமண யோகத்தோடு குருபலமும் இணையும்போது தடை நீங்கி திருமணம் நடைபெறும். ***குருபலம் இல்லை, அதனால் திருமணத்திற்கான முயற்சியில் ஈடுபடவில்லை என்று சொல்வது தவறு.*** குருபலம் இருக்கிறது, திருமணம்

திருக்கோவிலூர்
K.B.ஹரிபிரசாத்
சர்மா

தன்னால் நடந்துவிடும் என்று பேசாமல் உட்கார்ந்திருப்பதும் தவறு. இதையெல்லாம் விட, வரன் தேடி வந்தும் குருபலம் இல்லை என்று காரணம் சொல்லி திருமணத்தை தள்ளிப்போடுவது மிகமிகத் தவறு. திருமணம் நடக்க அல்லது திருமணத்தை நடத்த குருபலத்தை விட கல்யாண யோகம் என்பதே அவசியம் என்பதே உங்கள் சந்தேகத்திற்கான தெளிவான பதில் ஆகும்.

?இந்துக்களில் ஒரு சிலர் இறந்தபின் உடலை புதைக்கிறார்கள். சிலர் உடலை எரிக்கிறார்கள். ஒரே மதத்தில் ஏன் இருவிதமான சடங்குகள் உண்டாகியிருக்கின்றன?

– ப.த. தங்கவேலு, பண்ருட்டி.

இந்து மதத்தைப் பொறுத்தவரை ஒரு மனிதன் இறந்தவுடன் அவனது உடலை எரிக்க வேண்டும் என்றே சாஸ்திரம் அறிவுறுத்துகிறது. சுடுகாடு என்பதே ஒரு யாகபூமியாகவும், சிதை என்பது ஹோமகுண்டமாகவும், இறந்துபோன மனிதனின் உடல் ருத்ரனுக்கு அவிர்பாகவும் கருதப்படுகின்றன. சாதாரணமாக சம்சார பந்தத்தில் வாழ்ந்து முடித்த ஒரு மனிதன் இறந்தவுடன் அவனது உடலை எரிக்க வேண்டும் என்றே இந்து மதம் அறிவுறுத்துகிறது. அதேநேரத்தில் சம்சார பந்தத்தைத் துறந்து சந்யாச யோகத்தில், துறவு வாழ்க்கை வாழ்ந்து உயிர்துறக்கும் மனிதனின் உடலை புதைக்கும் சம்பிரதாயம் இந்து மதத்தில் உண்டு. உட்கார வைத்த நிலையில் அந்த உடலைச் சுற்றி சமாதி எழுப்புவர். ராகவேந்திரர், ரமண மகரிஷி, சத்குரு ஞானானந்தர், காஞ்சிப் பெரியவர் உட்பட பல மகான்களுக்கும் இவ்வாறு சமாதிகள் எழுப்பப்பட்டு ஆராதனைகளும், பூஜைகளும் நடத்தப்படுகின்றன. துறவிகள் தவிர்த்து இந்து மதத்தினர் அனைவரும் உடலை எரிக்க வேண்டும் என்றே சாஸ்திரம் அறிவுறுத்துகிறது. இதில் இடையில் ஏற்பட்ட சம்பிரதாய மாற்றத்தாலும், ஒரு குடும்பத்தில் எவரேனும் ஒருவர் துறவு வாழ்க்கை வாழ்ந்து முடித்து, அவரது உடலை புதைக்கப்போய் அதே பழக்கம் அந்தக் குடும்பத்தில் வழிவழியாகத் தொடரப்பட்டு வந்ததாலும், புதைக்கும் பழக்கம் உருவாகியிருக்கலாம். பொதுவாக இந்து மதத்தைப் பொறுத்தவரை இறந்தவரின் உடலை எரிக்க வேண்டும் என்பதே சாஸ்திரம் சொல்லும் விதி. இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

?பஞ்சாங்கத்தில் நாள், நட்சத்திரம், திதி, கரணம், யோகம் இந்த ஐந்தும் சேர்ந்துள்ளது. இதில் எதை மையமாக வைத்து பலன் சொல்லமுடியும்?

– எஸ்.எஸ்.வாசன், தென் எலப்பாக்கம்.

திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் இந்த ஐந்தினையும் நமக்குத் தெரிவிப்பதே பஞ்சாங்கம் என்பது மிக மிகச் சரியான கருத்து. இந்த ஐந்திற்குமே தனித்தனியாக பலன் உண்டு. திதி என்பது சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையே உள்ள தூரத்தைக் குறிப்பது. பிரதமை, த்விதியை, திருதியை என்று வளர்பிறையில் பௌர்ணமி வரை 15 திதிகளும், அதே வரிசையில் அமாவாசை வரை 15 திதிகளும் உண்டு. இந்த திதி என்பது மருவியே தேதி என்று பெயர் பெற்றது. வாரம் அல்லது நாள் என்பது ராகு, கேதுவைத் தவிர எஞ்சியுள்ள உண்மைக் கோள்களான மற்ற ஏழு கோள்களில் அந்த நாள் எந்த கிரஹத்தின் ஆதிக்கத்திற்குள் வருகிறது என்பதைச் சொல்வது. இதில் திங்கள், புதன், வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்கள் சுபகிரஹங்களுக்கு உரியன என்றும், ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய நாட்கள் தீய கோள்களுக்கு உரியன என்றும் பிரிக்கப்படுகிறது. நட்சத்திரம் என்பது அந்தக் குறிப்பிட்ட நாளில் சந்திரன் எந்த நட்சத்திரத்தின் பாகையில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார் என்பதைச் சொல்வது. உதாரணத்திற்கு நாள்காட்டியில் அன்றைய தினம் கிருத்திகை என்று குறிப்பிடப்பட்டிருந்தால், அந்த நாளில் சந்திரன் கார்த்திகை நட்சத்திரக் கூட்டத்தின் வழியே பயணித்துக் கொண்டிருக்கிறார் என்பது பொருள். சந்திரன் சஞ்சரிக்கும் நட்சத்திரமே அன்றைய நாளின் நட்சத்திரமாகவும், அந்த நாளில் பிறக்கின்ற குழந்தையின் ஜென்ம நட்சத்திரமாகவும் கணக்கில் கொள்ளப்படுகிறது. இவ்வாறே விஷ்கம்பம், பிரீதி, ஆயுஷ்மான் என 27 விதமான யோகங்களும், பவம், பாலவம், கௌலவம் என 11 விதமான கரணங்களும் உண்டு. இந்த திதி, வார, நட்சத்திர, யோக, கரணத்தை உள்ளடக்கியதே பஞ்சாங்கம் என்பது. இவை ஐந்திற்கும் தனித்தனியே விசேஷ பலன்கள் உண்டு என்றாலும் அன்றைய திதியையும், நட்சத்திரத்தையுமே நாம் நடைமுறையில் அதிகம் கணக்கில் எடுத்துக் கொள்கிறோம்.

உதாரணத்திற்கு இன்று அமாவாசை, பிரதமை, அஷ்டமி, நவமி என்றும், இன்றைய தினம் பரணி, கிருத்திகை என்றும் சொல்வது சாதாரணமாகிவிட்டது. இவற்றில் எந்தெந்த திதியில் என்னென்ன செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்று ஜோதிட சாஸ்திரம் தெளிவாக உரைக்கிறது. திதி மட்டுமல்லாது, மேற்சொன்ன ஐந்து அங்கங்களுக்கும் இந்த விதி பொருந்தும். இதனை கற்றறிந்த ஜோதிடர் மூலம் அறிந்து கொண்டு செய்கின்ற செயலுக்கு ஏற்றவாறு பலமுள்ள நாளைத் தேர்ந்தெடுத்து செயலில் இறங்குவது நல்லது. நடைமுறையில் நமக்கு அதிகம் பரிச்சயமில்லாத யோகம், கரணம் ஆகியவற்றிற்கும் அதிக பலம் உண்டு. சிறியோர் நமஸ்கரிக்கும்போது, வேதம் படித்த பண்டிதர்கள் 'ஆயுஷ்மான் பவ சௌம்யா..!' என்று ஆசிர்வா

தம் செய்வர். ஆயுஷ்மான் என்ற யோகமும், பவம் என்கிற கரணமும், சௌம்யவாரம் என்கிற புதன்கிழமையும் இணையும் நாள் அதிஅற்புத மான பலனைத் தரவல்லது. அத்தகைய விசேஷ பலனை நமஸ்கரிப்பவர் பெறவேண்டும் என்ற பொருளில் வேதவிற்பன்னர்கள் ஆசிர்வாதம் செய்வார்கள். இவ்வாறு யோகம், கரணத்திற்கும் பலன் என்பது உண்டு என்பதை ஜோதிஷ சாஸ்திரம் தெளிவாகச் சொல்கிறது. நமது தேவைக்கு ஏற்ற நாளைத் தேர்ந்தெடுத்து நாம் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

? உலகில் நல்லவர்கள் அதிகமா? தீயவர்கள் அதிகமா?

– சு.பாலசுப்ரமணியன், ராமேஸ்வரம்.

இன்பம்-துன்பம், பகல்-இரவு, இருட்டு-வெளிச்சம் என்ற எதிரெதிர் துருவங்களை சம அளவில் கொண்டதே இந்த உலகம். நல்ல சக்திக்கு இணையாக தீய சக்தியும் இந்த உலகத்தில் உண்டு. என்கிறது நியூட்டனின் மூன்றாம் விதி. நல்லவர்களும், தீயவர்களும் சரிசம அளவில் கலந்த கலவையே இந்த உலகம். தத்துவார்த்த ரீதியாக யோசித்தோமேயானால், நல்லவர்களின் கண்களுக்கு உலகில் உள்ள எல்லோருமே நல்லவர்களாகவே தென்படுவார்கள். தீயவர்களின் கண்களுக்கு உலகில் உள்ள எல்லோரும் தீயவர்களாகத்தான் தென்படுவார்கள். இது அவரவர் பார்க்கும் பார்வைக்கும், அவரவரின் தனிப்பட்ட குணத்திற்கும் தகுந்தாற்போல் மாறுபடும்.

? சனீஸ்வர பகவானுக்கு மட்டும் கறுப்பு நிற வஸ்திரம் சாத்துவதன் ஐதீகம் என்ன?

– த.சத்தியநாராயணன், அயன்புரம்.

சனீஸ்வர பகவான் என்று சொல்வது தவறு. ‘சனைஷ்சரன்’ என்று சொல்வதே சரி. ஈஸ்வரப் பட்டம் சனிக்கு வழங்கப்பட்டிருப்பதாக நாம் கருதுவது தவறு. இதற்கு புராண ரீதியான ஆதாரம் எதுவும் இல்லை. ‘சனைஷ்சரன்’ என்ற சொல்லிற்கு மெதுவாக நகர்பவன் என்று பொருள். இந்த சனைஷ்சரன் என்பது மருவி சனீஸ்வரன் ஆகியிருக்கலாம். வேதமும் சரி, ஜோதிட சாஸ்திரமும் சரி, வானவியல் அறிவியலும் சரி இந்த மூன்றுமே சனியின் நிறம் கறுப்பு என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. சனியின் வாகனம் என்று நாம் நம்பும் காகத்தின் நிறம் கறுப்பு என்பதாலும், சனிக்கு உரிய தானியம் எள்ளு என்பதாலும் சனிக்கு உரிய நிறம் கறுப்பு என்று நாமாக எண்ணிக் கொண்டிருக்கிறோம். நீலவர்ணம் என்றுதான் வேத மந்திரங்கள் சனியை உருவகப்படுத்துகின்றன. ஜோதிட சாஸ்திரமும் சனியின் நிறம் நீலம் என்றுதான் அறிவுறுத்துகிறது. இதனை மெய்ப்பிக்கும் விதமாக வானவியல் அறிவியல்

சனைஷ்சரன்

ரீதியாக டெலஸ்கோப் மூலமாக காணும் அறிவியலாளர்களும் சனியின் நிறம் நீலம் என்றே அறுதியிட்டுச் சொல்கிறார்கள். ஆகவே நவகிரஹங்களில் உள்ள சனிக்கு கறுப்பு நிற வஸ்திரம் சாத்துவதை விட நீலநிற வஸ்திரம் சாத்துவதே சாலச்சிறந்தது.

? ‘கோயிலில் காலணி தொலைந்தால் பாவம் தொலைந்ததாகக் கொள்’ என்று கூறும் வாதம் ஏற்புடையதா?

– ந.கனிமொழி கயல்விழி, கண்ணமங்கலம்.

ஏற்புடையது அல்ல. இது முற்றிலும் மூடநம்பிக்கையே. காலணி தொலைந்தால் பாவம் தொலைந்து விடும் என்பது உண்மையென்றால் பாவம் செய்பவர்கள் எல்லோரும்

வாசகர்களே...

நமது இந்து தர்மம், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றில் நமக்கு எழும் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கிறார்.

திருக்கோவிலூர்
K.B. ஹரிபிரசாத் சர்மா

உங்கள் சந்தேகங்களை கீழே உள்ள முகவரிக்கு எழுதுங்கள்.

தெளிவு பெறுஓம்,
தினகரன் ஆன்மிகம்,
தபால் பை எண்: 2908,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
palanmagazine@gmail.com

வேண்டுமென்றே காலணியை தொலைத்துக் கொண்டிருப்பார்கள். இம்மாதிரியான கூற்றுக்கள் காலணியைத் தொலைத்தவனின் மன ஆறுதலுக்காக சொல்லப்படுவதே தவிர, இந்தக் கூற்றில் உண்மை கடுகளவும் இல்லை.

?அடிக்கிற பயங்கர வெயில் விஞ்ஞானிகள் வானில் விட்டிருக்கிற விண்கலங்களின் விளைவாய் இருக்குமா?

– கே.ராமமூர்த்தி, கீழகல்கண்டார்கோட்டை.

நிச்சயமாக கிடையாது. அறிவியல் கண்டுபிடிப்புகளால் எந்த வகையிலும் இயற்கையான நிகழ்வுகளில் மாற்றத்தை உருவாக்க இயலாது. அடிக்கிற வெயிலும், பெய்கின்ற மழையும் கிரஹங்களின் சஞ்சாரத்திற்கு ஏற்றவாறு மாறுபடுகின்றன. அதனுடைய தாக்கத்தினைத் தாங்கிக்கொள்ளும் திறனில்தான் நாம் செயற்கையின் மூலம் மாறுபாடு கண்டிருக்கிறோம். மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு வெறும் கட்டிடங்களாகக் காட்சியளிப்பதால் வெயிலின் கடுமை வாட்டி வதைக்கிறது. ஏரிகளும், குளங்களும் ஆக்கிரமிக்கப்பட்டதால் தண்ணீர் சேமிக்கப்படாமல் பஞ்சம் உண்டாகிறது. அடிக்கிற வெயில் எப்போதும்போல்தான் அடிக்கிறது. நமது செய்கைகளால் நம்மால் அதன் தாக்கத்தினைத் தாங்கிக்கொள்ள இயலவில்லை. விஞ்ஞானிகள் வானில் விட்டிருக்கின்ற விண்கலங்களினால்தான் வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளது என்ற கருத்து ஏற்புடையது அல்ல. முற்றிலும் தவறானது.

?நமது இந்து மத பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்களின்படி கணவனை இழந்த பெண்கள் எந்த வகையான அணிகலன்களை அணிந்து கொள்ளலாம்? குறிப்பாக திருமாங்கல்யம், கைக்காப்பு, கால்விரல் மெட்டி இவற்றில் ஒதுக்கப்பட வேண்டியவை எவை?

– கரு.ராஜமூர்த்தி, மாலையிட்டான்வயல்.

நமது இந்து மத பழக்கவழக்கத்தின்படி, கணவனை இழந்த பெண்கள் எந்த வகையான அணிகலன்களையும் அணிந்துகொள்ளக் கூடாது. கணவனை இழந்தபின் வெறெந்த சிந்தனையும் இன்றி துறவு வாழ்வு மேற்கொள்ள வேண்டும் என்று இந்து மத சம்பிரதாயம் அறிவுறுத்தினாலும், கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்றாற்போல் ஒரு சில சம்பிரதாயங்களை மாற்றிக் கொள்வதில் தவறில்லை என்பது அடியேனின் தாழ்மையான கருத்து. நீங்கள் குறிப்பிடுவது போல திருமாங்கல்யமும், கால் விரலில் அணியும் மெட்டியும்தான் திருமண ஆன நாள் முதலாக பெண்கள் தங்கள் வாழ்நாளில் புதிதாக சேர்த்துக் கொள்ளும் அணிகலன்கள். இதனைக் கருத்தில் கொண்டு தற்காலத்தில் கணவனை இழந்த பெண்கள் திருமாங்கல்யத்தையும், கால்விரலில் அணியும் மெட்டியினை மட்டும்

நெரூர் சதாசிவ பிரம்மேந்திராள் அதிஷ்டானம்

தவிர்த்து மற்ற அணிகலன்களை அணிந்து கொள்கிறார்கள். தற்காலச் சூழலில் இதில் தவறேதும் இல்லை என்பதால் பெரியவர்கள் இந்த நடைமுறையை அனுமதிக்கிறார்கள். உறுதியான மனக் கட்டுப்பாடு என்பது மட்டுமே பெண்களுக்கான வேலி. இந்த மனக்கட்டுப்பாட்டினை ஆடை, ஆபரணங்களில்தான் வெளிப்படுத்த வேண்டும் என்று அவசியமில்லை. சம்பிரதாயத்தை மாற்றிக் கொள்வதில் தவறில்லை.

சேலம் - உத்தம சோழபுரம்

கல்யாணம் நடத்தி வைக்கும்

கரபுரநாதர்

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர் மூவரும் எப்பொழுதும் தங்களுக்குள் அடுத்தவர் ஆற்றலை அடக்குவதையே தங்களது குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இந்த முயற்சியில் இடைவிடாது இயங்கியதால் தென்னகச் சரித்திரத்தின் ஏடுகள் விறுவிறுப்பும், சுறுசுறுப்பும் நிறைந்த வீர நிகழ்ச்சிகளால் நிரப்பப்பட்டு சுவைமிக்கதானது. மாறி, மாறி மூவர் ஆண்ட பகுதியிலும் வில், கயல், புலிக்கொடி பறந்து வீரம் கண்டு சிலிர்த்துக் கொண்டது. அமிழ்தினும் இனிய தமிழால் தனது வீரம், ஈரம் இவற்றை புலவர்கள் பாட, இவர்களது போர்க்கருவிகளுக்கு ஓய்வே இல்லாமல் போனது. புலவர்களும் இவர்களை விடவில்லை. போற்றியும், தூற்றியும் இலக்கியத்தின் பக்கங்களை நிரப்பினார்கள். “நீ மட்டும் தோற்றுவிட்டால் உனது தோளில் ஆடிடும் வெற்றி மாலை, பொதுமகளிரின் காலடிபட்டு கசங்கி விடும். பிறகு நீ இருப்பதும் ஒன்று. இறப்பதும் ஒன்று” என்று பாட்டால் தூண்டிவிட என்னென்ன விளைவுகள் நேர்ந்திருக்கும்!

ஆண்பாற் புலவர்கள், இப்படி அரசர்களை வீரத்தின் விஸ்வரூபத்தை கண்டு களிப்புற, பெண்பாற் புலவரான ஔவையார், கடும் பகை உணர்வு கொண்டவர்களை போர்க்களத்திலே மட்டும் சந்தித்துக் கொண்டவர்களை, திருமண விழாவில் நட்புடன் சந்திக்க வைத்து மனிதத்துவத்தின் மறுபக்கத்தை காண வைத்தாள். இருமுறை அவ்விதம் நடத்திக் காட்டியுள்ளாள். ஒரு முறை ஔவையாரும், கபிலரும் சேர்ந்து பாரிமகளிர் திருமணத்தை திருக்கோவிலூரில் மூவேந்தர்களின் முன்னிலையில் நடத்திக் காட்டியிருக்கிறாள். மறுமுறை சேலம் மாவட்டம், உத்தம சோழபுரத்தில் அமைந்துள்ள பெரியநாயகி சமேத கரபுரநாதர் திருக்கோயிலில் சேரனின் முன்னிலையில் சோழனுக்கும், பாண்டியனுக்கும், கொங்கு நாட்டின் ஏழைப் பெண்களை மணம் முடித்துவைத்து சாதித்தாள். எப்படி இவை சாத்தியப்பட்டன?

புலவர்களின் மீது கொண்ட ஆழ்ந்த பற்று, தமிழ்மீது கொண்ட பாசம், இறைவன் மீது கொண்ட அளவற்ற பக்தி ஆகியவையே இந்த மூவரையும் ஓரிடத்தில் கட்டி நிற்க வைத்த உத்தி.

மாப்பிள்ளையாக வந்த வீரபாண்டியன் தங்கிய ஊர் வீரபாண்டி ஆயிற்று. உத்தம சோழன் தங்கிய ஊர் உத்தம சோழபுரம் என்றாயிற்று. இந்த வீரபாண்டியன் சோழற்கு திறை செலுத்திக் கொண்டு சிற்றரசனாகத் திகழ்ந்தவன், உத்தம சோழனின் தந்தையாகிய கண்டராதித்தர் காலத்தில் பாண்டிய நாட்டில் தனியரசு புரியத் தொடங்கினான். இதனை பாண்டிய வரலாற்றில் சதாசிவப் பண்டாரத்தார் தெரிவிக்கின்றார்.

ஔவையார்

பாண்டியன்

சேரன்

சைவ சமய வரலாற்றில் இடம் பெற்ற கண்டராதித்தருக்கும், செம்பியன்மாதேவிக்கும் பிறந்த ஒரே மகனான உத்தம சோழன் தன் தாயுடன் சேர்ந்து ஆற்றிய சைவ சமய வளர்ச்சிக்கும், திருப்பணிகளுக்கும் ஈடு இணையே கிடையாது. பல்லவர்கள் காலத்தில் 375 என்ற எண்ணிக்கையில் இருந்த திருக்கோயில்களை சோழர்கள் காலத்தில் 3000 கோயில்களாக மாற்றிய பெருமையில் இவனுக்கு பெரும் பங்குண்டு. இந்த வீர பாண்டியனை போர்க்களத்தில் தலையைக் கொய்து மதுரையைக் கைப்பற்றியதால் உத்தம சோழன், (ஆட்சியாண்டு கி.பி. 970-985) தன் பாட்டன் முதலாம் பாரந்தகனைப் போல் 'மதுராந்தகன்' என்னும் பட்டப் பெயரினை புனைந்து கொண்டான்.

இருங்கோளர் மகள் வானவன் மாதேவியின் வளைக்கரத்தை சோழன் இத்திருமணத்தில் பற்றியதால், கொங்கு நாட்டில் வானவன்மாதேவி என்ற ஊர் உருவாயிற்று. மண விழாவிற்கு வரும் சேரனை மணமகள்களுக்கு சீராக பால் சுரக்கும் ஆடு ஒன்றினைக் கொண்டுவர ஔவையார் கட்டளையிட, அவன் பொன்னாலான ஆடு ஒன்றினையே பரிசாக வழங்கி ஔவையாரின் அன்பிற்கு பாத்திரமானான்.

திருமணம் நடந்தேறிய கையோடு, மூவேந்தர்களும் ஔவையாரை சீண்டி விட்டு மகிழ எண்ணி, "தாயே! திருமணத்திற்கு திருமணி முத்தாற்றில் பாடி, பாலும், நெய்யும் வரவழைத்தாய். மாரியைப் பொன் மாரி பொழிய வைத்தாய். பருத்தியை ஆடையாக காய்க்க வைத்தாய். வயலில் அரிசியாகவே வரவழைத்தாய். எங்கே இந்த காய்ந்து போன பனந்துண்டினை காயாமல் தவிர்க்க வைக்க உன்னால் பாட முடியுமா?" என்று கேட்டனர்.

உடனே ஔவையாரும்,

"திங்கட் குடையுடைச் சேரனும், சோழனும்,
பாண்டியனும்
மங்கைக் கருகிட வந்துநின் றார்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை
சலசலத்து
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனி
சிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்
துண்டமே."

- என்று பாட காய்ந்த பனந்துண்டு துளிர்த்து பச்சை மரமாகி மூன்று பாகங்களை உடைய நுங்காக மூவேந்தர்களுக்கும் ஆளுக்கொரு நுங்கு தந்து வியப்பில் ஆழ்த்தியது!

மாப்பிள்ளைகளான சோழனையும் பாண்டியனையும் ஆசீர்வதித்துப் பாடுகின்றாள் ஔவை. "எம்மிறைவா! நான், சோழ, பாண்டியனை வாழ்த்திய வாய்மொழி காலத்திற்கும் இங்கே, இனி திருமணம் புரிந்து கொள்பவர்களை ஆசீர்வதிக்கட்டும். உன் திருமுன் நடைபெறும் அத்திருமணங்கள் தடையேதுமின்றி சிறப்பாக நடந்தேறட்டும். இத்தலம் இன்றுபோல் என்றும் திருமணக் களையோடு திகழ வேண்டும் என்று உன் திருமுன் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்" என்று பாடி வரம் வாங்கித் தந்துள்ளாள்.

இந்த ஔவையார் நாம் போற்றி வழிபடத் தோதாக திருக்கோயில் முன் நின்று அருள் புரிகிறாள். பாரி மகளிர் திருமணம் இத்தலத்தில் நடைபெறவில்லை என்பதை ஔவையாரின் கவிதைத் திரட்டும், புறநானூற்று செய்யுளும் உறுதிப்படுத்துகின்றன. ஆனாலும் அதற்கு ஒப்பான, அதற்கும் மேலான திருமணங்களை இங்கே நடத்தியிருக்கிறாள் என்பதும் மெய்ப்பிக்கப்படுகின்றன.

அற்புதங்கள் பல நடந்த ஆலயத்துக்குள் பிரவேசிக்க ஐந்து நிலை ராஜகோபுரத்திற்குள் நுழைகின்றோம். மகாமண்டப நுழைவு வாயிலின் மேல் சுவரிலுள்ள சிறிய மண்டபத்தில் சேர, சோழ, பாண்டியர், கரதூஷணன், குணசீலன், திருமூலர், கரடிச் சித்தர், ஔவையார், நாரதர், அருணகிரிநாதர் மற்றும் திருநாவுக்கரசர் பிரதிமைகள் நம்மை வரவேற்றபடி நிற்கின்றனர்.

வலம் வரும்பொழுது பழைய முறைப்படி சந்திர பகவானுக்கு சந்நதி இல்லை. இந்த இடத்திலிருந்து ராஜ கோபுரத்தை நிமிர்ந்து பார்த்தவர்கள் சற்றே அதிர்ந்து தான் போவார்கள். ஒரு பெண்ணின் சிற்பம்

கோபுரச் சுற்றினை தோள்களில் தாங்காமல் திரும்பி நின்று தனது மென்மையான மார்பகங்களால் தாங்கி நிற்கின்றாள்!

கன்னி மூலை கணபதிக்கு அடுத்து பஞ்சலிங்க சந்நதியில் கரிகாலன் காலத்து சின்னஞ்சிறு நந்தி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அருணகிரிநாதரால் பாடப்பெற்ற ஆறுமுகக் கடவுள், வள்ளி-தெய்வானையோடு திருக்காட்சியளித்து அருள்பாலிக்கின்றார். அதை அடுத்து ஐயப்பன், கரடிச் சித்தரின், சந்நதிகளைக் காணலாம். கரடி சித்தர், கரபுரநாதருக்கு தனது ஆத்மாவையே நிவேதித்து தவமிருப்பவர், நாரதர் கேட்டுக்கொண்டபடியால் திருமண இடத்திற்கு வந்து கலாட்டா செய்து கலகலப்பூட்ட கரடி உருவில் கோயிலுக்குள் நுழைய உண்மையாகவே கரடி வந்துவிட்டதாகப் பயந்து, மக்கள் அடித்து துரத்த, சித்தர் சிவனை நோக்கி தஞ்சமடைய ஓடினார். சிவன் அப்பொழுது அவருக்குக் காட்சியளித்து “சித்தனும், சிவனுமாக இங்கேயே தங்கி இரு” என்று வரமருள வழக்கப்படி நாரதரின் கலகம் நன்மையில் முடிந்தது.

கரடிசித்தர்

சித்தர் சந்நதிக்குப் பின்புறம் அமைந்துள்ள வீரபத்திரர் சந்நதி அருகே சிவலிங்கத் திருமேனியை தரிசிக்கலாம். அண்டம் ஒரு அணுவாக, அணுவே ஒரு அண்டமாக எத்தனையோ தலைமுறையைச் சேர்ந்த மன்னர்கள் வழிபட்ட அந்த சின்னஞ்சிறு சிவலிங்கம் ஒடுங்கிய பிரமாண்டமாகக் காட்சியளிக்கிறது. அருகே தலமரமாகிய வில்வமரம், ஏகப்பட்ட கோரிக்கைகளுக்கு அடையாளமாக வளையல்கள், தூளிகள், மஞ்சக்கயிறு மாலைகள் சகிதம் காட்சியளித்தது.

கோஷ்டத்தில் பிரம்மா, சிவதுர்க்கை, திருவருள் வழங்க, சண்டிகேஸ்வரர், தீர்த்தக் கிணறு, பைரவர், சனிபகவான், சூரிய பகவான் என அடுத்தடுத்துக் காணலாம். திருச்சுற்றுகளில் பெரிய பெரிய மீன் சின்னங்கள் பாண்டியனை நினைவுறுத்துகின்றன. மூவரும் மாய்ந்து, மாய்ந்து திருப்பணிகள் செய்வித்திருப்பதை சின்னங்கள் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றன. கோயில் வளாகத்தில் சில கல்வெட்டுத் தகவல்கள் தென்படுகின்றன.

மகா மண்டபத்திற்குள் நுழைந்தவுடன் ஒட்டுமொத்தமாக ஒரு சிவாலயக் காட்சி கண்முன்னே விரிகின்றது.

கொடி மரம், நந்தி தேவர், நவகிரக மேடை, அம்மன் சந்நதி, நடராஜர் சந்நதி அர்த்த மண்டபம், கருவறை என நமது பார்வை கடைசியாக மூலவர் மேல் பட்டு நிலைத்து நிற்கின்றது. நந்தியின் உருவ அமைப்பு பெரிதாக இருந்தாலும் அது பழமையின் பெருமையை அழகுறக் காட்டி நிற்கிறது. கள்ளம் கபடமற்ற அகன்ற நீள் விழிகளை உடைய கன்றுக்குட்டியின் உயிரோட்டமான முக அமைப்பு! நந்திக்கு அருகே உள்ள தூணில் ஒரு பக்கம் மானுடனையும், மறுபக்கம் தடி ஊன்றிய கிழவனையும் காணலாம். இந்தச் சிற்பங்களின் பின்னணியில் மகா மண்டபம் உருவான கதை இருக்கிறது.

கி.பி. 16ம் நூற்றாண்டில் விஜயநகர அரசர் கிருஷ்ண தேவராயர் காலத்தில் உத்தம சோழபுரத்தைச் சேர்ந்த உத்தம சோழ செட்டி ஆதித்த தேவன் என்கிற மிளகு வியாபாரி உளுந்தூர்பேட்டை சந்தையில் மிளகு விற்க மூட்டைகளுடன் பயணப்பட்டான். வழியில் சிவபெருமான் கிழ ரூபத்தில கையில் தடி, கமண்டலம், கக்கத்தில் இடுக்கிய வேதங்களுடன் உத்தம செட்டியை வழி மறித்து இரண்டே இரண்டு மிளகு மட்டும் கேட்க, செட்டியார் இவை உளுந்து மூட்டைகள் என்று பொய் கூறிவிட்டு நிற்காமல் சென்றார். சந்தையை அடைந்து மூட்டையை விற்பனைக்காக பிரிக்க மிளகெல்லாம் உளுந்தாக மாறி இருந்தது! எல்லோர் மூட்டையும் இவ்விதமே மாறி இருக்கக்கண்டு பதட்டப் பட்டனர். அப்பொழுது

தூண் சிற்பம்

அசரீரி வானில் ஒலித்து நடந்ததைக் கூற, தன் தவறுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டு உத்தம செட்டி சிவனிடம் மன்றாடினார். பிறகு எல்லாம் பழையபடி மிளகாக மாற அதை விற்று வந்த பணத்தைக் கொண்டு மகாமண்டபம் எழுப்பியதுடன், தேவஸ்தான இறையிலியாக சேலம் நாட்டின் சில ஊர்களின் நன்செய், புன்செய் நிலங்களையும், உத்தம சோழபுரத்தின் மகமைகளையும் கோயில் திருப்பணிக்கு, திருமேனிச் சாத்து, திருவிளக்கு, அமுதுப்படி இவற்றிற்கு அளித்துள்ளான். மேலும் உத்தம சோழன் வெளியிட்ட, நடுவில் புலியுருவமும், ஓரத்தில் உத்தம சோழன் என்ற வடமொழியும் பொறிக்கப்பட்ட முத்திரைக் காசுகளையும் காணிக்கையாக செலுத்தியுள்ளான்.

தனி சந்நதியில் பெரியநாயகியம்மன் திருக்காட்சியளிக்கின்றாள். ஒரே இடத்தில் நின்றவாறு இருவரையும் தரிசிக்கும் அமைப்பு இங்கே இருப்பதால் அம்மன் சந்நதிக்கு முன்பு திருமணங்கள் நடைபெறுகின்றன. இல்லறம், நல்லறமாக நடக்க துணை புரிகின்றாள் அன்னை.

அர்த்த மண்டபத்தூண்கள் தலபுராணத்தையும் சிற்பங்கள் மூலம் சொல்கின்றன. ஒரு தூணின் மேற்புறம் சோழன் புலிக்கொடியுடனும், சேரன் கீழ்ப்புறம் விற்கொடியுடனும் நின்றவாறு இறைவனை வழிபடுகிறார்கள். மற்றோர் தூண் புலிக்கால் முனிவர் பூஜித்ததை விவரிக்கிறது. மேலும் ஐயப்பன், ஒரு தலை-இரு உடல் யானை, காளை ஆகியவையும் தூண்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கருவறைக்குள் திருக்காட்சியளிக்கும் லிங்கத் திருமேனி வலப்புறமாக சாய்ந்திருக்கிறது. குணசீலன் என்ற அந்தண சிறுவன் மாலை சாத்தி வழிபடத் தோதாக திருமுடியை சாய்த்து, அருளியதால் முடிசாய்ந்த மன்னர் என்றும், ராவணனின் தம்பி கரதூஷணன் 1000 வருடங்கள் ஒற்றைக் காலில் நின்று தவமியற்றி இத்தலத்து இறைவன் அருள் பெற்றதால் கரபுரநாதர் என்றும் சோழ மன்னர்களின் மாநகராக துலங்கி இத்திருக்கோயிலில் சிறப்புற திகழ்ந்ததால் சோழீஸ்வரர் என்றும் இறைவன் திருநாமங்கள் பெற்றுள்ளார். மகாபாரத பீமனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஐந்து திருமேனிகளில் இத்தலத்து இறைவனும் ஒருவர். அப்பர் சுவாமிகளால் இத்தலம் பாடல் பெற்றது. மேற்புற சுவரில் பாடலின் ஒரு பகுதி கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தலத்தில் திருமணம் புரிந்துகொள்ள விரும்புபவர்கள் 9345263854 என்கிற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு மேலும் விவரங்கள் பெறலாம்.

இத்தலம் சேலத்திலிருந்து 5 கி.மீ. தூரத்தில் திருமணிமுத்தாற்றின் மேற்கே அமைந்துள்ளது.

– இறைவி

ஆனந்தம் அளித்திடும்

அவனி கந்தர்வ ஈஸ்வர கிருகம்

கல்வெட்டுகள் சொல்லும் கோயில் கதைகள் - கீழையூர்

மன்னுபெரும் பழுவூர் எனப்பெறும் மேலப் பழுவூரினைத் தலைமையிடமாகக் கொண்ட பழுவேட்டரையர்கள் மேலப்பழு வூரிலும், சிறு பழுவூர் எனப்பெறும் கீழப் பழுவூரிலும் ஐந்து சிவாலயங்களை எடுத்து அளப்பரிய சைவத் தொண்டினை ஆற்றிய வர்கள் ஆவர். கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயில் மட்டும் திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றது என்பதால் பழுவேட்டரையர் அரசு உதய மாவதற்கு முன்பே இருந்த பழங்கோயிலைப் பின்னாளில் பழுவேட்டரையர்கள் புதுப்பித்தனர் என்பதறியலாம். ஆலந்துறையார் கோயிலை ஒட்டி அலமந்த மறவனீஸ்வரம் எனும் சிறிய ஆலயம் பழவேட்டரையர்களால் புதிதாக எடுக் கப்பெற்ற ஒன்றாம். கீழப்பழுவூர் கோயில்கள் தவிர மேலப்பழுவூரில் ஊரின் மேற்குப் பகுதி யில் திருத்தோற்றமுடைய மகாதேவர் கோயில் என்ற சுந்தரேஸ்வரர் திருக்கோயில் உள்ளது. மேலப்பழுவூரின் கிழக்குப் பகுதி தற்காலத்தில் கீழையூர் என அழைக்கப்பெறுகின்றது. கீழை யூரில் ஒரே வளாகத்தினுள் இரண்டு சிவாலயங் கள் திகழ்கின்றன. இந்த இரட்டை கோயில்கள் பழுவேட்டரையர் கலையின் உச்சத்தைக் காட்டும் ஒப்பரும் கோயிலாக விளங்குகின்றன.

கீழையூரின் பழம்பெயர் அவனி இந்தர்வபுரம் என்பதாகும். திருச்சியிலிருந்து அரியலூர் அல் லது ஜெயங்கொண்டம் செல்லும் சாலையில் கீழையூர் உள்ளது. தஞ்சையிலிருந்து அரியலூர் செல்லும் சாலையில் உள்ள கீழப்பழுவூரிலிருந்து பிரியும் திருச்சி சாலையில், 2 கி.மீ. தொலை வில் கீழையூர் திகழ்கின்றது. முற்காலச் சோழர் கலையின் உன்னத சிறப்புக்கு சோழ மன்னர் கள் படைத்த ஆலயங்களில் உள்ள சிற்பங்கள் தவிர பழுவேட்டரையர்களும் கொடும்பாளூர் இருக்கும் வேளிர்களும் படைத்த ஆலயங்களில் சிற்பங்களும், காரணமாக உள்ளன. அந்த வகை யில் கீழையூர் இரட்டைக் கோயில்கள் உள்ள அவனிகந்தர்வ ஈஸ்வரகிருகம், உலக கலை வல்லோரால் பெரிதும் போற்றப் பெறுகின்ற ஒன்றாக விளங்குகின்றது.

கல்வெட்டுகள் இவ்வாலயத்தை அவனி கந்தர்ப்ப ஈஸ்வரகிருஹம் என்றும் அவனி கந் தர்வ ஈஸ்வர கிருஹம் என்றும் குறிப்பிடுகின் றன. மேலும் அதே கல்வெட்டுகள் தென்புறம் உள்ள சிவாலயத்தை தென்வாயில் ஸ்ரீகோயில் என்றும் வடபுறம் உள்ள சிவாலயத்தை வட வாயில் ஸ்ரீகோயில் என்றும் குறிப்பிடுகின்றன. அவனி கந்தர்வ ஈஸ்வர கிருஹம் என்ற பொதுப்

இரட்டைக் கோயில்

முது முனைவர்
குடவாயில்
பாலசுப்ரமணியன்

லிங்கத்தை தோளில் சுமக்கும் சிவன்

பெயருடன் திகழும் இந்த இரட்டைக் கோயில்கள் மேற்கு நோக்கிய வண்ணம் நிற்கின்றன. மேற்குதிசையின் மதிலில் தென்மேற்கு திசையை ஒட்டியவாறே பிரதான வாயிலான ராஜகோபுரம் விளங்குகின்றது. இந்த இராஜகோபுரம் மூன்று நிலைகள் கொண்டதாகும். இராஜகோபுர வாயிலில் வெளிப்புறம் இரண்டு துவாரபாலகர் சிற்பங்கள் இடம் பெற்று ஸ்ரீவாயிலைக் காத்து நிற்கின்றன. இரண்டு காவலர் சிற்பங்களும் பேரழகு வாய்ந்தவையாகும்.

தென்புறம் உள்ள தென்வாயில் ஸ்ரீகோயிலினைத் தற்காலத்தில் அகஸ்தீஸ்வரம் என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர். வடவாயில் ஸ்ரீகோயிலினை சோழீஸ்வரம் என்றும் அருணாசலேஸ்வரம் என்றும் இரு பெயர்களால் குறிப்பிடுகின்றனர். இரு சிவாலயங்களுக்கும் பொதுவான ஒரே திருச்சுற்று அமைந்துள்ளது. அதில் இரண்டு ஆலயங்களுக்கும் பொதுவான பரிவாராலயங்கள் சிறிய அளவில் அமைந்துள்ளன. தென்கிழக்கே கணபதியார் கோயிலும், மேற்கே சுப்பிரமணியர் கோயிலும், கிழக்கே சண்டீஸ்வரர் கோயிலும், தெற்கே சப்தமாதர் கோயிலும் அமைந்துள்ளன. பிற்காலத்தில் எடுக்கப்பெற்ற தனி அம்மன் கோயில் வடபுறம் உள்ளது.

அகஸ்தீஸ்வரம் எனும் தென்புற சிவாலயத்தின் முன்புறம் தரையில் படுத்த நிலையில் இடபமும், அதனருகே பலிபீடமும் உள்ளன. இந்த இடபமும், இக்கோயிலின் மகாமண்டபத்துள் திகழும் இடபமும் பேரழகு வாய்ந்தவையாகும். இவை இரண்டும் பீடத்தின் மேல் அமையாமல் தரையில் அமர்ந்த கோலத்தில் இருப்பதால் அவை உயிருள்ள காளைகள்தாம் என்னும் அளவு பார்ப்போரை மயங்க வைக்கின்றன. தென்வாயில் ஸ்ரீகோயிலுக்குப் பிரதான வாயில் தென்புறம், சிறிய முன் மண்டபத்துடன் உள்ளது.

இச்சிவாலயத்தின் மகா மண்டபம் முழுவதையும் சிம்மத் தூண்களே தாங்கி நிற்கின்றன. பல்லவர் கால சிம்மத் தூண்களின் கலைத் தாக்கம் இங்கு மிளிர்வதைக் காணலாம். மகா மண்டபத்தில் இடம் பெற்றுள்ள கங்காதரமூர்த்தி, நான்முகன், சூரியன் என்ற மூன்று சிற்பப் படைப்புகளுக்கு ஈடாக எதையும் சொல்ல முடியாது. வானத்திலிருந்து இறங்கும் விண்ணக கங்கை நல்லாளை தன் ஒற்றைச் சடையை ஏந்தி சிவபெருமான் தாங்கி நிற்கிறார். நதிமகள் ஒருத்தியை ஈசன் தழுவுவது கண்ட உமாதேவி ஊடல் கொண்டு பரமனைவிட்டு விலகிச் செல்ல முற்படுகிறாள். ஈசனோ தன் இடக்கரத்தால் தேவியை விலகாதவாறு அணைத்த வண்ணம் வலக்கரத்தால் அவளை வருடும் காட்சி உயிர்ப்புடைய ஒன்றாம். கருவறையில் அகத்தீஸ்வரர் மூலவராக இலிங்க வடிவில் காட்சி நல்குகிறார். முன் மண்டபத்தில் சிம்மத் தூண்களுக்கு இடையே நின்றவாறு சிவனாரைக் காண்பது ஒரு சுகானுபவமாக இருக்கும்.

தென்வாயில் ஸ்ரீகோயிலின் கோஷ்டங்களில் வடபுறம் நின்ற கோல பிரம்மனும், கிழக்குத் திசை கோஷ்டத்தில் நின்றகோல முருகனும், தென்புற கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்திக்குப் பதிலாக நின்றகோல சந்திரசேகரரும் இடம் பெற்றுள்ளனர். இது பொதுவான கோஷ்ட அமைப்புகளிலிருந்து மாறுபட்ட ஒன்றாம். கோஷ்டங்களின் மகர தோரணங்கள் தனிச் சிறப்புடையவையாகும். அவற்றைக் காண்போர் அவை கல்லில் வடித்தவை என நம்ம மறுப்பர். உலோகத்தால் வார்க்கப்பட்ட படைப்பெனவே

நின்ற கோலத்தில் முருகன்

முருகன்

ஜடா மகுடத்துடன் தட்சிணாமூர்த்தி

நந்தி

அவை காட்சி நல்குகின்றன. மகரதோரணத்தின் நடுவே திகழும் யானை உரித்த தேவர் காட்சியும், அரவு தாங்கி ஆடும் அண்ணலின் கோலமும் உலக கலை வல்லோரால் வியந்து வியந்து போற்றப் பெறுகின்ற தன்மை பயத்தவையாம். ஸ்ரீவிமானத்தின் மேலே காணப்பெறும் சிற்பங்களில் இரண்டு குறிப்பிடத்தக்கவை. ஒரு சிற்பத்தில் சிவபெருமான் அமர்ந்தவாறு தோளில் சிவலிங்கம் ஒன்றை சுமந்து காட்சி நல்குகிறார். இது தன்னைத்தானே அர்ச்சிக்கும் மூர்த்தியான சதாசிவ வடிவமாகும். உருவம், அருஉருவம் (இலிங்கம்), அருவம் என மூன்று நிலைகளையும் சூட்டும் வண்ணம் இத் திருவுருவம் அமைந்துள்ளது.

“தன்மேனி தற்சிவலிங்கமாய் நின்றிடுந்
தன்மேனி தானுஞ் சதாசிவமாய் நிற்குந்
தன்மேனி தற்சிவன் தற்சிவானந்த மாந்
தன்மேனி தானாகுந் தற்பரந்தானே” (1750)
“உருவும் அருவும் உருவோடருவும்
மருவு பரசிவன் மன்பல்லுயிர்க்குங்
குருவுமென நிற்குங் கொள்கையனாகுந்
தருவென நல்குஞ் சதாசிவன்தானே” (1763)

- எனத் திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிடும் திருவடிவு இதுவேயாகும். மேல்நிலையில் உள்ள நின்ற கோல வீணாதாரர் சிற்பமும் குறிப்பிடத்தக்கவொன்றாம்.

அகத்தீஸ்வரம் போன்றே சோழீச்சரமும் எல்லாவித அணி அலங்காரங்களும் பெற்று திகழ்கின்றது. இவ்வாலயத்து கோஷ்ட மூர்த்திகளும் சிறப்பு வாய்ந்தவையாகும். வடபுற கோஷ்டத்தில் அமர்ந்த கோலபிரம்மனும், கீழ்புற கோஷ்டத்தில் அமர்ந்தகோல முருகனும் தென்புற கோஷ்டத்தில் அமர்ந்தகோல தட்சிணா மூர்த்தியும் இடம் பெற்றுள்ளனர். அமர்ந்த கோல முருகப் பெருமானுக்குப் பின் புலத்தில் ஒளிப் பிழம்புகளுடன் திருவாசி காணப் பெறுகின்றது. தட்சிணாமூர்த்தியும் இங்கு வேறு எங்கும் காண இயலாத கோலத்தில் இடம் பெற்றுள்ளார். மற்ற ஆலயங்களில் உள்ள அவர்தம் திருவடிவங்களில் தலைமுடி, ஜடாபாரம் என்ற அணி அமைப்புடன்தான் திகழும். ஆனால், இங்கு ஜடா மகுட அலங்காரத்துடன் கையில் கொள்ளியும், புத்தகமும், அக்க மாலையும் தரித்தவராகக் காணப் பெறுகின்றார். பரிவாராலயத்து சப்தமாதர்களும், யோகீஸ்வரரும், கணபதியும் சோழர் கலையின், குறிப்பாகப் பழுவேட்டரையர் தம் கலைப்பாணியின் சிறப்பு முத்திரைகளாக விளங்குகின்றன.

ஆதித்த சோழன் காலந்தொட்டு வெட்டப்பெற்ற இவ்வாலயத்துக் கல்வெட்டுச் சாசனங்களில் ஊரின் பெயர், ஆலயத்தின் பெயர்கள், பழுவேட்டரையர்கள் அளித்த அளப்பரும் கொடைகள் ஆகியவை பற்றி விரிவுபட பேசுகின்றன.

மகர தோரணத்தில் கோஷ்ட மூர்த்தி

அகத்தீஸ்வரர்

பழுவேட்டரையன் குமரன் நக்கன், பழுவேட்டரையன் குமரன் கண்டன் என்பார் பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. இக்கோயிலின் தனியான முகமண்டபத்தின் நான்கு சிங்கத் தூண்களும், காலியூர் கலியுக நிர்மூலன் கங்க மார்த்தாண்டன், மறவன் மானதரன், அரையகன் அரையுளி என்ற நால்வரால் அமைக்கப் பெற்றவை என்ற செய்தியினை இங்குள்ள ஒன்பதாம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று கூறி நிற்கின்றது. அற்புதமான இக்கலைக் கருவூலம் உருவாகக் காரணமாகத் திகழ்ந்த பழுவேட்டரையர்களின் சிவபக்திக்கு ஈடு இணை ஏதுமில்லை. இராஜராஜசோழனின் பாட்டனின் தாயும், இராஜராஜனின் தேவியருள் ஒருவரான பஞ்சவன் மாதேவியும் பழுவேட்டரையர்களின் புதல்விகள் என்பது செப்பேடுகளும், கல்வெட்டுகளும் கூறும் வரலாற்றுத் தகவல்களாகும்.

இவ்வாலயத்துள் சென்று ஈசனை வழிபட்டு திரும்பும்போது பொன்னுலகம் புகுந்து மீண்ட உணர்வையே நாம் பெறுவோம்.

பக்தி ஒளிரும் தெய்வீக விளக்குகள்

கார்த்திகை தீபத் திருநாளை ஒட்டி, பலவகையான விளக்குகளில் ஒளியேற்றி பிரகாசத்தைப் பரப்புவது நம் வழக்கம். அந்த வகையில் நாம் ஏற்றும் சில விளக்குகளை இங்கே விளக்கமாகப் பார்க்கலாம்:

காமாட்சி விளக்கு: விளக்குகளில் காமாட்சி விளக்கு புனிதமானது. இது எல்லா வீடுகளிலும் இருக்க வேண்டிய விளக்கு. பூஜைக்கு முன் பூவும், பொட்டும் வைத்து மங்கலத்துடன் தீபம் ஏற்றி, தினமும் வழிபடத்தக்கது. பல குடும்பங்களில் பரம்பரை பரம்பரையாக காமாட்சியம்மன் விளக்குகளை பொன் போலப் போற்றிப் பாதுகாத்து வைத்துள்ளனர். சிலர் தம் முன்னோர்கள் ஏற்றிய காமாட்சியம்மன் விளக்குச் சுடர் தொடர்ந்து, நிலைத்து, எரியும்படி கவனித்துக் கொள்கின்றனர். புதுமனை புகும் போதும், மணமக்கள் மணப்பந்தலை வலம் வரும்போதும், எல்லா இருள்களையும் நீக்கியபடி, அருள் ஒளியை அனைவருக்கும் அருளியபடி முன்னால், பக்தியுடன் ஏந்திச் செல்லப்படும் விளக்கும் காமாட்சி அம்மன் திருவிளக்கே.

புதுப்பெண் புகுந்த வீட்டுக்கு வரும்போது, "நிறைநாழி" எனப்படும் படியில் நெல் வைத்து அதன் மீது காமாட்சி அம்மன் விளக்கு வைத்து அதில் தீபம் ஏற்றப்படும். பெண்ணுக்கு சீர் வரிசைகளை தரும்போது காமாட்சி அம்மன் விளக்கும், இரண்டு குத்து விளக்குகளும் அவசியம் வழங்கப்பட வேண்டும்.

குத்துவிளக்கு: குத்துவிளக்கும், காமாட்சியம்மன் விளக்கை போலப் புனிதமானது. செங்குத்தாக நிமிர்ந்து நேராக நிற்கும் விளக்கு (குத்து-நேர்) என்பதால் குத்துவிளக்கு என்ற பெயர் ஏற்பட்டது. இந்த விளக்கு பூஜையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஐந்துமுகக் குத்துவிளக்குகள் இரண்டு பூஜை அறையில் சுடர் விட்டு பிரகாசிக்குமானால் அங்கே மங்கலம் பொங்கும் என்பது ஐதீகம். ஓர் அங்குலம் முதல், பல அடிகள் உயரமுள்ள குத்து விளக்குகள், மிக அழகிய கலை நுட்பங்களுடன் கிடைக்கின்றன.

உச்சியில் அன்னம் வீற்றிருக்கும் குத்து விளக்குகளில் சில வழிபாட்டுக் குரியவையாகவும், சில அலங்காரத்திற்கு உரியவையாகவும் விளங்குகின்றன.

பாவை விளக்கு: ஒரு பெண் அகல் விளக்கை ஏந்திக் கொண்டிருப்பது போல் இருப்பது பாவை விளக்கு எனப்படுகிறது. இந்த வகை விளக்குகளை கடவுளின் முன் ஒளிதரும் விளக்காக பயன்படுத்தலாம்.

தீபங்கள் பதினாறு: தூபம், தீபம், புஷ்பதீபம் (பூ விளக்கு), நாத தீபம், புருஷா மிருகதீபம், கஜதீபம், ருயாஜத (குதிரை) தீபம், வியாக்ர (புலி) தீபம், ஹம்ஸ் (அன்னம்) தீபம், கும்ப (குடம்) தீபம், குக்குட (கோழி) தீபம், விருக்ஷ தீபம், கூர்ம (ஆமை) தீபம், நட்சத்திர தீபம், மேருதீபம், கற்பூர தீபம் என தீபங்கள் 16 வகைப்படும்.

தூக்கு விளக்குகள் ஒன்பது

1. வாடா விளக்கு
2. ஓதிமத்தூக்கு விளக்கு
3. தூண்டாமணி விளக்கு
4. ஓதிம நந்தா விளக்கு
5. கூண்டு விளக்கு
6. புறா விளக்கு
7. நந்தா விளக்கு
8. சங்கிலித் தூக்கு விளக்கு
9. கிளித்தூக்கு விளக்கு.

தொகுப்பு: **பரணி**

பிரதோஷங்கள் எத்தனை வகை?

சோமவாரம் எனப்படும் திங்கட்கிழமையில் சிவவழிபாடு செய்தல் மிக விசேஷம். அதோடு அன்றைய தினம் பிரதோஷ நாளாகவும் அமைந்தால் அன்று சிவ பூஜையும், பிரதோஷ நேரத்தில் சிவன் கோயிலில் வழிபாடும் செய்தல் பலகோடி புண்ணியத்தை தரவல்லது.

ஜாதகத்தில் மதி (சந்திரன்) நல்ல நிலையில் இல்லாதவர்கள் சோமவார பிரதோஷம் அன்று சிவன் கோயில்களில் அர்ச்சனைக்கு வில்வத்தளம் அளித்து வழிபட்டால் ஜாதகத்தில் உள்ள மதி மட்டுமல்ல ஜாதகரின் மதியும் (புத்தியும்) நன்றாகும்.

மொத்தம் 20 வகை பிரதோஷங்கள் உண்டு. அவற்றையும் அவற்றின் பலன்களையும் பார்ப்போம்.

1. தினசரி பிரதோஷம்

தினமும் பகலும், இரவும் சந்திக்கின்ற சந்தியா காலமாகிய மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரை உள்ள காலம் இது. இந்த நேரத்தில் ஈசனைத் தரிசனம் செய்வது உத்தமம் ஆகும். நித்தியப்பிரதோஷத்தை யார் ஒருவர் ஐந்து வருடங்கள் முறையாகச் செய்கிறார்களோ அவர்களுக்கு ‘முக்தி’ நிச்சயம் என்கிறது நமது சாஸ்திரம்.

2. பட்சப் பிரதோஷம்

அமாவாசைக்குப் பிறகான, சுக்லபட்சம் என்ற வளர் பிறை காலத்தில் 13வது திதியாக வரும் ‘திரயோதசி’ திதியே பட்சப் பிரதோஷம் ஆகும். இந்தத் திதியின் மாலை நேரத்தில் பட்சிலிங்க வழிபாடு (பறவையோடு உள்ள, பறவை சம்பந்தப்பட்ட லிங்கம் மைலாப்பூர், மயிலாடு துறை தலங்களில் உள்ளதுபோல்) செய்வது உத்தமம் ஆகும்.

3. மாதப் பிரதோஷம்

பவுர்ணமிக்குப் பிறகு வரும் கிருஷ்ணபட்சம் என்ற தேய்பிறை காலத்தில், 13வது திதியாக வரும் ‘திரயோதசி’ திதியே மாதப் பிரதோஷம் ஆகும். இந்த திதியின் மாலை நேரத்தில் ‘பாணலிங்க’ வழிபாடு (பல்வேறு லிங்க வகைகளில் பாண லிங்கம் ஒரு வகை) செய்வது உத்தம பலனைத் தரும்.

4. நட்சத்திரப் பிரதோஷம்

பிரதோஷ திதியாகிய ‘திரயோதசி திதி’யில் வரும் நட்சத்திரத்திற்கு உரிய ஈசனை பிரதோஷ நேரத்தில் வழிபடுவது நட்சத்திர பிரதோஷம் ஆகும்.

5. பூரண பிரதோஷம்

திரயோதசி திதி மட்டும் முழுமையாக உள்ள நாளில் கடைபிடிக்கும் பிரதோஷம், பூரண பிரதோஷம் ஆகும். இந்தப் பிரதோஷத்தின்போது ‘சுயம்பு லிங்கத்தை’த் தரிசனம் செய்வது உத்தம பலனைத் தரும். பூரண பிரதோஷ வழிபாடு செய்பவர்கள் இரட்டைப் பலனை அடைவார்கள்.

6. திவ்யப் பிரதோஷம்

பிரதோஷ தினத்தன்று துவாதசியும், திரயோதசியும் சேர்ந்து வந்தாலோ அல்லது திரயோதசியும், சதுர்த்தசியும் சேர்ந்து வந்தாலோ அது ‘திவ்யப் பிரதோஷம்’ ஆகும். இந்நாளன்று மரகத லிங்கேஸ்வரருக்கு அபிஷேக ஆராதனை செய்தால் பூர்வஜென்ம வினை முழுவதும் நீங்கும்.

7. தீபப் பிரதோஷம்

பிரதோஷ தினமான திரயோதசி திதியில் தீப தானங்கள் செய்து, ஈசனுடைய ஆலயங்களைத்

தீபங்களால் அலங்கரித்து ஈசனை வழிபட சொந்த வீடு அமையும்.

8. அபயப் பிரதோஷம் என்னும் சப்தரிஷி பிரதோஷம்

வானத்தில் ‘வ’ வடிவில் தெரியும் நட்சத்திர கூட்டங்களே, ‘சப்தரிஷி மண்டலம்’ ஆகும். இது ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில் வானில் தெளிவாகத் தெரியும். இந்த மாதங்களில் திரயோதசி திதியில் முறையாக பிரதோஷ வழிபாடு செய்து, சப்தரிஷி மண்டலத்தைத் தரிசிப்பதே அபயப் பிரதோஷம் என்னும் சப்தரிஷி பிரதோஷம் ஆகும். இந்த வழிபாட்டை செய்பவர்களுக்கும் ஈசன் அளவு பார்க்காமல் அருள் புரிவான்.

9. மகா பிரதோஷம்

ஈசன் விஷம் உண்ட நாள் கார்த்திகை மாதம், சனிக்கிழமை, திரயோதசி திதி ஆகும். எனவே சனிக்கிழமையும், திரயோதசி திதியும் சேர்ந்து வருகின்ற பிரதோஷம் ‘சனி மகா பிரதோஷம்’ ஆகும். இந்த மகா பிரதோஷத்தன்று சுயம்பு லிங்க தரிசனம் செய்வது மிகவும் உத்தமம் ஆகும். இந்நாளில் எமனும் இப்படி தரிசனம் கண்டிருக்கிறான் என்பார்கள்.

குறிப்பாக திருக்கடையூர், சென்னை வேளச்சேரியில் உள்ள ‘தண்டீஸ்வர ஆலயம்’, திருச்சி, மண்ணச்சநல்லூர் அருகே உள்ள ‘திருப்பைஞ்ஞீலி’ ஆலயம், குடவாசலில் இருந்து நன்னிலம் செல்லும் பாதையில் உள்ள ஸ்ரீவாஞ்சியம்’ ஆலயம், கும்ப கோணம்-கதிராமங்கலம் சாலையில் உள்ள ‘திருக்கோடிக் காவல்’ ஆலயம் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். மாசி மாதம் வரும் மகா சிவராத்திரிக்கு முன்னால் வரும் பிரதோஷமும், ‘மகா பிரதோஷம்’ எனப்படும்.

10. உத்தம மகா பிரதோஷம்

சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வளர்பிறையில், சனிக்கிழமையில் திரயோதசி திதியன்று வரும் பிரதோஷம் உத்தம மகா பிரதோஷம் ஆகும். இது மிகவும் சிறப்பும் கீர்த்தியும் பெற்ற தினமாகக் கருதப்படுகிறது.

11. ஏகாட்சர பிரதோஷம்

வருடத்தில் ஒரு முறை மட்டுமே வரும் மகா பிரதோஷத்தை ‘ஏகாட்சர பிரதோஷம்’ என்பர். அன்றைக்கு சிவாலயம் சென்று, எத்தனை முறை முடியுமோ, அத்தனை முறை ‘ஓம்’ என்ற பிரணவ மந்திரத்தை ஓதுவது பக்தர்களின் வழக்கம். பின், விநாயகரையும் வழிபட்டு, ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் வழங்கினால் பலவித நன்மைகள் ஏற்படும்.

12. அர்த்தநாரி பிரதோஷம்

வருடத்தில் இரண்டு முறை மகாபிரதோஷம் வந்தால் அதற்கு ‘அர்த்தநாரி பிரதோஷம்’ என்று பெயர். அந்த நாளில் சிவாலயம் சென்று வழிபட்டால், தடைப்பட்ட திருமணம் நடைபெறும். பிரிந்து வாழும் தம்பதி ஒன்று சேர்வார்கள்.

13. திரிகரண பிரதோஷம்

வருடத்துக்கு மூன்று முறை மகாபிரதோஷம் வந்தால் அது திரிகரண பிரதோஷம். இதை முறையாகக் கடைப்பிடித்தால் அஷ்ட லட்சுமிகளின் ஆசியும் அருளும் கிடைக்கும். இந்த பிரதோஷ வழிபாடு முடிந்ததும் அஷ்ட லட்சுமிகளுக்கும் பூஜை வழிபாடு செய்வது மிகவும் நல்லது.

14. பிரம்மப் பிரதோஷம்

ஒரு வருடத்தில் நான்கு மகா பிரதோஷம் வந்தால், அது பிரம்மப் பிரதோஷம். இந்தப் பிரதோஷ வழிபாட்டை முறையாகச் செய்தால் முன்ஜென்மப் பாவமும், தோஷமும் நீங்கி நன்மைகளை அடையலாம்.

15. அட்சரப் பிரதோஷம்

வருடத்துக்கு ஐந்து முறை மகா பிரதோஷம் வந்தால் அது அட்சரப் பிரதோஷம். தாருகா வனத்து ரிஷிகள், 'நான்' என்ற அகந்தையில் ஈசனை எதிர்த்தனர். ஈசன், பிட்சாடனர் வேடத்தில் வந்து தாருகா வன ரிஷிகளுக்குப் பாடம் புகட்டினார். தவறை உணர்ந்த ரிஷிகள், இந்தப் பிரதோஷ விரதத்தை அனுஷ்டித்து பாவ விமோசனம் பெற்றனர்.

16. கந்தப் பிரதோஷம்

சனிக்கிழமையும், திரயோதசி திதியும், கிருத்திகை நட்சத்திரமும் சேர்ந்து வரும் பிரதோஷம் கந்தப் பிரதோஷம். இது சூரனை சம்ஹாரம் செய்வதற்கு முன்னால் முருகப் பெருமான் மேற்கொண்ட பிரதோஷ வழிபாடு. இந்தப் பிரதோஷத்தில் முறையாக விரதம் இருந்தால் முருகன் அருள் கிட்டும்.

17. சட்ஜ பிரபா பிரதோஷம்

ஒரு வருடத்தில் ஏழு மகா பிரதோஷம் வந்தால் அது, 'சட்ஜ பிரபா பிரதோஷம்'. தேவகியும் வசுதேவரும் கம்சனால் சிறையிடப்பட்டனர். ஏழு குழந்தைகளை கம்சன் கொன்றான். எனவே, எட்டாவது குழந்தை பிறப்பதற்கு முன்பு ஒரு வருடத்தில் வரும் ஏழு மகா பிரதோஷத்தை முறையாக அவர்கள் அனுஷ்டித்ததால், கிருஷ்ணர் பிறந்தார். நாம் இந்த விரதத்தைக் கடைப்பிடித்தால் முற்பிறவி வினை நீங்கி பிறவிப் பெருங்கடலை எளிதில் கடக்கலாம்.

18. அஷ்டதிக் பிரதோஷம்

ஒருவருடத்தில்எட்டுமகாபிரதோஷவழிபாட்டை முறையாகக் கடைப்பிடித்தால், அஷ்டதிக் பாலகர்களும் மகிழ்ந்து நீடித்த செல்வம், புகழ், கீர்த்தி ஆகியவற்றை அருள்வார்கள்.

19. நவகிரகப் பிரதோஷம்

ஒரு வருடத்தில் ஒன்பது மகா பிரதோஷம் வந்தால், அது நவகிரகப் பிரதோஷம். இது மிகவும் அரிது. இந்தப் பிரதோஷத்தில் முறையாக விரதம் இருந்தால் சிவனின் அருளோடு நவகிரகங்களின் அருளும் கிடைக்கும்.

20. துத்தப் பிரதோஷம்

அரிதிலும் அரிது பத்து மகாபிரதோஷம் ஒரு வருடத்தில் வருவது. அந்தப் பிரதோஷ வழிபாட்டைச் செய்தால் பிறவி குறைபாடுகள் கூட சரியாகும்.

- கார்த்திக்

ராம நாம ஜபயோகம்

ஸ்ரீமத் ராமாயணத்தை ஆதியில் நான்முகனான பிரம்மாதான் இயற்றினார். நூறு கோடி ஸ்லோகங்களை கொண்டிருந்தது. யார் கேட்பார்கள் என்கிற ஐயமும் அவரிடம் இருந்தது. சரி சொல்வேமே என்று ராமாயண உபந்நியாசத்தை தொடங்கினார். சத்ய லோகத்தில்தான் முதலில் தொடங்கினார். சத்யலோகவாசிகளோடு வைகுண்ட வாசிகளும், கயிலாய கணங்களும் சேர்ந்து ராமாயண அமுதத்தை பருகினர். அப்போதுதான் திடீரென்று எல்லோருக்கும் ஓர் ஆசை தோன்றியது. இந்த நூறு கோடி ஸ்லோகங்களையும் நம் லோகத்திலேயே படித்து ஆனந்தமடையலாமே என்று நினைத்தனர்.

பிரம்மா ஆனந்தமுற்றாலும் நூறு கோடி ஸ்லோகங்களையும் யாருக்கென்று கொடுப்பது என்று கவலையானார். ராமாயண அமுதின் சுவை குறையாது பிரித்துக் கொடுக்கிறேன் என சிவபெருமான் முன் வந்தார். எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

நூறு கோடிகளை முப்பத்து மூன்று கோடிகளாக மூவருக்கும் கொடுத்தார். மீதியுள்ள ஒரு கோடியை முப்பத்து மூன்று லட்சங்களாக வகுத்தளித்தார். மிஞ்சிய ஒரு லட்சத்தையும் மூன்றாகப் பிரித்தார். ஆயிரம் ஸ்லோகங்கள் நின்றது. அதை முன்னூறாக பாகம் செய்ய நூறு தங்கியது. அதையும் பிரித்துக் கொடுங்கள் என்று கோரிக்கை வைக்க முப்பதாக மூவருக்கும் கொடுக்க பத்து ஸ்லோகங்கள் மிஞ்சியது. அதையும் ஏன் விட வேண்டும் என்று மூன்று லோக வாசிகளும் பிடிவாதம் செய்ய மும்மூன்றாக கொடுக்க ஒரேயொரு ஸ்லோகம் பாக்கியிருந்தது. அந்த ஸ்லோகத்தில் முப்பத்திரெண்டு எழுத்துக்கள் இருந்தன. சரி, அவர்கள் கேட்கும் முன்பு தானே கொடுத்து விடுவோம். நம் வேலை அதுதானே என்று பத்து பத்தாக மூவருக்கும் கொடுக்க இரண்டு எழுத்துக்கள் மட்டும் மலர்ந்த பூக்களாக மணம் கமழ்ந்தன.

இதை என்ன செய்வது? யாருக்கென கொடுக்க முடியும்? மூவரும் விட்டுக் கொடுக்க மறுக்கிறார்களே என்று யோசித்தார். தேவர்கள் ஒன்று சேர்ந்து அந்த இரண்டு எழுத்துக்களுமே பங்கு பிரித்தவருக்கு போய் சேரட்டும் என்று முழு மனதாக கொடுத்தார்கள். ஈசனும் ஆனந்தமாக, இதயப் பூர்வமாக, பிரேமையோடு அந்த இரண்டு எழுத்துக்களை எடுத்துக் கொண்டார். அந்த இரண்டு எழுத்துக்களும் எவை தெரியுமா? அதுதான் ராம எனும் நாமம். தாரக மந்திரம். ஒட்டுமொத்த ராமாயணத்தின் இதய ஸ்தானம்.

ஆஹா... கிடைத்து விட்டதே என தானே வைத்துக் கொள்ளாது அந்த கருணாமூர்த்தி காசித் தலத்தில் வந்தமர்ந்தார். கங்கா நதி தீரத்தில் அமர்ந்து ராம நாமத்தை பஜித்தபடி கிடந்தார். காசியில் வந்து மரிப்போரின் செவியில் தாமே சென்று ராம எனும் அந்த தாரக மந்திரத்தை ஓதி பிறவாமை எனும் முக்தி பதத்தை அடையச் செய்தார். நமது தென்னாட்டிலும் கூட தட்சிண

காசி, விருத்த காசி எனும் க்ஷேத்திரம் உண்டு. அதை விருத்தாசலம் என்று அழைப்பார்கள். அத்தலத்தில் மரிப்பவர்களின் ஆவி பிரியும்போது விருத்தாம்பிகை அவர்களை தம் மடியில் கிடத்தி புடவைத் தலைப்பினால் விசிறி மரணவலி இல்லாமல் செய்ய, விருத்தகிரீஸ்வரர் அவர்களின் காதில் ராம எனும் மந்திரத்தை ஓதி மோட்சத்தை கிடைக்கச் செய்கிறார்.

ஒவ்வொரு யுகத்திலும் இறைவனை அடைய ஒவ்வொரு மார்க்கங்கள் இருந்தன. யாகத்தினால் ஒரு யுகத்தினால், கடுமையான தவத்தினால் வேறொரு யுகத்திலும், யம, நியம, ஆசனம் மற்றும் அர்ச்சனையால் ஒரு யுகத்திலும் இறைவனை அடையலாம் என்று வகுத்து வைத்திருந்தார்கள். ஆனால், கலியுகத்தில் மட்டும் எந்தவொரு கடுமையான சாதனைகளும் செய்ய முடியாத சூழல் இருக்கும் என்பதையும் அன்றே அறிந்து வைத்திருந்தனர். அதனாலேயே மிக எளிய மார்க்கமான யாவரும் பின்பற்றும்படியான ஒரு மார்க்கத்தை பாகவதம் முதலான புராணங்களும், நாரதர், ஆஞ்சநேயசுவாமி, வியாசர் என்று மகரிஷிகள் உபதேசித்தனர். அந்த அற்புதமான மார்க்கமே நாம சங்கீர்த்தனம். நாம ஸ்மரணம் எனும் நாமத்தை மட்டும் ஜபித்தலாகும். அதற்காக கலியுகத்தில் ஆசாரமாகவும் ஒழுக்கமாகவும் இருக்கக் கூடாது என்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட ஒழுக்கமான நியதிகளையும் இந்த நாம ஜபம் தானாகக் கொடுக்கும் என்பது ரிஷிகளின் வாக்கு.

– ராமதாசன்

விஷக் காய்ச்சலை துரத்தும்

திருநீலகண்டப் பதிகம்

திருஞானசம்பந்தப் பெருமான் ஒரு முறை திருசெங்கோட்டிற்கு அடியார்களோடு வந்திருந்தார். அப்போது அந்தப் பகுதி முழுவதும் விஷக் காய்ச்சல் பரவியிருந்தது. மக்களும், இவருடன் சென்ற அடியார்களும் சொல்லொணா துயரத்திற்கு ஆளாயினர். திருஞானசம்பந்தப் பெருமான் மக்களின் இந்த துயரத்தைப் போக்குவதற்காக இறைவனை நோக்கி திருநீலகண்டப் பதிகம் என்று பாடி அருளினார். செய்வினை வந்து எமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம் என்று ஒவ்வொரு திருப்பதிகத்தின் இறுதியிலும் வேண்டியபடி அமைந்த பதிகம் இது. கொரோனா வைரஸ் என்று நாம் எதிர்கொண்டிருக்கும் இந்த தொற்று நோய் காலத்தில் தினமும் வீட்டிலேயே அமர்ந்து ஈசனை மனதில் நிறுத்தி சொல்லியபடி இருந்தால் விரைவிலேயே ஈசனின் திருவருளால் இவ்வுலகம் விரைவிலேயே மீண்டெழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

திருஞானசம்பந்தர் அருளிய திருநீலகண்ட பதிகம்

அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றோ
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்

காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்றெரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக்கொய்து மலரடி போற்றுதும்நாம் அடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்

முலைத்தட மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டெமை ஆண்டவிரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவை உடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்

விண்ணுலகாள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும் தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர் உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்

மற்றுஇணை இல்லா மலை திரண்டன்ன திண் தோளுடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளாதொழிவதும் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்து உம் திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம்

மறக்கு மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ் பிழையாத வண்ணம்
பறித்த மலர் கொடுவந்துமை ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம்

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்தும் கழலடிக்கே
உருகிமலர் கொடுவந்துமை யேத்துதும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்து அருள் செய்தவரே
திருவிலித் தீயினை தீண்டப்பெறா திருநீலகண்டம்

நாற்றமலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாம் அடியோம்
சீற்றமதாம் வினை தீண்டப்பெறா திருநீலகண்டம்

சாக்கியப் பட்டும் சமண் உருவாகி உடை ஒழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழி தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்

பிறந்த பிறவியில் பேணி எம் செல்வம் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர்கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே.

மேலூர்

ந.பரணிகுமார்

மழலை வரம் தரும் மகாதேவி

சிவாலயமாக இருந்தாலும், அங்கு அருளும் அம்பிகையின் பெயரிலேயே அந்த ஆலயம் புகழடைந்திருக்கும். அதாவது, அம்மனின் பெயரைச் சொல்லியே அக்கோயிலை குறிப்பிடுவார்கள். மதுரை மீனாட்சியும், திருவானைக்கா அகிலாண்டேஸ்வரியும் உதாரணங்கள். இவ்வாறு இறைவியின் நாமத்தால் குறிப்பிடப்படும் ஆலயங்களுள் சென்னையை அடுத்துள்ள மேலூர் சிவன் கோயிலும் ஒன்று.

அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழ்பவளான பராசக்திதான் பலவித காரணங்களுக்காக பல்வேறு வடிவங்களோடு பல்வேறு தலங்களில் அருள்கிறாள். பராசக்தியிலிருந்து ஆதிசக்தியும், ஆதிசக்தியிலிருந்து இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சக்திகளும் தோன்றி உலகைப் படைத்து, இயக்கி இறுதியில் வீடு பேறு அருள்வதாக தேவிபாகவதம் கூறுகிறது. இப்படி முப்பெரும் நிலைகளில் இயங்கி, அகில உலகையும் காத்தருளும் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியின் அமர்விடமே முக்கோணங்கள் நிறைந்த ஸ்ரீசக்ரம்தான்.

இச்சா சக்தி, ஞான சக்தி, க்ரியா சக்தி ஆகிய முப்பெரும் சக்திகளுக்குரிய திருத்தலங்களாக மேலூர், திருவொற்றியூர், வடதிருமுல்லைவாயில் ஆகியன திகழ்கின்றன. அவற்றுள் இச்சா சக்தியாக திருவுடையம்மன் அருள் வழங்கும் தலம், மேலூர். சென்னை & மீஞ்சூர் சாலையில், சென்னையிலிருந்து சுமார் 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது மேலூர். சாலையின் இடப்புறம் அருள்மிகு திரிபுரசுந்தரி உடனுறை அருள்மிகு திருமணங்கீசர் ஆலயம் என எழுதப்பட்ட அலங்கார வளைவு நம்மை வரவேற்கிறது. இவ்வளைவிலிருந்து சுமார் 1 கி.மீ தொலைவில் ஆலயம் அமைந்துள்ளது.

ஆலயத்துள் நுழைந்ததும் வலதுபுறத்தில் அம்பாள் சந்நதி, தெற்கு நோக்கி அமைந்துள்ளது. அன்னை தன் மேலிருகரங்களில் பாசாங்குசத்தைக் கொண்டிருக்கிறாள். கீழிரு கரங்களில் அபய & வரத முத்திரைக் காட்டி அருள் காட்சித் தருகின்றாள். தேவியின் கண்களில் ஒளிரும் கருணை நம் மனதை குளிர்விக்கிறது. பெரிய ஆலயங்களில் அருளும் அம்பிகையின் அலங்கார அணிகளோ, ரத்னாபரணங்களின் ஜொலி ஜொலிப்போ இல்லையென்றாலும் தஞ்சமென நாடி வரும் அடியவரை எக்காலமும் காப்பேன் எனச் சொல்லாமல் சொல்கிறது, அன்னையின் ஆனந்தப் புன்னகை பூத்த திருமுகம். உலகத்தில் உள்ள சகல நன்மைகளையும் அருளும் இவளை மங்களநாயகி தாயே என பக்தர்கள் பாசத்தோடு அழைத்து தொழுகிறார்கள். அன்னையின் சந்நதியில் பக்தைகள் லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்வது வழக்கம். இதனால் தங்களின் வாழ்வு வளம் பெறுவதாக சொல்கிறார்கள், பலனடைந்த பக்தர்கள். அம்பாளின் திருமுன் சிம்மமும், பலிபீடமும், கொடிமரமும் காணப்படுகின்றன.

அம்பாள் சந்நதிக்கும் கொடிமரத்துக்கும் இடையில் அமைந்துள்ள அழகிய மண்டபத்தை மிளகு மாற்றியான் மண்டபம் என குறிப்பிடுகிறார்கள். அதற்குப் பின்னணியில் ஒரு சுவையான சம்பவம் இருக்கிறது. நாயக்க மன்னராட்சிக் காலத்தில் மிளகுக்குச் சுங்கவரி வசூலிக்கும் வழக்கம் இருந்தது. இப்பகுதிக்கு ஒரு வணிகன் மிளகு மூட்டைகளுடன் வந்தான். வரி செலுத்த விரும்பாத அவன் தன் மூட்டைகளில் பயறு இருப்பதாக அதிகாரிகளிடம் பொய் சொன்னான்.

சந்தைக்குச் சென்று மூட்டைகளைப் பிரித்துப் பார்த்த வணிகன், மிளகு மூட்டைகள் பயறு மூட்டைகளாக மாறி இருந்ததைக் கண்டு பதறித்துடித்தான். பின் மனம் வருந்தி இச்சா சக்தியாக அருள்புரியும் திரிபுரசுந்தரியிடம் மன்னிப்பு கேட்டான். மனம் திருந்திய வணிகனுக்கு அருள்புரிந்திட திருவுளம் கொண்ட தேவி பயறு மூட்டைகளை மீண்டும் மிளகு மூட்டைகளாக மாற்றினாள். அன்னையின் மகிமையை அனுபவ பூர்வமாய் உணர்ந்த அந்த வணிகன் சுங்கவரியாக செலுத்த வேண்டிய பணத்தை ஆலயத்திற்கு காணிக்கையாகச் செலுத்தினான். அம்பாள் சந்நதிக்கு முன் மண்டபத்தையும் கட்டிக் கொடுத்தான். அதுதான் மிளகுமாற்றியான் மண்டபம்.

திருமணங்கீசர், அம்பிகை ஆலயத்திற்கு மேற்கே தனிச்சந்நதியில் கிழக்கு நோக்கி அருள்கிறார். இவரை சுகந்தபுரீஸ்வரர் என்றும் அழைக்கிறார்கள். ஆதிகாலத்தில் அடர்ந்த வனப்பகுதியாக இருந்த இந்த இடத்தில் செல்வந்தர் ஒருவரின் பசு தினமும் காட்டில் மேய்ந்து விட்டு வீட்டிற்கு வந்து தன் கன்றுக்கு மட்டும் பால் கொடுத்துவிட்டு மீண்டும் காட்டிற்குச் சென்று விடுமாம். இதைக் கேள்விப்பட்ட அந்தச் செல்வந்தர் தானே அதன் காரணத்தைக் கண்டறிய பசுவைப் பின் தொடர்ந்தார். அங்கே அவருக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. பசு செல்லும் திசையிலிருந்து நாகலிங்கப்பூவின் நறுமணம் வீசியது. ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்து, அங்கிருந்த புற்றின் மேல் பசு பால் சொரிவது கண்டு வியந்தார். உடனே புற்றை இடித்துப் பார்த்தார். அதில் சிவலிங்கம் வெளிப்பட்ட



தைக் கண்ட அவர், ஆனந்தத்தோடு அந்த இடத்திலேயே அரனுக்கு ஒரு ஆலயம் அமைத்து வழிபட்டார். லிங்கம் இருந்த பகுதியைச் சுற்றி நாகலிங்கம் மற்றும் சரக்கொன்றை மரங்கள் இருந்தனவாம். மலர்களின் சுகந்தம் சூழ அமர்ந்திருந்த இப்பெருமானை, மக்கள் சுகந்தபுரீஸ்வரர் என அழைத்தனர். காலப்போக்கில் இறைவன் திருமணங்கீஸ்வரர் ஆனார். இப்போதும் மண்புற்றுதான் சிவலிங்கமாக உள்ளது. அதன்மேல் செப்புக் கவசம் சார்த்தி அபிஷேக ஆராதனைகள் செய்து வருகின்றனர்.

உள் பிராகாரத்தில் சூரியன், பைரவர், வீரபத்திரர், விநாயகர், சுப்ரமண்யர், காசி விஸ்வநாதர், விசாலாட்சி, காளத்திநாதர், நால்வர், மகாலட்சுமி ஆகியோர் அருள்கிறார்கள். கருவறை கோஷ்ட தேவதைகளாக நின்ற கோலத்தில் கணபதி, தவக்கோல தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, விஷ்ணு, துர்க்கை ஆகியோர் தரிசனம் தருகின்றார்கள். சுவாமி சந்நதிக்கு முன்புறம் 24 தூண்கள் கொண்ட கருங்கல் மண்டபம் ஒன்று இருக்கிறது. தூண்களில் அதியற்புதமான சிற்பங்களை காணலாம். மண்டபத்தின் வடகோடியில் உற்சவ மூர்த்திகளை தரிசிக்கலாம். குறிப்பாக நடராஜ மூர்த்தி அழகு, பேரழகு!

முதலில் செங்கல் கட்டடமாக இருந்த ஆலயம் சோழர்காலத்தில் கற்றளியாக மாற்றிய மைக்கப் பட்டிருக்கிறது. இத்தலத்திற்கு வருகை தந்த பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியத்தேவர் அப்போது கோயிலின் சீர்கேட்டைக் கண்டு மனம் வருந்தி உடனே திருப்பணிகளை மேற்கொண்டிருக்கிறான்.

பௌர்ணமி தினத்தில் மேலூர் திருவுடையம்மனை முதலில் இச்சா சக்தியாய் வழிபட்டு, அடுத்து ஞான சக்தியான திருவொற்றியூர் திரிபுரசுந்தரியைத் தரிசித்து, அடுத்து கிரியா சக்தியான திருமுல்லைவாயில் லதாமத்யம்பா எனும் கொடியிடை அம்மனைத் தரிசிப்பதன் மூலம் மூவரின் அருளும் கிடைக்கிறது என பக்தர்கள் கூறுகின்றனர். இந்த மூன்று தேவியரின் திருவுருவச் சிலைகளையும் ஒரே சிற்பிதான் வடித்தாராம். பார்வதி&பரமேஸ்வரர் அச்சிற்பிக்கு வரமருள முன் வந்தபோது, அச்சிற்பியோ, 'எனக்கொன்றும் வேண்டாம். வெள்ளிக்கிழமை அன்று வரும் பௌர்ணமியில் இம்மூன்று தேவியரையும் தரிசிப்பவர்களுக்கு நல்லன தந்தருள வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டாராம். அதன்படி இத்தலம் வருவோரின் குறைகளை சடுதியில் களைந்தருள்கிறார் இத்தல ஈசன். அன்னை திருவுடையம்மனோ, தன் பக்தர்களுக்கு மழலை வரம், திருமண வரம் தருவதில் கருணையை மழையாய் பொழிந்தருள்கிறாள்.

சகல மங்களங்களும் நிலைத்திட திதி நித்யா தேவிகள் ஸ்தோத்திரம்



பகமாலினி

(சுகப்ரசவம் ஆக, கர்ப்பசிதைவு ஏற்படாதிருக்க)

கர்வமாம் குணத்தைப்போக்கி சர்வமும் சிநேக மாக்கி ஆர்வமும் அறிவும் ஊட்டும் பார்புகழ் பகமாலினி தேவி போற்றி.

காமேஸ்வரி

(அனைத்து செயல்களிலும் வெற்றி கிட்டிட)

கஷ்டமெல்லாம் விரட்டி ஓட்டி இஷ்டமெல்லாம் தந்து வாழ்த்தி அஷ்டதிக்கும் நின்று காக்கும் இஷ்ட தேவி காமேஸ்வரி நித்யா போற்றி.

த்வரிதா

(உடல்நலம், கல்வி மேம்பட)

மருந்தென மன்னுயிர் காக்க அருந்திடும் அமுதென ஆகி வரும் திருவருளால் நலமே அருள் அன்னை த்வரிதா தேவியே போற்றி போற்றி.

வஹ்னிவாஸினி

(தொழிலில் மேன்மை அடைய)

வாக்கிலே உறைந்து என்றும் போக்கிலே தவறி லாது காத்து ஆக்கிடும் யாவிலும் வெற்றி தேக் கிடும் வஹ்னிவாஸினி தேவி போற்றி போற்றி.

நித்யக்லின்னா

(நினைத்த செயல்கள் நினைத்தபடி நிறைவுற)

சத்தியம் வன்மை வாக்கு நித்தியம் புகழாம் பெருமை எத்திசையும் போற்ற நல்கும் சக்தி நித்யக்லின்னா போற்றி போற்றி.

சிவதூதி

(உடல்நலம், செல்வவளம், கல்வி அபிவிருத்தி பெற)

பஞ்சமும் பசியும் போக்கி நெஞ்சிலே நிறைந்து நின்று அஞ்சிடா வாழ்வளிக்கும் வஞ்சியே சிவ தூதியே போற்றி போற்றி.

குலஸுந்தரி

அபூர்வ ஸ்லோகம்



(செல்வம், அழகு, உடல் பலம் சிறந்தோங்க)

வலிமையுடன் வன்மை ஞானம் பொலிவுடன் புகழும் கீர்த்தி நலிவிலா யாவுமளிக்கும் கலிதெய்வம் குலஸுந்தரி போற்றி போற்றி.

விஜயா

(தொழில், வியாபாரம், செய்பணி மேலோங்கி, நீடிக்க)

மடைதிறந்த வெள்ளம்போலே தடையெலாம் தகர்த்து ஓட்டி இடைவிடா அருள்மழையை இடையறாதருளும் விஜயா தேவி போற்றி போற்றி.

பேருண்டா

(தீயசக்தி, விஷபயம் தீண்டாதிருக்க)

உலகினை ஆக்கிக் காத்து நிலவுயிர் துன்பம் நீக்கி நலமுடன் நாளும் வாழ்வு நல்கிடும் பேருண்டா தேவி போற்றி போற்றி.

ஜ்வாலாமாலினி

(துயரங்கள் தொலைய, தெய்வ அருள் கிட்ட)

தெளிவிலா மனத்துயர் போக்கி களிப்புடன் நன்மையாக்கி ஒளி திகழ் வாழ்வை யார்க்கும் அளித்திடும் ஜ்வாலாமாலினி தேவி போற்றி போற்றி.

நித்யா நித்யா

(பெரியோரின் கனிந்த ஆசி கிட்ட)

வேகமாய் வந்தே வாழ்வில் சோகமாய் வினைகள் தீர்த்து யோகமாய் யாவும் நல்கும் ஆகமம் போற்றும் நித்யா நித்யா போற்றி போற்றி.

நீலபதாகா

(என்றென்றும் மகிழ்ச்சி நிலைத்திருக்க)

நீள் நில உலகில் வாழ நீடித்த நிம்மதியே தந்து நீங்காத மகிழ்ச்சி சேர்க்கும் நீலபதாகா தேவியே போற்றி போற்றி.

மஹாவஜ்ரேஸ்வரி

(ஞானம் மேம்பட, மன உறுதி வலுப்பெற)

நிறைவான நெறி மாண்பு குறைவிலா கோடி செல்வம் மறைஞானம் கல்விதரும் இறை மஹா வஜ்ரேஸ்வரி தாயே போற்றி போற்றி.

சித்ரா

(எதிர்பாராத யோகம் கிட்ட)

நசித்திட்ட வாழ்வில் செல்வம் புசித்திட தீரா அன்னம் விசித்ரமாக யாவும் சேர்க்கும் சித்ரா தேவி போற்றி போற்றி.

சர்வமங்களா

(சகல ஸௌபாக்யங்களும் கிட்ட)

மங்களம் யாவும் வாழ்வில் தங்கிட அருளே செய்து மக்கட்பேறு நல்கும் கருணை பொங்கிடும் சர்வமங்களா தேவி போற்றி போற்றி.

தொகுத்தவர்: டி.வி.திருநாவுக்கரசு

பாகவதம் காட்டும்

தியாகராமன்



சுகப் பிரம்மம் ஸ்ரீமத் பாகவதத்தில் எம்பெருமான் எடுத்த அவதாரங்களை ஒவ்வொன்றாக விளக்கினார். பரீட்சித் அரசனாக இருப்பதால், “இதோ பார் இவர்களும் ராஜ போகத்தில் உள்ள அரசர்கள்தான். ஆனாலும், கிருஷ்ணனையும், எம்பெருமானையும் எப்படி பக்தி செய்திருக்கிறார்கள் பார். நாடே தனக்கு கீழ்படியுமென்றாலும், என் தலையில் எப்போதும் பெருமாளின் திருவடி என்று பக்தி செய்திருக்கிறார்கள் பார்” என்று சூரிய வம்சத்து அரசர்களின் அகலாத பக்தியை அழகாக சொல்லிக் கொண்டே வந்தார்.

இப்போது ஸ்ரீராமரைபற்றி சொல்லும்போது மட்டும் சுகப்பிரம்மம் கொஞ்சம் தழுதழுத்தார். ராமசரிதம் சொல்லும் தியாக உணர்வும், மனிதனாக வாழ்ந்த தெய்வத்தின் மாண்பும் சுகப் பிரம்மத்தை ஆட்கொண்டன. ஞான மய மான சுகப் பிரம்மத்தையே தியாக மயமான ஸ்ரீ ராமரின் சரிதம் நெக்குருக்கியது. பரீட்சித்துக்கு ராம சரிதத்தில் எதைச் சொன்னாலும் முழுமையாக ராமரின் இருதயத்தை காட்டிவிட முடியுமா என்று தவித்தார். மெல்ல தயங்கினார். தன்னை மீறி ராமா... என்று அவரின் நாமத்தைச் சொன்னார். வாக்குகள் அவரின் திருவாயினின்று

கரைபுரண்டு வந்தன.

"எப்பேற்பட்டவர் ராமர். இறைவன், தான் இறைவன் என்று சொல்லிக்கொண்டு வந்து லீலைகளை நிகழ்த்துவது நம் பாக்கியமல்லவா. மனிதன் தெய்வ நிலையை அடைந்து அங்கேயே நின்று அடியார்களை அணைத்தும், பண்படுத்தியும் பலரை ஆட்கொண்டு கரை யேற்றுவது என்பது புண்ணிய பூமியில் நிகழும் வழக்கம். ஆனால், இறைவன் தன் தெய்வத் தன்மையை முற்றிலும் மறைத்துக் கொண்டு சாதாரண மானிடரைப்போல வாழ்வது என்பது அசாதரணமானது. அதுதான் ஸ்ரீராமாவதாரத்தில் நிகழ்ந்தேறியது." பரீட்சித், ராமருடைய அவதாரம் தியாகத்தைத்தான் சொன்னது. தியாகத்தின் மூலமாக தர்மத்தை உணர்த்தியது. எல்லாவற்றிலும் மேலாக தானே அதை வாழ்ந்தும் காட்டியது. வெறும் ராஜாவல்ல ராமர். அவர் தியாகராஜராக மிளிர்ந்தார். ராஜபோகம் காலுக்கு கீழ் இருந்தாலும், யோகியைப் போல மரவுறிதரித்து கானகம் சென்றார். இப்படிப்பட்ட ராமயோகியை புரிந்து கொள்ள முடிகிறதா, பரீட்சித்.

நாளை விடிந்தால் பட்டாபிஷேகம். ஆனால், முதல் நாள் அழைத்து 'நீ இன்றிலிருந்து பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்ல வேண்டும்' என்றபோது முகம் சுருங்கவில்லையே. மலர்ந்த தாமரையையும் விட பிரகாசத்தோடு அரண்மனையை தாண்டி கானகம் சென்றாரே. இங்கு தந்தை சொன்னால் கேட்பதுதான் மகன் கடமை என்று மகனுக்குரிய தர்மத்தை வாழ்ந்து காட்டினார். அன்னையாக தன்னை வளர்த்த கைகேயின் மனம் கோணக்கூடாது என்று கைகேயியை கருணையோடு பார்த்தார். கானகமென்ன, ராமருக்கு ஒன்றும் புதிதல்ல. விஸ்வாமித்திரரோடு அவரின் தவத்திற்கு காவலாக சென்றிருக்கிறார். ஆனால், இங்கு ராமர் என்கிற மனித தெய்வத்தின் தியாகத்தை பார்க்க வேண்டும்.

தனக்கு இன்னது பிடிக்கும் எனும் தன் ஆவலை மறைத்து, மற்றவர்களுக்கு பிடித்ததை செய்தவரே ராமர். அது சீதையின் விஷயத்திலும் தொடர்ந்ததல்லவா. எல்லா தர்மங்களையும் விட பாகவத தர்மத்தையும் காட்டியவரல்லவா அவர். அதென்ன பாகவத தர்மம். அகலிகை நிஜத்திலேயே அறியாது பாதை மாறியவள். ஆனால், தன் திருவடியின் நிழல்பட்டதினாலேயே சாப விமோசனம் பெற்றாள். இங்கு அவர் காட்டியது சாதாரண தர்மமல்ல. பாகவத தர்மம். ஆனால், சீதாப் பிராட்டி விஷயத்தில் அக்னிப் பிரவேசம் செய்யச் சொன்னார். தன்னைத்தானே மறைத்துக் கொண்டாலும், மதகு உடைந்த ஏரியைப்போல தன்னிலிருந்து கருணை மழையை எல்லோர் மீதும் தெளித்தபடி நகர்ந்தார். சீதையும் அதற்கு கட்டுப்பட்டாள்.

சீதாப் பிராட்டியை காணவில்லையென்று தெரிந்தபோது, மரமே நீ கண்டாயா, மலையே நீ பார்த்தாயா... என்று சாதாரண மனிதனாக வேதனைப்பட்டார். போர்க்களத்தில் எளிதாக வதம் செய்ய வேண்டிய ராவணனை நாளை வா என்று திருப்பியனுப்பிய கருணாமூர்த்திதான் ராமர். யோகிகளுக்கெல்லாம் மகாயோகியான ஸ்ரீமன் நாராயணன் ராமராக அவதரிக்கும்போது, அந்த யோக விஷயங்களையெல்லாம் எனக்கும் சொல்லுங்களேன் என்று வசிஷ்டரிடம் கைகட்டி நின்ற பாங்கு யாருக்கு வரும். யோகவாசிஷ்டம் எனும் அந்த விஷயங்கள் எத்தனை ஆழமானவை.

எங்கேயோ காட்டில் தனக்காக காத்துக் கொண்டிருந்த சபரிக்கு மோட்சம் கிட்ட வேண்டும் என்று ஓடினாரே. விபீஷண சரணாகதியின்போது தானாக விபீஷணனை ஏற்காது அனுமனின் அபிப்ராயத்தை ஏற்றுக் கொண்ட ராஜ விநயம் யாரிடம் பார்க்க முடியும். இறைவனையும், பக்தனையும் இணைத்து வைத்த அனுமனை குருவாக உயர்த்திய மாண்பு ராஜாராமனுக்குத்தான் வரும். யுத்த களத்திலிருந்து மீண்டு ஒருவன் ராவணனிடம் வந்தானாம். ராவணன், நீ மட்டும் எப்படி தப்பித்தாய் என்று கேட்டான். அதற்கு அவன் நான் காலில் கொலுசோடு பெண் வேடமிட்டு வந்தேன். ராமன் என்னை பார்க்கவில்லை என்றானாம். சீதையைத் தவிர வேறொரு பெண்ணை பார்க்காத ஏகபத்தினி விரதனாக விளங்கினார், ராமர்.

ராம எனும் சப்தப் பிரம்மம் அவதாரம் செய்தது. ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியாக வாழ்ந்து காட்டியது. ஸ்ரீமன் நாராயணன் எனும் பிரம்மசக்தி ராம எனும் திருப்பெயரில் உறைந்திருந்தது. எப்படிப் பார்த்தாலும் வைரம் மின்னுவதுபோல ராம நாமமும், ராமரும், அவரின் சரிதமும் ஒன்றே. நாமத்தை பிடித்துக் கொள்ளுங்கள். நாமியை அடைந்து விடலாம் என்பார்கள் பாகவதர்கள். ராம எனும் நாமத்தை பிடித்தால், நாமி எனும் அந்தப் பெயருக்குரிய பிரமாண்டமான அந்த சக்தி அதனிலிருந்து வெளிப்படுவதை உணர்வீர்கள். ஒலியாக விளங்கும் ராம சப்தத்தை நாவால் புரட்டுங்கள். அது உள்ளத்தில் ஊறி அமுத ரசமாக பொங்குவதை உணருங்கள். உங்கள் இதயத்தில் மீண்டும் ராமரின் பட்டாபிஷேகத்தை பார்ப்பீர்கள். அப்போது ராமர் பட்டாபிஷேகம் தனக்காக செய்து கொண்டாரா... இல்லை உங்களுக்காகவா என்பது புரியும்.

சமுத்திரம் போன்றவர் ராமர். சமுத்திரம் கம்பீரமானது. கோதண்டம் தாங்கிய கம்பீர சொருபனும் ராமரே. சமுத்திரத்தை ஆழங்காண முடியாது. ஸ்ரீராமரின் மனதை யாராலும் அளக்க முடியாது. சமுத்திரம் தனக்குள் பல விஷயங்களை வைத்துள்ளது. ராமரும் தன்னுள் எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு அமைதி காத்தார். சமுத்திரம் நீல வர்ணமானது. ராமரும் நீல மயமானவர். சமுத்திரத்தின் எல்லையை அலைகள் அளக்கும். ராமரின் கருணை அலைக்கு அளவே இல்லை. அது எல்லையில்லா கருணைக் கடல். எல்லா நதிகளும் சமுத்திரம் நோக்கி நகரும். நாம் எல்லோருமே ராமரின் திருவடியைத் தேடித்தான் ஓடுகிறோம். சமுத்திரத்தை எதிர்த்து நீந்திவிட முடியுமா, அதுபோல ராமரின் வில்லுக்கு எதிர்வில் இருக்கிறதா... என்று பரீட்சித்திற்கு, ராம காவியத்தின் அமுத ரசத்தை பொழிந்தார்.

– ரமணதாசன்

கிருஷ்ணா சி.எஸ்.ஆறுமுகம்

நாவுக்கரசர் போற்றிய
நல்லூர் நாயகன்

‘மகம் பிறந்தது நல்லூரில். மகாமகம் பிறந்தது கும்பகோணத்தில்,’ என்பார்கள். அத்தனை பெருமைமிக்க நல்லூரில், கிரிசுந்தராம்பாள் சமேத கல்யாண சுந்தரேஸ்வரர் கோயிலை கோச்செங்கட்சோழர் கட்டினார். அவர் எடுப்பித்த எழுபது மாடக்கோயில்களில் திருநல்லூர் மிக முக்கியமானது. சுந்தரமூர்த்தி நாயனார், செங்கணாரின் அடியவனாய் தன்னை பாவித்து “தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கடியேன்” என சோழரைப் போற்றுகிறார். வைணவப் பெருந்தகையான திருமங்கை ஆழ்வார்கூட “எண்டோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்துலக மாண்ட திருக்குலத்துவளச் சோழன்” எனப் பிரபந்தம் பாடி சிறப்பிக்கிறார்.

திருநாவுக்கரசர் நானிலமும் நடந்தார். நாமணக்கும் நாதன் நாமமான நமச்சிவாயத்தை எல்லோர் நாவிலும் நடம்புரிய வைத்தார். தன் நடை தளரும் வயதிலும் கூட உழவாரப் பணியை வழுவாது செய்து வந்தார். திருச்சத்தி முற்றம் அடைந்து ஈசனைக் கண்டு கண்ணீர் சொரிந்தார். சிவக்கொழுந்தீஸ்வரரைக் குழைந்து தழுவிக் கிடக்கும் பெரிய நாயகியைக் கண்டு, தீந்தமிழ்ப்

பாக்களை மாலையாக்கி மகேசனின் பாதத்தில் சமர்ப்பித்து மகிழ்ந்தார். மாலை சூடிய நாயகன், பல்வேறு திருவுருவங்களில் அவருக்கு தரிசனம் அளித்தான். பேரானந்தப் பெருவெள்ளத்தில் அவரை மூழ்க்கினான். ஆனாலும், எங்கோ தீராத ஏக்கம் நாவுக்கரசரின் நெஞ்சை தவிக்க வைத்தது. “கொன்றை சூடிய வேந்தன் தம் நனைந்த திருவடிகளை தேவர்கள் தலையில் வைத்தீராமே” என ஈசனை நோக்கி நெக்குருகினார். அந்த பாக்கியம் எமக்குக் கிடையாதா என ஏங்கி, சத்திமுற்றத்துச் சந்நதியை தம் கண்ணீரால் நனைத்தார். சிவக்கொழுந்தீசனும், ஐயனை குழைவாய் தழுவும் கோலம் கொண்ட உமையும் நாவரசரை குளுமையாகப் பார்த்தனர். அந்நேரம் அசரீரியாய் ‘நல்லூர் வருவாயாக, விரைவாய் வருவாயாக,’ என ஒருமுறைக்கு இருமுறை கட்டியம் கூறுவது போல் பகர்ந்தார் ஈசன்.

திருநல்லூர் திக்கு நோக்கி விரைந்தார் நாவுக்கரசர். சிவத்தொண்டர்கள் நிறைந்த திருநல்லூர் அந்த மகானின் அடி பணிந்து வணங்கியது. திருநல்லூர் நாயகன் கல்யாணசுந்தரேஸ்வரின் முன்பு களிப்போடு அமர்ந்தார். பக்தி கண்ணீராய்ப் பெருக்கெடுக்க, ஈசனைப் பார்த்தார். “கூற்றம் எனும் எமன் வந்து குலைக்கும் முன் பெருமானின் பூவடிகளை என் தலைமீது பொறிக்க மாட்டீரா” என நெகிழ்ந்து கோரினார். நல்லூர் பெருமான் கனிந்தார். உமையன்னையும் உடன் அமர்ந்தாள்.

சட்டென்று ஈசன் லிங்கத்தினின்று ஜோதியாய் கிளர்ந்தெழுந்தான். வீரக்கழல் அணிந்த ஈசனின் திருவடி ஜோதியின் ஒளி பட்டுப் பிரகாசித்தது. நாவுக்கரசரின் முகம் திகைத்து ஒளிர்ந்தது. ‘எம்பெருமானே... எம்பெருமானே’ என நா தழுதழுக்க மெய் சிலிர்த்தார். நெகிழ்ந்து கிடந்த நாவுக்கரசரின் தலையின் மேல் தம் திருவடிகளை மெல்ல ஈசன் பதிக்க பரவசம் பூண்டார் அந்த சிவக் கொழுந்து. புறவுலகின் நினைவை முற்றிலும் இழந்து அகத்தில் பொங்கி ஆர்ப்பரித்த ஈசனின் அருட் சமுத்திரத்தில் கரைந்தார். ஈசன் இன்னும் அழுத்தமாய் சிரம் பதிக்க ஈசனோடு ஏகமாய் கலந்த நிலையில் யாவினுள்ளும் ஈசன் உறைந்திருப்பதை உணர்ந்து குழந்தைபோல தளர் நடை நடந்து சந்நதிக்கு அருகே அமர்ந்தார். உள்ளுக்குள் பெய்த தெய்வீகப் பெருமழையை பாக்களாக மாற்றி

திருப்பதிகங்களாக திருவாய் மலர்ந்தருளினார். ஒவ்வொரு பதிகத்திலும் 'நலம் கிளரும் திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே' என்று தம் சிரசில் ஈசன் சூடிய திருவடியை நினைந்து, நினைந்து நெகிழ்ந்தார்.

அதோடு நாவுக்கரசர் விடவில்லை. நம் மீது கருணை கொண்டவரான அவர், "எம் தலையில் பதித்ததுபோல் உம்மை நாடிவரும் பக்தர்பெருமக்களின் தலையிலும் திருவடி பதிக்க வேண்டுகிறேன்" என வினயமாய் கேட்க ஈசனும் சம்மதமாய் உகந்தான்.

இத்திருநல்லூர் நான்கு ராஜவீதிகளுடன் சப்தசாகரம் எனும் ஏழுகடல் தீர்த்தத்தோடு விளங்குகிறது. ஏழுநிலை மாடத்துடன் கூடிய வானளாவி உயர்ந்து நிற்கிறது ராஜகோபுரம். உட் கோபுர வாயிலுக்குள் சென்று இடது புறம் பார்க்க அமர்நீதிநாயனாரும், கையில் மழலையுடன் அவர் துணைவியாரும் நல்லூர் பெருமானை வந்து தரிசிக்கும் பக்தகளை இனிதே வரவேற்பது போன்ற பாங்கு அற்புதமானது. சிவத்தொண்டர்களுக்கு ஆடை அளித்து, அவர்கள் பசியாற இன்னமுது படைப்பதையே தனது வாழ்க்கையாக்கிக் கொண்ட குடும்பம் அது. நல்லூர் பெருமானும் வேதியர் வடிவில் விளையாடல் புரிந்து தன்னோடு சேர்த்துக் கொண்டார் என்கிறது பெரிய புராணம். இத்தலத்திற்கு பெரும் பெருமை சேர்த்த திவ்ய தம்பதிகளை கைகூப்பி வணங்கிவிட்டு உட்பிரகாரத்தை நோக்கி நகர்வோம்.

சப்தரிஷிகளும் பிரளயத்தின்போது ஒடுங்கும் விதமாக, லிங்கத்தினுள் ஏழு துளைகள் காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாது பிரபஞ்சத்தின் மாற்றத்திற்குக் காரணமாக இத்தல ஈசன் விளங்குவதால், லிங்கத்தின் நிறம் ஆறு நாழிகைக்கு ஒருமுறை மாறுவது பார்க்க, வியப்பு எல்லை மீறும்; உடல் சிலிர்க்கும். நாம் பார்க்கும்போதே அழகாய் நிறம் மாறும் அற்புதம் மனதை கொள்ளை கொள்ளும். தாமிர நிறம், இளம் சிவப்பு, உருக்கிய தங்கம், கரும்பச்சை, இன்ன நிறமென்று சொல்லமுடியாத தோற்றம் என்று காலைமுதல் இரவுவரை தொடர்ச்சியாக வண்ணம் மாறிக்கொண்டே இருக்கும். அதனாலேயே இவரை பஞ்சவர்ணேஸ்வரர் என்றும் அழைக்கிறார்கள். நாவுக்கரசர் ஈசனிடம் வேண்டிக்கொண்டது போல, ஈசனின் திருவடிகளை பக்தர்களின் தலையில் பதித்து ஆசியளிப்பது இங்கு நிரந்தர வழக்கமாக உள்ளது - பெருமாள் கோயிலில் சடாரி கொண்டு ஆசியளிப்பதுபோல! சிவன் சந்நதிக்கு அருகிலேயே மலைமகளான கிரிசுந்தரி அருள் அமுதமாக நிற்கிறாள். உயர்ந்த திருவுருவம் உடைய கிரிசுந்தரி அருளைப் பொழிவதில் மேருவை விட உயர்ந்தவளாய் விளங்குகிறாள்.

நல்லூரின் புகழ் சொல்லும் இன்னொரு விஷயம், இத்தலத்து பிராகாரத்தில் அமைந்துள்ள நல்லூர் அஷ்டபுஜமாகாளி ஆவாள். பிரளயத்தோடு காளிக்கு நெருங்கிய தொடர்பிருப்பதால் இவள் இங்கே அமர்ந்துள்ளாள். காளி என்றாலே கோரமுகமும், ஆவேசமும்தான் நினைவுக்கு வரும். ஆனால், இம் மாகாளி புன்னகை பூக்கும் இனிய நாயகி. மூத்த சுமங்கலி போன்ற மஞ்சள் பூசிய சாந்த முகம் கொண்டவள். ஆக்ரோஷமே இல்லாது அமைதியாய் அமர்ந்திருப்பவள். ஆகவே, மழலைச் செல்வம் இல்லாதவர்கள் காளியை வேண்டிக் கொண்டு, அவளருளால் நிறைசூல் கர்ப்பிணியாக மாகாளி எதிரே அமர்ந்து வளைகாப்பு விழா செய்து கொள்கிறார்கள்.

குந்திதேவி சப்த சாகர தீர்த்தத்தில் நீராடி பூஜித்த லிங்கத்தை கோயிலின் உட்பிராகாரத்தில் காணலாம். இரண்யனை வதம் முடிக்கும் முன்பு, எவ்வுருவம் தாங்கி சம்ஹாரம் செய்வது என்று இத்தலத்து ஈசனிடம் திருமால் யோசனை கேட்க, 'நரசிங்கனாக செல்' என்று ஆசி கூறினாராம் இந்த கல்யாண சுந்தரேஸ்வரர். அதற்கு ஆதாரமாக கருவறை விமானத்தின் பின்புறம் நரசிம்மம் காட்சி அளிக்கும் சிற்பம் இத்தலத்து அற்புதம். இன்னும் தோண்டத் தோண்ட நூறாயிரம் விஷயங்களைக் கொட்டும் கோயில் இது.

கும்பகோணம் - தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் சுந்தரபெருமாள்கோயில் எனும் ஊருக்கு அருகே உள்ளது திருநல்லூர் திருக்கோயில்.

ராமானுஜர் தானுகந்த மேனி

நம்முடனேயே வாழ்கிறார் ஸ்ரீராமானுஜர்!

ராமானுஜர், தான் அவதரித்த இடத்திற்கு எதிரிலேயே தன் தினசரி தரிசனத்துக்காக உருவாக்கினாரோ என்று எண்ண வைப்பது போல அமைந்திருக்கிறது, ஆதிகேசவப் பெருமாள் கோயில். ஊர் ஸ்ரீபெரும்புதூர். சென்னையிலிருந்து சுமார் 50 கி.மீ. தொலைவு. திருவள்ளூர் ரயில் நிலையத்திலிருந்து 20 கி.மீ.

கிழக்கு பார்த்த ஐந்து நிலை ராஜகோபுரம். அதன் படிதொட்டு வணங்கி உள்ளே நுழைந்தால் நெடிதுயர்ந்து, தகதகவென மின்னியபடி நிற்கிறது கொடிமரம். அதனை தரைபணிந்து வணங்கி நிமிர்ந்தால் உயரே சற்றே பெரிய அளவிலான ஆலய மணி. இதைப் பார்க்கும்போதே ராமானுஜர் திருக்கோஷ்டியூர் கோயில் கோபுரத்தின் மீது ஏறி நின்ற கோலம்தான் நினைவுக்கு வருகிறது. அங்கிருந்தபடி ஊர் மக்களையெல்லாம் அழைத்து அனைவரும் நலம் பெறும்படியாக, தான் உபதேசமாகப் பெற்ற மந்திரத்தை, ஆலய மணியோசை போல உச்சரித்த கம்பீரம் நினைவுக்கு வருகிறது. அந்தப் பேரருளாளன் அவதரித்த தலம் இது, அவர் காலடிபட்ட கோயில் இது என்று எண்ணும்போதே, அங்கே பாதம் பதிக்கும் உடல் பக்திப் பரவசத்தால் நடுங்கத்தான் செய்கிறது.

பிராகார சுற்றுச் சுவரில் 108 வைணவத் தலங்களை விவரிக்கும் அழகிய சித்திரங்கள் கண்களையும் மனதையும் ஈர்க்கின்றன. இடது பக்கத்தில் தங்க மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மண்டபத்தில்தான் விசேஷ நாட்களில் ராமானுஜரை கொலுவீற்றிருக்கச் செய்கிறார்கள். குறிப்பாக ராமானுஜர் அவதார உற்சவ திருநாட்களில் அதாவது 2 முதல் 10ம் திருநாள் சாத்துமுறை வரை தினமும் அதிகாலை மஞ்சத்திலிருந்து சுவாமியை புறப்பாடு செய்து இந்த மண்டபத்தில் இருத்தி அன்றன்றைய வைபவத்தைத் துவக்குகிறார்கள்.

இந்த தங்க மண்டபத்துக்கு நேர் எதிரே பூத மண்டபம் உள்ளது. ஒரே கல்லினாலான தூண்கள் என்று அதனை பெரியவர்கள் விவரிக்கும்போது பிரமிப்பு ஏற்படுகிறது. அத்தனை நுண்ணிய கலைநயம் மிக்க தூண்கள் அவை. அந்தத் தூண்களை அடுத்து தனி கருவறையில் ராமானுஜர் கம்பீரமாக எழுந்தருளியிருக்கிறார். இந்த அறைக்கு வெள்ளிக் கதவுகள் மேலும் பொலிவூட்டுகின்றன. அவர், யாரும் யாருக்கும் உயர்ந்தவரில்லை அல்லது தாழ்ந்தவரில்லை என்ற பேருண்மையை பலநூறு வருடங்களுக்கு முன்பே உலகிற்கே வெளிச்சம் போட்டுக் காட்டிய உண்மை, இப்போதைய உலகியலை நினைக்கும்போது சுடத்தான் செய்கிறது. அவர் சந்நதிக்கு முன்னால் நிற்கும் நேரம் வரையிலாவது தனிமனித கர்வம், அகம்பாவமெல்லாம் கரைந்தோடிப்போவது சத்தியம்.

அவருக்கு அருகில், இடது பக்கம், நம்மாழ்வார் சந்நதி. இந்த இரு சந்நதிகளையும் சுற்றி வரும்போது சுவர்களில் ராமானுஜர் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களை தனித்தனியாக ஃபிரேமிட்டு, ஓவியப் பலகைகளாக நிறுவியிருக்கிறார்கள். வலம் வரும்போது ஆண்டாள்

ஸ்ரீதேவி-பூதேவி சமேதராக ஆதிகேசவப் பெருமாள்

சந்நதியைக் காணலாம். இந்த சந்நதிக்கு முன்னால் ஓர் அடுப்பும், சில விறகு கட்டைகளையும் காணும்போது சற்று வியப்பாகவே இருக்கும். அந்த அடுப்பு ராமானுஜருக்காக. ஆமாம், மார்கழி, தை மாதங்களில் ராமானுஜருக்குச் செய்யப்படும் தினசரி திருமஞ்சனத்துக்காக இங்கே வெந்நீர் தயாரித்து எடுத்துச் செல்கிறார்கள். இந்தப் பணியை ஆண்டாள் மேற்பார்வை பார்க்கிறாள்! 120 வயதுவரை வாழ்ந்த ராமானுஜர் இன்றும் நம்முடனேயே வாழ்கிறார் என்ற யதார்த்த உண்மையை இதுபோன்ற செயல்முறைகளால் நிரூபிக்கிறார்கள். வெந்நீர் நீராட்டல் மட்டுமல்ல, இந்தக் குளிர்க் காலங்களில் அவருக்குத் தொப்பி அணிவித்து, சால்வை, ரஸாய் போர்த்தி அவருக்கு இதமளிக்கிறார்கள். இந்த நடவடிக்கை மூலமாக, அவரை தரிசிக்க வரும் பக்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் வயதானவர்களை, பிறர் எப்படி பாசத்துடன் பராமரிக்க வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகிறார்கள்!

பிற பத்து மாதங்களிலும் அவருக்கு கோயிலின் அனந்தசரஸ் தீர்த்தத்திலிருந்து எடுத்துவரப்படும் நீரால் திருமஞ்சனம் செய்விக்கிறார்கள். பூதங்கள் தாங்கள் சாப விமோசனம் பெற இத்தலத்திற்கு வந்தபோது அவர்களுக்காக ஆதிசேஷன் உருவாக்கிய தீர்த்தம் இது. இத் திருக்குளத்தில் நீராடி ஆதிகேசவப் பெருமாளை வழிபட்ட பின்னர் அந்த பூதங்களுக்கு விமோசனம் கிடைத்ததாம். அதனாலேயே இந்தத் தலம் ‘பூதபுரி’ என்றும், பிறகு மருவி ‘ஸ்ரீபெரும்புதூர்’ என்றானதாகவும் சொல்கிறார்கள்.

ஹரிதன் என்ற அரசன் கொடிய மிருகங்களை வேட்டையாடச் சென்றபோது, சாதுவான ஒரு பசுவைக் கொல்ல நேர்ந்தது. அதனால் தோஷம் பீடிக்கப்பட்ட அவன், அதற்கு பிராயசித்தம் செய்ய இந்த பூதபுரிக்கு வந்து சேர்ந்தான். அவனுக்கு நாராயணன் ஆதிகேசவப் பெருமாளாக தரிசனம் தந்ததோடு, அந்தத் தலத்திலேயே ராமானுஜர் என்ற மகா புண்ணிய ஆத்மா ஒன்று அவதரிக்கும் என்றும் எடுத்துக் கூறினாராம். அங்கேயே வைகானஸ சாஸ்திரப்படி பஞ்சபேர விதானத்தை பிரதிஷ்டை செய்து கேசவப் பெருமாளுக்காக கோயிலும் நிர்மாணித்தானாம் ஹரிதன்.

ராமானுஜர் சந்நதியைச் சுற்றி வரும்போது அவருடைய சீடரான மணவாள மாமுனிகளின்

ஸ்ரீதேவி-பெருமாள்-பூதேவி-ராமானுஜர்

சிற்பம் ஒரு அகன்ற தூணில் வடிவமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம். இங்கேதான் அவர், தம் சீடர்களுக்கு ராமானுஜரைப் பற்றியும் அவருடைய கீர்த்திகளையும் விரிவாக எடுத்துச் சொன்னார். தினமும் இந்த மூலையில் விளக்கேற்றி வைத்து இன்றும் அவர் விவரிப்பதை மானசீகமாக உணரும்படி செய்திருக்கிறார்கள். இந்த மணவாள மாமுனிக்கு, வெளியே தனியே ஓர் கோயிலும் உள்ளது.

ராமானுஜர் சந்நதியை வலம் வந்து பக்கவாட்டில் திரும்பினால் ஆதிகேசவப் பெருமாள், ஸ்ரீதேவி-பூதேவியுடன் தரிசனம் தருகிறார். 'என் புகழ் விளங்க வைத்த, வைணவ நம்பிக்கைகளை உலகெங்கும் பரப்பிய என் இனிய பக்தன், இதோ என்னருகிலேயே இருக்கிறான்' என்று பெருமை பொங்கும் விழிகளுடன் நம்மைப் பார்க்கிறார். இவருக்கு வலதுபுறத்தில் நம்மாழ்வார் மதுரகவிகள், நாதமுனிகளுடன் சேவை சாதிக்கிறார்.

பிராகார வலம் வரும்போது அன்னை எதிராஜ நாகவல்லி தாயார் அருள் பெருக்கும் விழிகளுடன் நம் துயரெல்லாம் கரைக்கும் தாய்மை பொங்க தரிசனம் தருகிறாள். நான்கு திருக்கரங்களுடன் அருள்பாலிக்கும் அன்னையும் இத்தலத்தில் ராமானுஜ அவதாரத்தைப் பெருமைப் புன்னகையுடன் அங்கீகரிக்கிறாள். அருகிலேயே ராமருக்கு தனி சந்நதி. இவருக்கு முன்னால், கோயிலுக்கு வடப்புறத்தில் ஒய்யாளி சேவை மண்டபம் விளங்குகிறது. வடகிழக்கு மூலையில் கண்ணாடி அறையும் யாகசாலையும் உள்ளன. அன்னை கருவறைக்கு முன்னால் காயத்ரி மண்டபம் தனிச் சிறப்புடன் விளங்குகிறது. கோயிலுக்கு எதிரே 100 கால் மண்டபம். அதனுள் சென்றால் ராமானுஜர் அவதார இடத்தைக் காணலாம். இந்த மண்டபத்துக்குப் பக்கத்தில் கூரத்தாழ்வான் சந்நதி. பக்கத்திலேயே சிறிய கோபுரத்துடன் மணவாள மாமுனிகளுக்குக் கோயில் இருக்கிறது. இக்கோயிலுக்குள் லோகாச்சார்யார் சந்நதியும் மண்ணளந்த பெருமாள் சந்நதியும் உள்ளன. மண்ணளந்த பெருமாள் சந்நதிக்கு முன்னால்தான் ராமானுஜர் அட்சராப்பியாசம் மேற்கொண்டிருந்தாராம்.

அவதார வீட்டில்
பளிங்கு ராமானுஜர்

இந்தத் திருத்தலத்தை விட்டு நீங்கிய பின்னும் ராமானுஜரின் பொதுஉடைமை தத்துவம் நெடுநேரம் மனதை விட்டு நீங்காது நிலைத்திருப்பது மட்டும் நிஜம்.

- தாரா சந்திரசேகர்

ஆனந்தசரஸ் தீர்த்தம்

பரணிகுமார்

விநாயகர் தகவல்கள்



- வேலூர் கோட்டை ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தில் விநாயகர் குழந்தை வடிவில் அருள் புரிகிறார். இவரை குழந்தை விநாயகர் என்று அழைக்கிறார்கள்.
- திருவாரூருக்கு அருகில் திருநாட்டியத் தான்குடி என்ற ஊரில் உள்ள கோயிலில் அருள் புரியும் பிள்ளையாருக்கு கைகாட்டி விநாயகர் என்று பெயர்.
- புதுக்கோட்டை மாவட்டம் திருவேங்கை வாசல் கோயிலில் விநாயகப் பெருமான் கையில் மாம்பழம் ஏந்தியவாறு காட்சி தருகிறார். இவரை மாங்கனி விநாயகர் என்பர்.
- சாதாரணமாக விநாயகர் திருக்கரங்களில் பாசமும், அங்குசமும் இருப்பதைக் காணலாம். திருப்பாதிரிபுலியூரில் உள்ள பாடலீஸ்வரர் கோயிலில் விநாயகர் பாதிரி மலர்களை தாங்கியுள்ளார்.
- காளை வாகனத்தில் அருள் புரியும் விநாயகரை திருநெல்வேலி அம்மையப்பவிநாயகர் ஆலயத்திலும், ராஜபாளையம் உமாமகேஸ்வரர் ஆலயத்திலும் தரிசிக்கலாம்.
- திருச்செந்தூர் அரசாளும் விநாயகரும், ஸ்ரீவில்லிபுத்தூர் மடவார் விளாகம் கல்யாண விநாயகரும் யானை வாகனத்தில் வீற்றிருக்கின்றனர்.
- திருவானைக்காவல் கோயிலில் காணப்படும் ஓர் ஓவியத்தில் மயில் வாகனத்தில் அமர்ந்தபடி காட்சியளிக்கிறார் கணபதி.
- சிம்ம வாகனத்தில் ஐந்து முகங்களுடன் அருள்புரியும் ஹேரம்ப கணபதியை சென்னை திருவொற்றியூர் வடிவுடையம்மன் ஆலய வாயிலில் உள்ள தட்சிணாமூர்த்தி கோயிலில் தரிசிக்கலாம்.

குறைவில்லா வாழ்வு தருவார்
குற்றால நாதர்

"நாட்பலவுஞ் சேர்மதியஞ் சூடிப் பொடியணிந்த நம்பான் நம்மை
ஆட்பலவுந் தானுடைய அம்மா னிடம்போலு மந்தண் சாரல்
கீட்பலவுங் கீண்டு கிளைகிளையன் மந்திபாய்ந் துண்டு விண்ட
கோட்பலவின் தீங்கனியை மாக்கடுவ னுண்டுகளுங் குறும்ப லாவே"

இவ்வாறு திருக்குற்றாலத்தில் அருள்பாலிக்கும் குறும்பலாநாதராக காட்சி தரும் இறைவனைப் பாடி வணங்குகிறார் திருஞானசம்பந்தர்.

திருக்குற்றாலத்தில்தான் தலவிருட்சமாக பலா மரம் வணங்கப்படுகிறது. வேதங்கள் என்றைக்கும் நிலைத்து நிற்க வேண்டும். அழியாமல் இருக்க வேண்டும் என்பதற்காக வேதங்கள் அனைத்தும் திருக்குற்றாலத்தில் செண்பக மரங்கள் அடர்ந்த வனப்பகுதிக்கு வந்து பலா மரங்களாக இருந்து இறைவனை நோக்கி தவமிருந்தன. இறைவனின்



கருணையால் நான்காக இருந்த வேதங்கள் அனைத்தும் ஒரே பலா மரமாக மாறின.

பிரணவம் பலா மரத்தின் வேராகவும். பாகை இரண்டு கவடாகவும், சுருதி கிளைகளாவும் மாறி இறைவனை வணங்கியதாக கூறப்படுகிறது. இந்த பலா மரம் இன்றைக்கும் திருக்குற்றாலநாதர் கோயில் அம்பாள் சந்நதியின் அருகில் உள்ளது. இதனடியிலும் சிவலிங்கம் உள்ளது. இந்த பலா மரத்தில் பழுக்கும் பலா கனிகளை யாரும் பறிப்பதில்லை. பலா சுளைகளை பார்ப்பதற்கு சிவலிங்கம் போல் தோற்றம் அளிக்கும். இந்த பலா மரத்தில் உள்ள பலாப்பழங்களை குரங்குகள் பறித்து கீறி தின்னும்போது அதில் இருந்து வடியும் தேன் மரத்தடியில் உள்ள சிவலிங்கத்தின் மேல் பட்டு சிதறும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குற்றாலம் மிகவும் பழமைவாய்ந்த தலங்களில் ஒன்றாகும். பாடல் பெற்றத் தலமாகவும் உள்ளது. இத்தலம் திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் இயற்கை சூழ்ந்த மலையும், அருவிகளும் நிறைந்த பசுமை மாறா பகுதியில் அமையப்பெற்ற அற்புதமான திருத்தலமாகும்.

இத்தலத்தில் திருமால் வடிவிலிருந்த மூர்த்தியை அகத்தியர் சிவலிங்கமாக மாற்றினார் என்பது பக்தர்களின் தொன்மையான நம்பிக்கை. அதை நிரூபிக்கும் விதமாக அகத்திய முனிவர் திருமாலை சிவனாக்குவதற்காக தன் கைகளால் தொட்டதால் சிவலிங்கத்தின் தலைப்பாகத்தில் ஐந்து விரல்களும் பதிந்த வடு உள்ளது.

அகத்திய முனிவர் தொட்டு அமுக்கியதால் உண்டான தலைவலி நீங்கவே இன்றும் சிவலிங்கத்திற்கு தைல அபிஷேகம் நடைபெறுகின்றது. இறைவனுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட மகா சந்தனாதித்தைலம் கோயில் அலுவலகத்தில் விற்பனை செய்யப்படுகின்றது. இது பல மூலிகைகைகள், வேர்கள் மற்றும் மருந்துகள் சேர்த்து மருத்துவ முறைப்படி பக்குவமாக காய்ச்சப்படுகின்றது. இது தலைவலி, வயிற்றுவலி சயரோகம் முதலான கொடிய நோய் தீர்க்கும் மருந்தாக பயன்படுகின்றது.

இக்கோயில் மற்ற சிவன் கோயில்களைப் போல சதுரம் அல்லது நீண்டசதுரமாக அமையவில்லை. சங்கு வடிவில் அமைந்து இருப்பது இக்கோயிலின் தனிச்சிறப்பாகும்.

சிவ தலங்களுள் பஞ்ச சபைகளில் சித்திர சபை எனப்படும் சிறப்பை இத்தலம் பெற்றுள்ளது. இத்தலத்தில் உள்ள இறைவனைப் பற்றி மாணிக்கவாசகர் பாடியிருப்பதன் மூலம் இத்தலம் மூன்றாம் நூற்றாண்டுக்கு முந்தைய தொன்மைவாய்ந்த கோயில்களில் ஒன்றாக உள்ளது.

“உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.”

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில்

திருக்குற்றாலநாதரை பற்றி பாடியிருக்கிறார்.

**“காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே மேவிழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலந் தானையே கூறு”**

என்று பட்டினத்தடிகள் பாடி இறைவனின் அருள்பெற்றுள்ளார்.

குற்றாலநாதர் மூலவரின் வடதிசையில் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான தரணிபீடம் எனப்படும் பராசக்தி பீடம் உள்ளது. இது சிவனின் மந்திர சக்திகள் அடங்கிய ஆலயம். இங்கு பராசக்தி அரி, அயன், அரன் மூவரையும் குழந்தையாக பாவித்தாள். அம்பாளின் சந்நிதானத்தில் தானுமாலயப் பூந்தொட்டில் ஆடிக்கொண்டே இருக்கிறது.

கயிலையில் அன்னை பார்வதி தேவியுடன் சிவபெருமானின் திருக்கல்யாணத்தை காண்பதற்காக பிரம்மா, மகா விஷ்ணு மற்றும் முப்பத்து முக்கோடி தேவர்களும், பூத கணங்களும் அனைவரும் கைலாய மலையில் குவிந்தனர். இதனால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயந்தது. இதை சரிசெய்வதற்காக யாரை அனுப்பிவைக்கலாம் என இறைவன் நினைத்தபோது அவர் மனக்கண் முன் வந்தவர் அகத்தியர். உடனே இறைவன் அகத்தியரை அழைத்து தென்திசைக்கு சென்று வடதிசைக்கு சமமான பொதிகை மலைக்கு செல்லும்படி உத்தரவிட்டார்.

இறைவனின் உத்தரவை கேட்டதும் அகத்தியர் இறைவனின் திருக்கல்யாணத்தையும், திருநடன காட்சியையும் காண முடியாதே என மனம் வருந்தினார். அகத்தியரின் மனக்கலக்கத்தை அறிந்த இறைவன் திருக்குற்றால மலையின் மகிமைகளை எடுத்துரைத்து அங்கு விஷ்ணுவாக இருக்கும் தம்மை சிவலிங்கமாக்கி பூஜை செய்து வழிபடும்போது தனது கல்யாண திருக்காட்சியையும், நடனத்தையும் கானலாம் என்று ஆறுதல்கூறி அகத்தியரை அனுப்பி வைத்தார்.

அகத்தியரும் இறைவனின் கட்டளையின் தன் தலைமேல் ஏற்று தென்திசை நோக்கி புறப்பட்டார். அவர் சென்ற இடமெல்லாம் பல அற்புதங்களை நிகழ்த்தி விட்டு பொதிகை மலையில் வைணவர் வேடம் பூண்டு கோயிலுக்குள் சென்று விஷ்ணுவை வேதமந்திரத்தால் சிவலிங்கமாக்கி வழிபட்டார். அன்று முதல் இக்கோயில் சிவதலமாக உள்ளது என்பது புராண வரலாறு கூறுகின்றது.

வைணவர்கள் விஷ்ணு மூர்த்தியை காணாது திகைத்து அகத்தியரை நிந்தித்தனர். முனிவர் அவர்களிடம் கோயிலின் தென்மேற்கு மூலையில் வைத்து பூஜை செய்யுங்கள் அரியும் சிவனும் ஒன்றே வேறுபாடு காட்டாதீர்கள் என விளக்கம் அளித்தார்.

Aanmiga palan April 16-30 , 2020 Registered with the Registrar of Newspaper for India under No..RNI Regn. No. TNTAM/2012/53345
Date of Publishing: 1st and 16 th of Every month.